190

வசந்தம்

JL
811, N42VM
N47.6-6
197256

ANNOUNCING

THE

NEW INDIA ASSURANCE CO.,

LIMITED.

(H. O. BOMBAY)

Have much pleasure in announcing

HAVING COMPLETED
A NEW BUSINESS (LIFE) OF

Rs. 12,39,71,956 in 1946

Against a New Business of

Rs. 8,38,31,700 in 1945

Thus Registering an increase of
NEARLY 50 PER CENT

During this Year The Company has plans for an intensive organisation in the City & Districts undeveloped.

APPLICATIONS FROM PERSONS OF RECOGNISED ORGANISING ABILITY WILL BE CONSIDERED.

Apply to :

MADRAS BRANCH,
4 & 5, First Line Beach.

K. GANAPATHI,
Branch Manager.


நம் நாட்டுத் தொழிலை
ஆதரியுங்கள்
மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்
R. K. ஷண்முகம் செட்டி
அண்டு பிரதர்ஸ்.
நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை,
முறுக்கு, காரம் சல்வை நூல்
தயாரிக்கிறோம்.
எல்லாவிதமான ஜவுளி
ரகங்களும்:
வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்
தயாரிக்கிறோம்.
எங்களுடைய வி 116 நெ. லாங்கிளாத்
மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை
எங்களுடையதே.
வசந்தா மில்ஸ் லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனி மலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரியமலர்களின் நறுமணம் போன்றுகளைப்பாற்றுவதுமான

டாடா ஓ-டி-கோலோன்

உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப்பண்ணுவதற்காயினும் சரி உகந்தது.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா :

நெ. 4/117 திருச்சிரோடு : : கோயமுத்தூர்.

செப்டம்பர்
26உ முதல்
சென்னை
ஸ்டார் டாக்கீஸிலும்
மற்றும் அநேக
நகரங்களிலும்
ஆரம்பமாகிறது
ஜெமினியின்
மிஸ்
மாலினி
மகிழ்ச்சியை கொடுக்கவல்ல
உன்னத சித்திரம்..
தயாரிப்பு: ராம்நாத்
டைரக்ஷன்: சுப்பு
புஷ்பவல்லி - சுந்தரிபாய்
சுப்பு - நாராயணராவ்
நடித்தது

தோஷமற்ற உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பெனி.

24/25, சைனு பஜார் : : மதராஸ்

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி	...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினுய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸ்ர்ஸ, பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,

நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென் இந்தியாவில் எல்லா முக்கிய மான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. 72,00,000

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 53,00,000

ரிஸர்வ் நிதி ... ரூ. 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.

IBN/10 செக்ரெடரி.

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

புதுயுக நிலையம், புதுச்சேரி

யோகி சுத்தானந்தர் தமது வாழ்வை அரவிந்தாசிரமத்துடன் ஐக்கியப்படுத்தி விட்டதால், தமது நூல்களை இனி இங்கேயே வெளியிட நல்ல ஏற்பாடு செய்திருக்கிறார். இதுகாறும் புதுயுக நிலையத்திலிருந்து வெளிவந்த நூல்களாவன. எல்லாம் மானுடைப் பதிப்புகள்.

1. The Gospel of Perfect Life — Yoga Siddhi. 3—8
2. YOGI SHUDDHANANDA BARATHI— by Dewan Bahdur K. S. Ramaswami Sastriar 4—0

ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் 2—8

பகவத் கீதை 1—4

அன்னை 1—4

அச்சிலுள்ளவை.

ஏழைபடும்பாடு. அரியநாவல்.

கவிக் கனவுகள்

மானேஜர், புதுயுக நிலையம், புதுச்சேரி.

ஒரு போதும் தவறாத நேர் வழி

புண்

புரையோடாமல் தடுத்து
குணப்படுத்தும் ஔஷதம்

தயாரிப்பவர்கள் :-

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்

தபால் பெட்டி நெ. 67 : : மதராஸ்.

DJK 25

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

வசந்தம்

பொருளடக்கம்

மலர் 6	சர்வஜித் ௵ புரட்டாசி ௴	இதழ் 6

இந்த இதழில்	...	... ...	... 1
எது வேண்டும்?	...	ரா. நா	... 2
நாட்டுப் பாடல்கள்	...	கே. விஜயராகவன்	... 4
பெண் வாழ்வு	...	அ. கிருஷ்ணசாமி நாயுடு	... 8
அறிஞர் வெல்ஸ்	...	'வில்லன்'	... 13
கோரிக்கை!	...	அப்துல் சத்தார்	... 17
அசோகன் கனவு	...	'துஷ்யந்தன்'	... 24
இழந்த வின்	...	ரா. பு. தங்கராசன்	... 30
ஸ்ரீகாந்தன்	...	ஆர். ஷண்முகசுந்தரம்	... 33
மயிலைக்காளை	...	'சேது'	... 40
பருந்து பேசுகிறது	...	டி. ஒ. வீரப்பன்	... 42
நெஞ்ச அரங்கிலே...	...	அரு. பாபநாசம்	... 44
காற்றலைகளும் இசையும்	...	ஆர். கே. விசுவநாதன்	... 53
ஸிதார்	...	'ரத்னபானு'	... 57
புதிய தமிழுலகம்	...	சுத்தானந்த பாரதி	... 67
புத்தக ஆராய்ச்சி	...	'உமாபதி'	... 70
மல்லிகை மொக்கு	...	தா. தாகலிங்கம்	... 73
ராக்காச்சி	...	கே. வி. துரைசாமி ராஜா	... 79
கலைக் கடிதம்	...	நடராசன்	... 87

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP" Coimbatore.

★

அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்லின், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AV I

★

இந்த இதழில்

அட்டைப் படம்

அழகான கிராமியக் கதைகள் எழுதுவதில் கே. வி. துரைசாமிராஜா கை தேர்ந்தவர். அவர் இந்த இதழில் எழுதியிருக்கும் 'ராக்காச்சி' என்ற கதையில் வரும் ஒரு கட்டம்தான் இந்த இதழின் அட்டைப் படமாக விளங்கி நம் கண்ணையும் கருத்தையும் அள்ளுகின்றது.

சரத்சந்திர சட்டர்ஜி இந்தியாவின் புகழ் பெற்ற நாவலாசிரியர். அவருடைய மற்ற எல்லா நாவல்களையும்விட ரொம்பவும் சிறந்ததும் மகாகவி தாகூர் முதலிய கலைஞர்கள் பெரிதும் பாராட்டியுள்ளதுமான "ஸ்ரீகாந்தன்" இந்த இதழில் ஆரம்பமாகின்றது. சரத்சந்திரரின் முக்கிய நாவல்களையெல்லாம் தமிழில் தந்த ஆர். ஷண்முகசுந்தரம் அவர்களே இந்த 'ஸ்ரீகாந்தனையும்' மொழிபெயர்த்து 'வசந்த'த்துக்கு உதவியிருக்கிறார்கள்.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் 'புதிய தமிழுலக'க் கட்டுரைகளை அன்பர்கள் இனித் தொடர்ந்து சுவைக்கலாம்.

197256

எது வேண்டும்?

[ரா. நா.]

அவசரமாக விவாகம் செய்து கொண்டு நிதானமாக வருந்துகிறவர்கள் எண்ணிக்கை பிரிட்டனில் பெருகி வருகிறது என்று சமூக சேவை செய்பவர்கள் கவலைப்படுகிறார்கள். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஐவரில் ஒருவர் விவாகரத்து கோருகின்றார் என்று கூறுகின்றனர் புள்ளி விவரம் சேகரிக்கும் நிபுணர்கள். இந்த விபரீதம் யுத்தத்தின் விளைவு என்றும் கூறி விடுவதற்கில்லை என்று கருதுகின்றனர் ஆராய்ச்சிக்காரர்கள். இந்த நிலை மாறி இல்லற வாழ்க்கையில் இன்பம் காணுவதற்கு வழி என்ன என்பதைச் சில காலமாக பிரிட்டனில் சிந்தித்து வந்தனர். சிந்தனையின் விளைவாக ஒரு வழியும் கண்டுபிடித்திருக்கின்றனர். திருப்திகரமான இல்லற வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்யும் சங்கம் ஒன்று நிறுவியிருக்கின்றனர்.

மண வாழ்க்கை விரும்புகிற ஆணாயினும், பெண்ணாயினும் இந்தச் சங்கத்திற்கு மனுச் செய்து கொள்ள வேண்டும். அந்த மனுவில் மனுதாரரின் வயது, உயரம், குறிப்பிடத்தக்க அம்சங்கள், வருவாய், அந்தஸ்து முதலியவைகளைக் குறிப்பிட்டுவிட்டு அவர் விரும்பும் துணைவரிடத்தில் எதிர்பார்க்கும் குணாதிசயங்கள் யாவை என்பதையும் விவரிக்க வேண்டும். சங்க நிர்வாகிகள் மனுக்களை ஆராய்ந்து ஒவ்வொரு மனுதாரருக்கேற்ற ஜோடியைச் சேர்த்து இருவரையும் சந்திக்கச் செய்கிறார்கள். சந்திப்பினால் பரஸ்பர ஒற்றுமை ஏற்பட்டால் அவ்விருவரும் ஆறு மாத காலம் பொறுத்திருக்க வேண்டும். ஆறு மாதம் அன்பு தளராதிருந்தால் சங்கத்தினர் மணம் செய்து வைக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

மேற்படி சங்கத்தார் தங்களிடம் வரும் மனுக்களைப் பரிசீலனை செய்து அதில் காணும் பொதுவான ஒரு விஷயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆண்கள் பெரிதும் துணைவிகளின் அங்க லட்சணம், முக வசீகரத்தையே விரும்புகிறார்களாம். பெண்கள் தங்களைக் கவலையின்றி ரட்சிக்கக் கூடிய கணவர்களையே விரும்புகிறார்கள். ஆண்கள் விரும்புவது அழகு; பெண்கள் விரும்புவது வாழ்க்கையில் நிம்மதி. ஆண்களைவிட பெண்கள் புத்திசாலிகளாயிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. அநித்யமான அழகு அழிந்தவுடன் புது அழகு தேடி அலைகிறார்கள் ஆண்கள். நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் பெண்களே பெரிதும் ஒழுக்க சீலர்களாயிருப்பதற்குக் காரணம் வாழ்க்கையின் அடிப்படையை

அறிந்து அவர்கள் வாழ்வதுதான். தனாதிபதியாக இருக்கும் ஆடவன் கெட்டலைந்து குட்டிச் சுவராகப் போவதற்குக் காரணம் அவன் அழகை நாடி அலைவதுதான்.

ஆண்கள் அவலட்சணத்தை அணைத்துக் கொள்ள வேண்டும் என யாரும் கூறவில்லை. ஆனால் வாழ்க்கை முழுவதும், சுகத்திலும் துக்கத்திலும் தன்னுடன் வாழ வேண்டிய துணைவியிடம் குணத்தைத்தான் பிரதானமாக ஆடவர்கள் கருத வேண்டும். பணம், அழகு இரண்டிற்கும் பிரதானமளிக்காமல் தன் துணைவியைத் தேடி மண வாழ்க்கையை மேற்கொண்டால் இல்லற வாழ்வு நூற்றுக்குத் தொண்ணூறு திருப்திகரமாக அமைந்து விடும்.

நம் நாட்டில் இல்லற வாழ்க்கை இணைப்புச் சங்கம் ஏற்பட்டால் அது உருப்படியான சேவை செய்ய முடியுமா எனக் கேட்கலாம். முடியும் என்றே எண்ணுகிறேன். கலியாணத் தரகர்கள் பல பொய்களைச் சொல்லி காசைப் பறித்து கலியாணங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இவைகளில் பெரும்பாலான விவாகங்கள் துக்ககரமாக முடிவதில் ஆச்சரியம் இல்லை. பெற்றோர்கள் ஜாதகங்களை எடுத்துக் கொண்டு ஊருராக அலைந்து கடைசி முகூர்த்தத்தில் அகப்பட்டவன் கையில் ஸ்திரி ரத்தினங்களை ஒப்புவிக்கும் தவறு நீங்க வேண்டும்.

பிரிட்டனில் நான் முதலில் குறிப்பிட்ட சங்கத்தை நடத்துபவர்கள் சமூக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை கொண்டவர்கள். அம்மாதிரி சேவை ஆர்வம் கொண்டவர்கள் நம் நாட்டில் இல்லாமற் போய்விடவில்லை. அப்படிப்பட்டவர்கள் ஒன்று கூடி ஏற்றாற்போல் தம்பதிகளைச் சேர்க்கும் புனித கைங்கரியத்தில் ஈடுபட்டால் அதன் நற்பயனை ஒரே தலைமுறையில் நாம் கண்கூடாகக் காண்போம்.

நாட்டுப் பாடல்

கே. விஜயராகவன்

எங்கள் ஊரைச் சுற்றி இயற்கை அழகு நிறைந்திருக்கிறது. ஆடுமாடுகளை மேயவிட்டபின், பண்டமேய்க்கும் சிறுவர்கள் மரக் கிளைகளில் உட்கார்ந்துகொண்டே காலாட்டிக் கொண்டு பாடத் தொடங்கி விடுவார்கள்.

உயரக் கிளைகளில் உட்கார்ந்து கொண்டிருப்பதால், தூரத்தில் பழனிமலைக்குச் செல்லும் பக்தர்களுடைய இனிய 'அரஹரா' கோஷமும் 'கிண் கிணி' நாதமும் அவர்களுக்கு நன்கு கேட்கும். பக்தர்கள் கானத்தைக் கேட்டதும் இவர்களும் எதிர்ப்பாட்டுப் பாடுவார்கள்.

பக்தர்கள் :

மலைக்குள் மலை நடுவே
மலையாள தேசமப்பா
மலையாள தேசம் விட்டு
மயிலேறி வருவாயிப் போ

அரஹர - அரஹர - அரோஹரா

எருத மலையேறி
எருதுரெண்டும் தத்தளிக்க
பாராமல் கைகொடுப்பாய்
பழனிமலை வேலவனே

அரஹர - அஹர - அரோஹரா.

சிறுவர்கள் :

எருக்கலைக்குத் தண்ணி கட்டி
எத்தனைபூப் பூத்தாலும்
மருக்கொழுந்து வாசமுண்டோ
மலைப்பழனி வேலவனே.

கொங்குநாட்டில் பூப்பறிக்கும் பண்டிகையை விசேஷமாகக் கொண்டாடுவார்கள். மார்கழி மாதத்திலிருந்தே இளம் பெண்கள் பூ எடுக்கவும் ஆரம்பித்து விடுவார்கள். தை நோன்பன்று அவர்கள் ஓலைக் கூடைகளில் பூக்களை நிரப்பி, சாணிப் பிள்ளையாரையும் எடுத்துக்

கொண்டு நீரில் விட்டு வரச் செல்லுவார்கள். சிறுமிகள் நீரில் விளையாடுவதையும் பின்வரும் பாடல்களில் காணலாம்.

பூப் பறிக்கிறதும் இண்ணைக்குத்தான்
பொட்டியிலே போடறதும் இண்ணைக்குத்தான்
சாயங் கட்டறதும் இண்ணைக்குத்தான்
சம்பாக் குத்தறதும் இண்ணைக்குத்தான்

[வேறு]

சிந்தாமெச் சிதருமெ
சேத்தி வைச்ச புள்ளாரே
சித்தாத்துத் தண்ணீலே
சீராடிப் போருயே"

வாயைக் கட்டி வகுத்தைக் கட்டி
வளத்துனமே புள்ளாரே
வாய்க்காலுத் தண்ணீலே
வழி நெடுகப் போருயே.

வாழ்க்கையோடு இயற்கை எவ்வளவு தூரம் இசைந்து நிற்கிறது என்பதைப் பின்வரும் பாட்டு விளக்குகிறது. ஒரு தாய் தன் மகளை எண்ணி இரங்குவதாக கருத்தமைந்த பாட்டு இது.

பூத்த மரத்தடியில் - என்
பொன்னு குறை சொல்லி விட்டால்
பூத்த மரம் இரங்கும் - அது
பூமாறி நின்றுவிடும்

தளிர்த்த மரத்தடியில் - என்
தங்கா குறை சொல்லி விட்டால்
தளிர்த்த மர மிரங்கும் - அது
தளிர் மாறி நின்று விடும்

காய்த்த மரத்தடியில் - என்
கன்னி குறை சொல்லி விட்டால்
காய்ந்த மர மிரங்கும் - அது
காய்மாறி நின்றுவிடும்.

இன்னொரு சோகக் காட்சி......

கூந்தப் பனையோலே
குயிலணையும் பொன்னோலே

மாந்தப் பனே சரிஞ்சா
மயில் போயி எங்கனையும்.

நிலா மலர்ந்த இரவில், கிராமத்தின் அமைதிக்கு அழகு தருவது போல் எட்டாக் கையில் செல்லும் பார வண்டிகளில் பாதிக் கண் அயர்ந்தபடியே, சாட்டையைச் சொடுக்கிக் கொண்டே வண்டிக்காரர்கள் தெம்மாங்கு இசைப்பார்கள். சில சமயம் அது அர்த்தம் ஆகாது. அர்த்தம் புரியாவிட்டாலும் அந்தப் பாடல்களில் பின்வரும் சில அடிகள் நம் நெஞ்சை நெகிழ்விக்கின்றன.

நாலு மூலே வயலுக்குள்ளே
ஏலே லங்கிடி அன்னமே
நாத்து நடும் கூளப் பொண்ணு
ஏலே லங்கிடி அன்னமே
ஒழுங் கொழுங்கா மூங்கில் வெட்டி
ஏலே லங்கிடி அன்னமே
மூன்னூறு வண்டி கட்டி
ஏலே லங்கிடி அன்னமே
மொதலு வண்டி சாயங்கட்டி
ஏலே லங்கிடி அன்னமே
ஒண்ணு ரண்டா பந்தல் ஓட்டி
ஏலே லங்கிடி அன்னமே
பந்தலுக்குக் கீழாலே
ஏலே லங்கிடி அன்னமே
பந்து விளையாடையிலே
ஏலே லங்கிடி அன்னமே.

காதல் மிகுதியால் நெஞ்சிலே கனிவு பொங்க ஒரு இளைஞன் பாடுகிறான்.

செங்கொளத்து ஏரியிலே
செவலக் காடை கூவுதடா
செவலக் காடைச் சத்தமல்ல - என்
செவப்பி சத்தந் தோணுதடா

கருங் கொளத்து ஏரியிலே
கருங் காடை கூவுதடா
கருங் காடைச் சத்தமல்ல - அவ
கனிஞ்ச மைக்குஞ் சத்தமடா.

கண்ணாடி வளையல் தொட்டு
கருதறுக்கப் போற பெண்ணே

கண்ணாடி மின்னலுக்கு - என்னால்
கருதறுக்கக் கூடுலேயே

நீல வளையல் தொட்டு
நில மறுக்கப் போற பெண்ணே
நீல வளை மின்னலுக்கு இங்கே
நெஞ்சு நிலை கொள்ளலேயே.

ஊருக்கு மேவறமா ஏலேலோ மயிலன்னமே
ஊசிப்பில்லாஞ் சாமைக்காடு ஏலேலோ மயிலன்னமே
கூலிக்கறுக்கப் போயி ஏலேலோ மயிலன்னமே
குஞ்சரத்தை நான் மறந்தேன் ஏலேலோ மயிலன்னமே
மதுரைக்கு நேர் கிழக்கே ஏலேலோ மயிலன்னமே
மாரியம்மன் தெப்பக்குளம் ஏலேலோ மயிலன்னமே
மஞ்சத்தண்ணி யாடப் போயி ஏலேலோ மயிலன்னமே
மயிலாளை நான் மறந்தேன் ஏலேலோ மயிலன்னமே
அய்யாமலை மேலே ஏலேலோ மயிலன்னமே
கொய்யா பழுத்திருக்கும் ஏலேலோ மயிலன்னமே
கொய்யாப் பழம் பொருக்கி ஏலேலோ மயிலன்னமே
குயிலாளை நான் மறந்தேன் ஏலேலோ மயிலன்னமே.

நடவு நடும் பெண்கள் தங்கள் பண்ணைக்காரரைப் பற்றிச் சொல்லுகிறார்கள். அவருடைய தாராள குணத்தை எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

இந்திரனை நோக்கி எடுத்தோம் திரு அலகு
சந்திரனை நோக்கிச் சாதித்தோம் திரு அலகு
நிறுத்தின திரு அலகு நின்று பயிர் ஏறவேணும்
சாத்தின திரு அலகு சாஞ்சு பயிர் ஏறவேணும்
நெல்லா விளைய வேணும் நெடுங்களங்கள் ஏறவேணும்
கதிரா விளையவேணும் களஞ்சியங்கள் ரொம்ப வேணும்
காசாப் படி அளந்தா கனத்த நேரம் செல்லுமென்று
நெல்லாப் படி அளந்தா நீண்ட நேரம் செல்லுமென்று
அரிசி படி அளந்து ஆக்க நேரம் செல்லுமென்று
சோறுப் படி அளக்கும் சுவாமியார் பண்ணை இது.

(அகில இந்திய ரேடியோ திருச்சி நிலையத்தில் ஒலிபரப்பப் பட்டது)

★

பெண் வாழ்வு

அ. கிருஷ்ணசாமி நாயுடு

பெண் மக்களுக்கு இருவித வாழ்க்கைகள் இயற்கையிலேயே உள்ளன. ஒன்று கன்னிப்பெண் வாழ்க்கை; மற்றொன்று கலியாணமான பெண் வாழ்க்கை பழங்காலத்தில் எல்லாப் பெண்களும் பூப்பு-ருது நிகழ்ந்த பின்பே மணம செய்யப் பெற்றனர். இன்று பூப்பு நிகழ்வதற்கு முன்னர் பெண்களுக்குத் திருமணம் செய்வதாகச் சொல்லும் சிலரும் கூடப் பழங்காலத்தில் பெண்மக்களுக்குப் பூப்பு நிகழ்ந்த பின்னரே திருமணம் செய்தனர். எனவே எல்லாப் பெண்களுக்கும் பூப்பு நிகழ்ந்த பின்னரே கலியாணம் செய்யப் பெற்றதால் அப்பெண்கள் கன்னிப் பெண்களாகக் கருதப் பெற்றனர். இக்கன்னிப் பெண்கள்மேல், குடும்பத்தில் அனைவருக்கும் சிறப்பான பற்றுதல் உண்டு. அக்கன்னிப்பெண் தவறுதல் செய்தாலும் கூட வீட்டிலுள்ளவர்கள் "கலியாணமாகாத பெண்ணை ஒன்றுமே சொல்லக்கூடாது" என்பர். அதனால் கன்னிப்பெண்கள் செல்வமாகவே வளர்க்கப்படுவர்.

ஆனால், பெற்றோர் வீட்டுச் சொத்துக்களில் பங்குகள் இல்லை என்பதைக் கன்னிப் பெண்களும் அறிவர்; மற்றவரும் அறிவர். தனது பெற்றோர் வீட்டிலிருந்து சீரும் சடங்குகளும் கௌரவமாகத் தங்கள் நிலைமைக்குத் தக்கபடி செய்யவேண்டுமென்பர். ஆண் மக்களை விடப் பெண் மக்களிடம்தான் பெற்றோர்களுக்கு அதிகக்கவலை. ஏன்? பெண் மக்களுக்குத் தகுந்த கணவன் – உகந்த கணவன் வாய்க்க வேண்டுமே குடும்ப நிலையும் தங்களைப் போல இருக்க வேண்டுமே என்கிற கவலை இருப்பது இயல்பேயாம். இவ்விதக் கவலையோடு கூடிய பயம் இன்று அல்ல, அன்றே பெற்றோர்களுக்கிருந்தது.

இத்தகைய குடும்பத்தில் ஒரு பெண் இளமையிலிருந்தே செல்வமாகவளர்க்கப் பெற்றாள். கலியாணமும் செய்து வைத்தார்கள் அவளுக்கு.

கன்னிப்பெண் வாழ்க்கை

கன்னிப் பெண் தனது பெற்றோர் வீட்டில் செல்வமாக வளர்ந்தாள். பெற்றோரின் குடும்பமும் செல்வக் குடும்பம். அப் பெண்ணிற்கு ஒரு செவிலித்தாய் உண்டு. அவள் நரைத்த கூந்தலையுடைய கிழவி. அப்பெண்ணைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவளும் அக்கிழவியே. அப்பெண்ணிற்கு ஆபரணங்கள் அணிபவளும் உடை உடுத்துபவளும் தலையை வாரி முடித்து மலர்களை வைப்பவளும் அக்கிழச் செவிலியே.

வறியவர் வீட்டுக் குழந்தைகள் பசிக்காக உண்ண வேண்டியவர். செல்வர் வீட்டுக் குழந்தைகள் நேரத்திற்காக உண்ண வேண்டியவர்.

இச்செல்வக் குழந்தைக்கு உண்ணும் நேரம் வந்தது. செவிலித்தாய் சோற்றைப் பிசைந்து கொண்டு ஊட்டச் செல்லவில்லை. ஏன்? சோறூட்டுவது சாதாரணமாக எல்லார் வீடுகளிலும் நிகழ்வதுதானே! ஆனால், அச்செல்வர் வீட்டிலுள்ள செவிலியோ தேன் கலந்த பாலை ஒரு கிண்ணத்தில் ஊற்றிக் கொண்டு போனாள். கிண்ணமும் சாதாரண வீட்டு வெண்கலக் கிண்ணம் அல்ல; கொஞ்சம் உயர்ந்த வீட்டு வெள்ளிக் கிண்ணமும் அல்ல. மிகவும் உயர்ந்த வீட்டுப் பொன் கிண்ணம். இப்பொன் கிண்ணத்தைப் பாலுடன் ஒரு கையில் ஏந்திக் கொண்டாள். ஒரு கையில் சிறுகோலை – பூவொத்த மெல்லிய சிறு கோலை – பிடித்துக் கொண்டாள். ஏன்? பால் குடிக்காவிட்டால் குழந்தையை வெருட்டிக் குடிக்கச் செய்வதற்கு. அம்ம! அம்ம! செல்வர் வீட்டுக் குழந்தையை வெருட்டலாமா? என்றால் வெருட்டுவது போலப் பாவனை காட்டியாவது உண்பிக்க வேண்டும் என்பது மேலிடத்தின் உத்தரவு.

அவ்வுத்தரவுப் பிரகாரம் அச்சிறிய கோலை ஓங்கினாள். அடிக்கவில்லை. "குழந்தையே நீ உண்ணுவாய்" என்று ஓச்சி வீசவும் – வெளியிடத்தில் அடி படாமல் வீசலும் – அக்குழந்தை ஓடத் தொடங்கிற்று. ஓடும் பொழுது காலில் அணிந்துள்ள சிலம்புகள் ஒலித்தன? எப்படி? சிலம்போ பொன்னால் ஆகியது. அதனுள் ஒலிக்கும்படியாக முத்துக்களைப் போட்டிருந்தார்கள் – நீர் முத்துக்களை யல்ல; ஆணி முத்துக்களை!

பெருஞ் செல்வர் வீட்டுப் பொன் சிலம்புகளில் மாணிக்கங்களும், முத்துக்களும் போடுவது வழக்கம். அம்முறைப்படி கண்ணகியின் சிலம்பில் மாணிக்கமும், பாண்டியனுடைய மனைவியின் சிலம்பில் முத்தும் போட்டிருந்தார்கள். அதனால் அச்சிலம்பு கணீர் கணீர் என்று ஒலிக்குமாறு ஓடினாள். செவிலித் தாயும் பின்னாலே ஓடினாள். அப்பெண் பாய்ந்து பாய்ந்து பந்தலில் சுற்றிச் சுற்றி ஓடினாள். அந்நரைத்த கூந்தலையுடைய செவிலியால் அப்பெண்ணைப் பற்ற முடியவில்லை. மற்றும் சில கிழச் செவிலியர் கூடிப் பிடிக்கவும் தொடர்ந்தனர். அச்செவிலியர்களும் பிடிக்க முடியாமல் தளர்ந்து போயினர். அப்பெண் செல்வப்பெண் "நீ உண்ணுவாய்" என்று செவிலித்தாய் சொன்னதற்கு விடையாக "நான் உண்ண மாட்டேன்" என்று மறுத்து உரையாடினாள். இங்ஙனம் செல்வமாக வளர்க்கப்பட்ட பெண், கணவன் வீட்டிற்கு அனுப்பப்பட்டாள். அவள் கணவன் வீட்டில் களிப்புடன் இல்லறம் நடத்துகின்றாள்.

கலியாணமான பெண்ணின் வாழ்க்கை

செல்வம் அப்படியே ஓரிடத்தில் நிலைத்திருக்கின்றதா? செல்வம் ஓரிடத்தில் தங்கியிருக்கும் பொழுதே அச்செல்வனைப் பார்த்து இனி நாம் உன்னிடம் இருந்து செல்வம் செல்வம் என்று சொல்லுகிறதாம். அப்படி வேகமாகச் செல்வம் என்பதற்காகவே, வேகமாக ஒருவரிட மிருந்து மற்றொருவரிடம் போக வேண்டும் என்பதற்காகவே எங்களைச் சதுரமாக அமைக்காமல் வட்டமாகப் பொருள் நூல் அறிஞர் அமைத்திருக்கிறார். ஆகையால் செல்வம் தன்னையே உயர்வு

தன்மைப் பன்மையாக எண்ணிக்கொண்டு செல்வம் செல்வம் என்று சொல்லிக் கொண்டு போய்விடுவது இயற்கைதானே!

அவ்வியற்கைப்படி அப்பெண் – செல்வப்பெண் – வாழ்க்கைப் பட்ட குடும்பத்திலும் செல்வம் செல்வம் எனப் போயிற்று; வறுமைப் பிணி வந்தது; அவ்வறுமையினுல் மிகவும் துன்பப்படுகின்ருள். நேரம் ஆயிற்றே உண்பாய் என்று சொல்வாரில்லை. சொன்னுலும், வீட்டில் உண்பதற்குச் சோறு இருந்தால்தானே. வீட்டில் சோறு இல்லை. வீட்டில் ஒருநேரம் சோறு இருந்தால் மறுநேரம் சோறு இல்லை. வேளா வேளைக்குச் சோறு இல்லை. எதோ ஒரு வேளைக்குத் தான் சோறு இருக்கும். அதனுல் இன்ன பொழுதென்று இல்லாமல் சோறு இருக்கும் பொழுது உண்டு வந்ததினுல் மிகவும் இளைத்துப் போனுள். வற்றிப்போனுள். நீர் நிரம்ப ஓடிய ஆற்றுநீரில் இருந்த மணல் நீர், வற்றியதால் வறண்டதைப்போல வறண்டு போனுள்.

இந்நிலைமை – தம்மகள் வறுமையால் வற்றிப்போன நிலைமை – பெற்ருேர்களுக்குத் தெரிந்தது. பெற்ருேர்கள் அப்பொழுதும் பெருஞ் செல்வர்களாகவே வாழ்கின்ருர்கள். தம் மகள் வறுமையினுல் வருத்தப்படுவதை எண்ணி எண்ணி வருந்தினுர்கள். அடியில் செழிப்பாகத் தண்ணீர் பாய்ச்சப் பட்டிருந்தாலும் மேலே நெருப் பால் தாக்கப்பட்ட மரங்கள்போல வாடினுர்கள். ஊமைகள் கண்ட கனவுகளைப் போல வெளியில் சொல்வதற்கின்றி உள்ளேயே வெதும் பினுர்கள். நமது பெண்ணும் மாப்பிள்ளையும் நம்ம வீட்டிற்கு வர மாட்டார்களா? வந்தால் நன்ருக உணவு உடைகளால் போஷித்து நமக்குள்ள செல்வத்தில் ஒரு பங்கு கொடுத்தனுப்பலாமே என்று ஏங்கினுர்கள். தவித்தார்கள். இன்று வருவார்கள்! நாளை வருவார் கள் என்று வழிவழியே பார்த்துப் பார்த்துக் கண்களும் பூத்துப் போனுர்கள். பெண்ணும் மாப்பிள்ளையும் வரவில்லை; வரவே யில்லை.

தன் மதிப்புள்ளவர்கள் கால வேறுபாட்டால் தமது செல்வத்தை யிழந்தாலும் வருந்த மாட்டார்கள். வறுமையை ஏற்றுக்கொள்வார் கள். செல்வர்களிடம் போய் 'எனக்கு' ஏதாவது எனக்குதவ வேண்டும் என்னும் குறிப்பைக் காட்டுவதற்காக "எனக்கு" என் றும் சொல்ல மாட்டார்கள். அப்படி "எனக்கு" என்னும் மொழி யானது தமக்குரிய தன்மையும், தருமத்தையும், மானத்தையும் அறுக் கும்படியான வாளாக்கும் என்பர். இதனைப் புகழேந்திப் புலவர் நளன் தமயந்திக்குச் சொல்லும் முகத்தால் சொல்லுகின்ருர்.

> சினம் கதிர்வேல் கண்மடவாய்! செல்வர்பால் சென்றே
> எனக்கு என்னும் இம் மாற்றம் கண்டாய் — தனக்குரிய
> தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
> மானம் துடைப்பதோர் வாள்.

என்கின்ருர். இங்ஙனம் "எனக்கு" என்று யாரையும் கேட்டுப் பிழைக்காததமிழரின் தனிப் பண்பில் ஊறிவளர்ந்த அப்பெண்ணும் அம் மாப்பிள்ளையும் மாமனுர் வீட்டிற்கு 'எனக்கு' என்று ஏகுவார் களா?

பெண்ணும் மாப்பிள்ளையும் வரவில்லையே! அய்யோ! நாமாவது போய் அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய செல்வத்தைக் கொடுத்து வரலாம் என்று யோசித்தார்கள். முடிவு செய்தார்கள். அம்முடிவின் படி தகப்பனுர் போகாமல் தாயார் போனுள். அவர்களுக்காகத் தகப்பனுர் கொடுத்த செல்வங்களையும் எடுத்துக்கொண்டு போனுள்.

தாயார் மகளைக் காணுதல்.

தாயார் மகளுடைய வீட்டிற்குப் போய் மகளைப் பார்த்தாள் மகளின் உழைப்பைப்பார்த்தாள். உடலின் இளைப்பைப்பார்த்தாள். அப்படியே நின்றுவிட்டாள் மார்கழிமாதம் நீலகிரிமலையில் குளிர் ஏறுவதைப்போலத் தாயாரின் உள்ளத்தில் மகளின் கவலை ஏறிற்று. நீலகிரிக் குளிரால் உடல் தம்பிப்பது போல மகளின் துயரத்தால் உள்ளம் தம்பித்து விட்டாள். மகளோ வறுமையின் வடிவமாகத் தோன்றினுள். தாயோ சோகத்தின் வடிவமாகத் தோன்றினுள். அவ்வறுமையின் வடிவில் மகிழ்ச்சி ததும்பியது. சோகத்தில் மூழ்கிய தாயார் எண்ணுகிருள். தான் மகளை வளர்த்த பண்டைய நினைவுகள் ஒன்ருென்ருக எண்ணுகிருள். அங்ஙனம் எண்ணும் பொழுது தனது செவிலித்தாய் தேன் கலந்த பாலை ஊட்டும் பொழுது உண்ணமாட்டேன் என்று ஓடினுளே, இப்பொழுது பொழுது மறுத்துப் பொழுது மறுத்துச் சோறு உண்ணும் வன்மையை யுடையவள் ஆயினுளே. இஃதென்ன வியப்பு.

மனை வாழ்க்கை.

தன்னுடைய கையைப்பற்றிய கொழுநனுடைய கை வறுமை யுற்று விட்டதே. அதனுல் தனது தகப்பன் அனுப்பிய கொழுமை யான சோற்றுக்கு வேண்டிய உணவுப்பொருள்களை ஏற்றுக் கொள்ளவில்லை. பெற்ருேர் வீட்டுப் பொருள்களைப் பெற வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. இந்நிலைமையில் தாயார் கொண்டுபோன செழுமையான உணவுப் பொருள்களையா அம்மகள் ஏற்றுக் கொள் ளப் போகிருள்! தாயார் இப்பொருள்களை ஏற்றுக்கொள்ள வேண்டு மென வேண்டிக் கொண்டாள். அவள் ஏற்றுக்கொள்ள வில்லை.

> கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன் எதிர்
> கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று
>
> (பு. நா 204)

என்ற கொள்கைக்குத் தாயாரும் மகளும் சான்ருக நின்றனர். நின்றென்! தாயாரின் உள்ளமோ வருத்தத்தில் மூழ்கியது. மகளை வளர்த்த பழங் கதைகளெல்லாம் கருத்தில் ஒன்றன்பின் ஒன்ருக வந்தன. அவற்றுள் தேன் கலந்த பாலை ஊட்டின பொழுது உண்ண மாட்டேன் என்றவள் வேளைக்குச்சோறில்லாமல் உலர்ந்துபோனுளே! மகளின் வறுமை நீங்குவதற்காகத் தகப்பன் கொடுத்த பொருளையும் வேண்டாமென்கிருளே! இவ்வாருன அறிவும் ஒழுக்கமும் எங்கு தெரிந்துகொண்டாள் என வியக்கின்ருள். இவ்வியப்பில் எழுந்த செய்யுளாவது:—

"பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொன் கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பில் சுற்றும் பூந்தலைச் சிறு கோல்
உண் என்று ஓக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்துஅரிப் பொன்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரீஇ மெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறு விளையாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்!
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு அறல் போல
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே

(நற்றிணை 110)

பெண்மகள் கன்னியாக இருக்கும் பொழுது பெற்றோர்களின் வீட்டில் வறுமையறியாமல் செல்வமாக வளருகின்றாள். பின்பு வாழ்க்கைப்பட்ட குடும்பத்தில் வறுமை யடைகின்றாள். இவ்வறுமையிலும் செம்மையாக இருக்கின்றாள். செம்மையான பண் பட்ட உள்ளத்தில் வறுமையின் துன்பத்தைத் தாங்குகின்றாள். பொறுக்கின்றாள். வறுமைக் கொடுமையைப் பொறுக்கும் ஆற்றல் ஆண் மகனைவிடப் பெண் மகள் மிகுதியும் உள்ளவள். அன்றல்ல; இன்றும் உள்ளவள். இவ்வுண்மையைப் போதனர் என்னும் புலவர் நமக்குப் போதிக்கின்றார். அப்போதனையில் சிகரமாக இருப்பது

"ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனள் கொல்!
கொண்ட கொழுநன் குடி வறன் உற்றெனக்
கொடுத் தந்தை கொழும் சோறு உள்ளாள்"

இவ்வடிகளேயாம். இந்த வரிகளைப் படிக்கும் தோறும் பெண் மக்களின் பொறுமைப் பண்பு உள்ளத்திற்கு உயர்வு அளிக்கின்றது; ஊக்கம் அளிக்கின்றது; ஆக்கம் அளிக்கின்றது; நம்மை ஆனந்தத்திலும் ஆழ்த்துகிறது.

அறிஞர் வெல்ஸ்

'வில்லன்'

சென்ற ஆண்டு ஆங்கில இலக்கிய உலகினின்று மறைந்த வெல்ஸ், சற்றேறக் குறைய ஐம்பது வருடங்கள் பிரபல நாவலாசிரியராகவும், விஞ்ஞானியாகவும், சரித்திர ஆசிரியராகவும், அரசியல்வாதியாகவும் விளங்கினர். இரவும் பகலும் ஓய்வு ஒழிச்சலின்றி அவர் எழுதிய 96 நூல்கள் பிரிட்டிஷ் மக்களால் மட்டுமின்றி பிற நாட்டினராலும் அவர் காலத்திலேயே மூல மொழியிலேயோ மொழி பெயர்ப்பின் மூலமாகவோ பெருவாரியாகப் படிக்கப்பட்டு வந்தன. அவர் எழுதிய 'சரித்திரச் சுருக்கம்' 15 லட்சம் பிரதிகள் செலவாயின. சிந்தனையுலகில் அவர் தம் செல்வாக்கைப் பொறித்துச் சென்றுர். அவருடைய கருத்துக்கள் அறைகூவி அழைத்தன. அவர் சொன்ன விஷயங்கள் அதிசயமாயிருந்தன. சொல்லும் முறையிலும் அவற்றை அவர் அதிசயமாகச் சொன்னுர். "விஞ்ஞானம் யாவும் செய்ய வல்லது. ஏற்கெனவே மனிதனுக்கு எவ்வளவோ செய்திருக்கிறது. இடைவிடாமல் அது அபிவிருத்தி மேல் அபிவிருத்தியடைந்து வரும். அதன் பயனுக சமூகமும் அபிவிருத்தியடையும். விஞ்ஞானத்தின் மூலமாகவே மக்கட் குலத்திற்கு விமோசன மேற்படப் போகிறது" என்ற நம்பிக்கை நிலவி வந்த காலத்தில் பிறந்து வளர்ந்த அவர் தாமும் அவ்விஞ்ஞானத்தில் நம்பிக்கை வைத்தார். விஞ்ஞானி என்ற உரிமையில் பகுத்தறிவு என்பது அறவே ஒழிந்த விஷயங்கள் மீது சினமடைந்து அவற்றைப் பலமாகத் தாக்கினுர். வாழ்க்கையில், கணித சாஸ்திரம் அளிக்கும் கண்டிப்பு, கருர், திட்டம் ஆகியவற்றைக் கொண்டுவர முயன்றுர். அவர் தம் கருத்துக்களை அச்சமின்றியும், சந்தோஷமாகவும் வெளியிட்டார். தம் மனுேராச்சியத்தில் உதித்த பண்படாத கருத்துக்களையும் கூச்சமின்றி வெளியிட்டார். பழைய சம்பிரதாயங்களில் ஊறிப்போன மக்கள் சாதாரணமாக விரும்பாத கருத்துக்களையும் வெளிப்படையாக விவாதித்தார். மற்றவரின் அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் பற்றி அவர் கவலைப்படவில்லை. தம் கருத்துக்களில் திடநம்பிக்கை கொண்ட அவர் அவற்றைத் தைரியமாக வெளியிட்டார். சாமானிய மக்களுக்கும் விளங்குமாறு எளிய முறையில் கூறினுர்.

அவர் மனச் செறிவையும் கற்பனை வளத்தையும் என்னென்று கூறுவது? அந்திகாலம் வரையில் அள்ள அள்ள அவை குறைவற்று விளங்கின. அவரைக் கல்விக் களஞ்சியம் என்றுதான் சொல்ல வேண்டும். உலகில் நிகழப் போகும், பல விஷயங்களை மோப்பம் பிடித்துக் கூறும் அவரது ஆற்றலை என்னென்று கூறுவது? அவரைத் தீர்க்கதரிசி என்றுதான் சொல்ல வேண்டும். உலக சமாதானம், சகோதரத்துவம், சர்வ தேசப் பாராளுமன்றம், சர்வ தேசச் சமஷ்டியரசாங்கம் ஆகியவற்றை அடிப்படையாகக்

கொண்ட ஒரு புதிய உலக அமைப்பை, லட்சிய வாதியாகிய அவர் கனவு கண்டார். அக்கனவின் நிறைவேற்றத்திற்கான வழிகளையும் சீர்திருத்தங்களையும் எடுத்துக் காட்டினர்.

அவற்றை இடைவிடாமல் தம் எழுத்துக்கள் மூலமாகப் பிரசாரஞ் செய்தார். உலகம் இனி உலக நோக்கு கொண்ட, பயிற்சி பெற்ற விஞ்ஞானிகளாலேயே நடை பெறுமென்பது அவரது திடமான நம்பிக்கை. அத்தகைய விஞ்ஞானிகளால் நடத்தப்படும் அரசாங்கமே அவரது லட்சிய அரசாங்கமாகும். வெல்ஸ் இருள் படர்ந்த மக்களின் மனத்தில் நம்பிக்கையொளி பரப்பினர். வாழ்க்கையில் ஈனமும், பேராசையும், போட்டியும் போராட்டமும் தலை தூக்கி நிற்க வேண்டிய அவசியமே கிடையாதென்றும், மானிட உடலும், மனமும் உள்ளமும். விருப்பமும், உரமும் அடைந்து சிறப்புடன் விளங்க முடியுமென்றும் வலியுறுத்தினர்.

வெல்ஸ் போதனையும், பிரசாரமும் செய்தாராயினும், அவரை வெறும் பிரசாரகர் என நாம் கருதி விடலாகாது. அவருடைய நாவல்கள் அபூர்வமான காலசிருஷ்டிகளாகும். கிப்ஸ், போலி போன்ற சாமானிய மக்களுக்கு அவர் சாகாவரம் அளித்து விட்டார். பல வகைத் தொழில்களில் ஈடுபட்டு உலகம் நடக்குமாறு உழைத்து வரும் பெரும்பான்மையான மக்களின் குரல் அவர் நாவல்களில் கேட்கின்றது.

எர்பெர்ட் ஜார்ஜ் வெல்ஸ் (1866—1946) லண்டன் நகரின் சுற்றுப்புற பேட்டைகளையொட்டி இருக்கும் மேற்கு சென்ட் ஜில்லாவில் பிரோம்லி என்ற ஊரில் 1866, செப்டம்பர் 21-ந் தேதியன்று தாழ்ந்த நடுத்தர வகுப்பில் பிறந்தார். தந்தை கிரிக்கெட் விளையாடுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தார். தாய் செல்வக் குடும்பமொன்றில் வீட்டு வேலை பார்த்து வந்தாள். 13 வயது வரையில் பள்ளியில் படித்தார். பிறகு ஜவுளிக் கடையில் சிப்பந்தியாக அமர்ந்தார். சிறிது காலம் மருந்துக் கடையில் வேலை பார்த்தார். மக்களின் சிந்தனையை ஆளப்பிறந்தவர் வெறும் வேலையாளாகவே தம் வாழ்நாளைக் கழிப்பாரா? அவர் தென் கென் சிங்க்டன் ராயல் விஞ்ஞானக் கல்லூரியில் சேர்ந்து, பிரபல விஞ்ஞானியாக விளங்கிய அக்ஸ்லியின்கீழ் உயிர் நூல் படித்தார். படிப்பு முடிந்து 1888-ல் சட்டம் பெற்ருர். 1889-ல் பள்ளிக்கூட மொன்றில் உதவியாசிரியராக அமர்ந்து விஞ்ஞானம் போதித்தார். 1893-ல் பத்திரிகைகளில் கதைகள் எழுதி வந்தார். அவரது இலக்கிய வாழ்வு ஆரம்பித்தது.

1895-ல் "மாமாவுடன் சம்பாஷணைகள்" "கால இயந்திரம்" 'களவாடப்பட்ட நுண்ணுயிர்கள்' "அற்புத விஜயம்" முதலிய கதைகள் வெளி வந்தன. இவற்றில் மிதமிஞ்சிய கற்பனை, வெறி பிடித்து ஆடல் புரிகிறது. "கால இயந்திரம்" அவர் அசாதாரண கருத்துக்களையுடைய ஓர் எழுத்தாளர் என்பதை வெளிப்படுத்தியது. விஞ்ஞானத்தைக் கதைக்குரிய பொருளாக்கி அமைதியான வசன நடையில் கலையழகுடன் அதை எழுதித் தந்தது மிகவும் பாராட்டத்தக்கதாகும். "அற்புத விஜயம்" சமூகத்தை நையாண்டி செய்யும் அரிய சித்திரமாகும். அதில், அங்காரகக் கிரகத்திலிருந்து பூமிக்கு இறங்கிவரும்

அமானுஷ்ய மூளை படைத்த சில பிறவிகள் இப்புவி வாழ்க்கையைக் கேலி செய்கின்றன. இவற்றிற்குப் பின் ஒன்றன்பின் ஒன்ருக விஞ்ஞானக் கதைகள் வெளிவரலாயின. "டாக்டர் மோரோவின் தீவு" "கண்ணுக்குப் புலப்படாத மனிதன்" "உலகங்களின் யுத்தம்" "உறங்கினவர் விழிப்புறும்போது" "சந்திரனின் முதல் மனிதர்" முதலியன விஞ்ஞானம் எங்ஙனமாகவெல்லாம் வளர்ச்சியடையப் போகின்றது என்பதைத் தீர்க்கதரிசனமாகக் கூறும் கதைகளாகும்.

1800 முதல் தாழ்ந்த நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கையை ஹாஸ்யச் சுவையுடன் சித்திரிக்கும் நாவல்கள் வெளிவந்தன. "லியுஷாம் காதல்" (1900), "கிப்ஸ்" (1905), "டோனே பங்கே" (1909), "ஆன் வெரோனிகா" (1909), "திருபோலின் வரலாறு" (1910) ஆகியவற்றில் ஆசிரியர் தம் சொந்த வாழ்க்கையனுபவங்களை நன்ருகப் பயன்படுத்தினர். அவற்றில் சாமானிய வகுப்பினரின் வாழ்க்கையனுபவங்கள், இன்ப துன்பங்கள், எழுச்சிகள், விருப்பு வெறுப்புகள், காதல் நம்பிக்கைகள், நிராசைகள் ஆகியன கலைச் சுவையுடன் விவரிக்கப்பட்டன. ஆசிரியர், செல்வ வேட்டை, தடையில்லா வியாபாரம், போட்டி, போராட்டம், பலவீனரைக் கீழே தள்ளி விடுதல் ஆகியன கோரத் தாண்டவம் புரிந்த காலத்தில் பிறந்து வளர்ந்தவர். அவற்றின் மீது வெறுப்புக் கொண்ட அவர் நிலைமையைச் சீர்திருத்த முன்ருர். அந்த நிலையில் அவருக் கேற்பட்ட உள்ள நெகிழ்ச்சிகளை, நாவல்களில் வெளிப்படுத்தினர். அவர் சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் விசித்திரமானவை; நம் இரக்கத்திற்குரியன. மடமை, வறுமை, அரசியல் அஞ்ஞானம், ஆகியவற்றினின்றும், இயந்திர உலகின் குழப்பத்தினின்றும் விடுதலையடைய அவை போராடுகின்றன. வெல்ஸ் தாமும் அப்போராட்டங்களில் கலந்து கொண்டு மக்களை வழி நடத்துகிருர்; அவர்களின் உள்ளத்தைப் பகுத்து ஆராய்கிருர். அவரது மந்திரக் கோலின் பரிசத்தால் சாமானிய விஷயங்களும் விழுப்ப மடைகின்றன.

பிறகு சமூக, சரித்திர, அரசியல் பிரச்னைகளைப் பற்றிய நூல்கள் வெளிவந்தன. அவற்றில் வெல்ஸ் பிரபல சமூகச் சீர்திருத்தக்காரராகிருர். "பழைய உலகங்களுக்குப் பின் புதியன" (1908) அவருடைய சோஷலிஸ்ட் கருத்துக்களை விளக்குகிறது. மற்ற நூல்கள் உலக அரசாங்கம் ஏற்படுவதன் அவசியத்தையும், அதை உருப்படுத்த விஞ்ஞானம் செலுத்த வேண்டிய பங்கையும் வலியுறுத்துகின்றன. அவர் எழுதிய "உலக சரித்திரம்" உலக நாடுகளின் வரலாற்றைத் தொகுத்துக் கூறுவதோடு நிற்காமல், மக்கட் குலத்தின் அபிவிருத்தியையே ஆராய்ந்து கூறுகின்றது. ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிப்படையான கிரேக்க, உரோம நாகரிகங்களை வலியுறுத்துவதோடு நின்றுவிடாமல், அவற்றிற்கும் ஊற்ருன கீழ் நாட்டு நாகரிகங்களையும் உணர்த்துகிறது. 1914-ல் வெளிவந்த "விடுதலையடைந்த உலகம்" பின் வந்த அணுக்குண்டை தீர்க்கதரிசனமாகக் கூறுகின்றது.

ஆசிரியர் வெல்ஸ் உலக சமாதானத்தைப்பற்றியும் புது உலக அமைப்பைப் பற்றியும் இடைவிடாமல் பிரசாரஞ் செய்தார்

1932-ல் தம் ஒலிபரப்புப் பேச்சில் "உலகமெல்லாம் அமைதி நிலவ வேண்டும். ஒரே உலக அரசாங்கமும், ஒரே உலக அமைதியும் ஏற்பட வேண்டும். இல்லையேல், ஆபத்துத்தான். செவியில் படுவதெல்லாம் அயலவர் பேச்சாக இருக்கும். நம் வீடுகளில் காண்பதெல்லாம் அயலவர் விழியாயிருக்கும். மரண அபாயமே என்றும் நம்மை வாட்டும்" என்று எச்சரிக்கை செய்தார். 1934-ல் அமெரிக்கா சென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டையும், மாஸ்கோ சென்று ஸ்டாலினையும் பார்த்தார். இரண்டாவது மகா யுத்தத்தின் போது புது உலக அமைப்பைப் பற்றிய அவர் நம்பிக்கை தளர்ந்தது. வருங்கால மனிதனின் நிலைமை பற்றி வியாகுலமே அடைந்தார். 1940-ல் மானிட உரிமைகள் பற்றி உலக சிந்தனையாளர்களின் அபிப்பிராயங்களைத் திரட்டினார். 1946 ஆகஸ்ட் 13-ந் தேதியன்று இம்மானிட உடலை நீத்தார்.

வெல்ஸ் பெரிய சிந்தனையாளர் என்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து வழி காட்டினார் என்பதில் ஐயமே கிடையாது.

★

நட்சத்திரங்கள்

"எதிரே வருகிற யௌவன ராணிகளின் புதுப் புன்னகை பூத்த முகங்களில், நீண்ட நாசிகளில் ஒரு மூக்குத்தியோ, இரண்டோதான் பிரகாசிக்கின்றன. வானமாகிய மங்கைக்கோ, ஆஹா, லட்சோப லட்சம் மூக்குத்திகள்.

"ஒரே மேகக் காடு சூழ்ந்து குமுறிக் கொண்டருந்த வானம் 'சோ' வென்ற மழையைக் கொட்டித் தீர்த்து, ஒரே நீல மயத்தை மறுபடியும் உலகத்தாருக்கு அறிமுகப்படுத்தி வைத்த சமயம் அந்தி சூழ்ந்து இருள் கவிய ஆரம்பித்தது. மேகத் துணியால் மெருகு கொடுக்கப்பட்டோ என்னவோ நட்சத்திரங்கள் தட்டானிடமிருந்து புதிதாகக் கிளம்பிய நகையின் ஜொலிப்புடன் கூட பிரகாசிக்க ஆரம்பித்த சேதியைத் தாங்கி இரவு மங்கை கலீரென்று இரவு பூராவும் சிரித்துக் கொண்டிருந்தாள்."

— 'ஹரன்'

கோரிக்கை!

[கே. அப்துல் சத்தார்]

கிஜ்னியைச் சுற்றி இருள் குவிந்திருந்தது; அரண்மனையும் ஓசையற்ற ஓய்வு மடமாகக் காட்சியளித்தது; இனிய பழரசக் கிண்ணங்களும், யூனானி மருந்து புட்டிகளும், பட்டு பரப்பிய பொன் தட்டுகளில் கவனிப்பாரற்றுக் கிடந்தன. விளக்கின் வெளிச்சம் நன்றாகத்தான் வீசிக்கொண்டிருந்தது. ஆனால் அதிலும் ஒரு தேக்கம் இருப்பதைப் போலத் தோன்றியது இஸ்மெயிலுக்கு. அவன் பெருமூச்சு விட்டான். அப்போது உல்லாசப் பூங்காவிலிருந்து, பலமலர்களை உதிர்த்தும், மலரச் செய்தும் ஓடி வந்த காற்று அரசரின் அந்தத் தனியறையிலே அடைக்கலம் புகுந்தது. குளிர்ந்த மணமிக்க இனிமையான காற்று, ஆழ்ந்த சிந்தனையாலும், ஆறாத் துயரத்தாலும் வெப்பங்கொண்ட அவன் உடலில் பட்டதும், இஸ்மெயில் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தான். ஒரு சிறு அமைதி அவன் மனதில் அமர்ந்தது; அதையடுத்து ஆனந்தமும் பங்கெடுத்துக் கொண்டது.

அவன் கண்முன் பரந்த கிஜ்னிப் பேரரசு படமெடுத்தது; பலகணி வழியாகக் கண் நுழைந்தது. உல்லாசப் பூங்கா இருட்டில் கருத்துக் கிடந்தது; அதையும் தாண்டி வானைக்காண விரும்பும் கோபுரங்கள் சிறுத்துக் காணப்பட்டன; அவனது மனக்கண் அவைகளைப் பன்மடங்கு பெரிதாக்கிப் பார்த்துக் கொண்டது. அழகும், ஆண்மையும், ஆசையும் கொண்ட அவன் முகத்தில் அளவற்ற களிப்பு அசைந்தது. ஆனால் அவன் கண்களில் அங்கு தீட்டப்பட்டிருந்த, அண்ணன் மஹ்மூதின் சித்திரம் பட்டு விட்டது. ஒரே பூகம்பம் அவன் முகத்தில்; கோட்டைகள் அசைந்தாடின, கொட்டுமேளங்கள் கிழிந்துபோயின, அரச பீடம் அதிர்ந்துவிட்டது, மாளிகை துகள்களாயின. ஆம், அவன் கனவுகள் தகர்ந்துதான் வீழ்ந்தன!



சாவின் அணைப்பைச் சகித்துக் கொண்டு கிடக்கும் அந்தப் படுக்கையைப் பார்த்தான். அதில் படுத்துக்கொண்டு மெல்ல மூச்சு விடும் பேரரசர் சுபூக்குஜீன், இஸ்மெயிலை, இருபெரு மலைகளைச் சுமத்தினாற்போல் பாரமாயிருக்கும் கண்ணிமைகளைக் கஷ்டப்பட்டுத் தூக்கிப் பார்த்தார். எதிரே வீரக்களை மின்ன, வெற்றிச் சின்னஞ் சிரிக்க, வாளிலே கையுடன் பல வண்ணத்தாலே பொலியும் மஹ்மூதையும், பல எண்ணத்துடனே அக்கண்கள் கண்டன.

“அப்பா, இஸ்மெயில்......”

“இதோ இருக்கிறேனப்பா!......

"மருந்து............வேண்டாம். மரணத்தை அது தடுக்காது. இனி என் வாய் முணு முணுக்காது, வீர மொழிகளை வழங்காது. திறக்க முடியாத பூட்டு என் வாயை அடைத்துக் கொள்ளும். அதற்குள் என் தீர்ப்பைக் கூறி விடுகிறேன். இஸ்மெயில்!......இனி நீ......ஆம், அமீர் இஸ்மெயில் தான். நீ விரும்பிய படியே கிஜ்னி உன் கைகளில் கிடக்கிறது. அதைக் கருத்துடன் காப்பாற்றுவது உன் கடன்......"

அரசரின் வார்த்தைகளோடு வாழ்வும் முடிந்தது; அமீர் இஸ்மெயிலின் உள்ளத்தோடு உவமை போட்டியிட்டது.

* * *

"அரச பரம்பரையிலே பூத்திருக்கும் பிரபுக்களே! பட்டமேறிய இன்று உங்களைப் பரவசப்படுத்த நினைக்கிறேன் — இல்லை விரும்புகிறேன். உங்கள் கண் பட்டுத் தெறிக்கும் இச்செல்வக் குவியல் உங்களுக்குப் பரிசாக, அன்பளிப்பாக, அளிக்க என் கைகள் ஆவலுறுகின்றன. அதை உங்கள் கரங்கள் தூக்கிக் களிக்கட்டும்"

தந்தை சுபூக்குஜீன் சேர்த்து வைத்த பொக்கிஷத்தின் பெரும் பகுதி அங்கு பரப்பப்பட்டிருந்தது. மகன் இஸ்மெயில் அதைக் கை நோகக் கொடுத்தான் பிரபுக்களுக்கு. தாமடைந்த மகிழ்ச்சியனைத்தையும், வெளியிலே கொட்டி விட்டால் பிரபுகளுக்குத் தான் என்ன மதிப்பு? ஒரு பெருமிதத்துடனே அவைகளைக் கொண்டுபோயினர்.

அரச மன்றத்துப் பிரபுக்கள் அகன்றதும், படைத்தலைவர்களுக்கு அழைப்பு விழுந்தோடிச் சென்றது. அவர்கள் வந்தனர்.

"உண்மையுள்ள படைத்தலைவர்களே! உங்களுக்கு என் நன்றி! அரும்பியிருக்கும் ஆட்சியின் அடிப்படை நீங்கள் என்பதை நானறிவேன். அதை நீங்களும் உணர வேண்டும்; உழைக்க வேண்டும்; உயரவேண்டும்; உலகம் புகழ வேண்டும். இது என் கட்டளை. வானத்திலே பறந்தோடும் வண்ணக்கிளியும், வகையாகப் பாடி மனவளமூட்டும் பூங்குயிலும், கள்ளமற்று சுற்றிவரும் களி கொண்ட புருவினமும், என் பட்டத்து நாளைப்பற்றிப் பேசிப் பூரிப்பதைப்போல, அங்கங்கே கூட்டமாகக் காணப் படுகின்றன. அதைப்போல் நீங்களும் அணிவகுத்து, அழகுடன் வந்து கொண்டாடினீர்கள். இதோ உங்களுக்கு என் பரிசுகள்" என்றுகூறி, நின்றிருந்த எல்லோருக்கும் திறமை, உழைப்பு, தொண்டு — எதையும் கவனிக்காமல், கையில் கிடைத்ததை எடுத்துக் கொடுத்தான் இஸ்மெயில்.

கொட்டப்பட்ட செல்வக் குவியல் மறைந்து, வெறும் ரத்னக் கம்பளம் மட்டும் கிடந்தது. "இனி உங்களுக்கு இருபது திர்ஹம், படை வீரருக்குப் பத்து திர்ஹம் அதிகப்படி சம்பளம் என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன். சரி, போகலாம்" என்ற கட்டளை அவர்களைக் கொண்டு சென்றது.

திரும்பிய அவர்கள், அரசனளித்த வெகுமதிகளைப் புகழ்ந்து கொண்டல்ல, அன்பளிப்பின் உட்கருத்தை ஆராய்ந்தபடித்தான் சென்றனர். தன் தமையன் மஹ்மூதின் படையெடுப்பின் பயத்தால் ஏற்பட்ட அறச்சிந்தனையே அன்றி வேறல்ல என்பது அவர்களுக்குத் தெரியாமல் போக

வில்லை. "வலிமையற்ற அரசன்" என்றதோர் எண்ணம் குடிபுகவும், அரசனின்மேல் அலட்சியமும், குறைந்த மதிப்பும் நிறையத் தொடங்கின. அதன் எதிரொலி "சம்பளம் போதாது; ஐம்பது திர்ஹம் அதிகப்படி வேண்டும். எங்கள் குறைகள் இன்னும் நிறையக் கிடக்கின்றன. அவைகளுக்குக் காது கொடுக்க வேண்டும்; ஆனால் அது மட்டும் போதாது; காரியத்தில் காட்ட வேண்டும் வெகு விரைவாக" என்ற கூக்குரல்கள் கேட்கப்பட்டன படையினூடே. இதைக் கண்டு இஸ்மெயீல் திகைத்தான். அவர்களுடைய அநியாயக் கோரிக்கைகள் அவனுக்கு ஆத்திரத்தை மூட்டின, ஆனால் அதை வெளியிலே கொட்டவும் முடியாத நிலையில் அவனிருந்தான். படைகள் கிளர்ச்சி செய்யத் தொடங்கின; ஒழுங்கற்று, கட்டுப்பாடு மீறி நடந்தன. இஸ்மெயீலுக்கும் கவலைக்கும் தொடர்பு அதிகமாயிற்று.

இதையெல்லாம் கேள்விப் பட்டான் மஹ்மூத், நிஷாபூரிலிருந்து. தன் தந்தை இறந்ததும், தம்பி பட்டந்தரித்ததும், அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தன; ஆத்திரத்தையும் தந்தன. கருத்திருந்த மீசைமீது கை போய்ப்பட்டது; அடுத்த கணம் இதயம் கனிவு கொண்டதை, முகம் காட்டி விட்டது. கடைசியாக ஒரு கடிதம் எழுதினான்.

"அன்புள்ள அருமைத் தம்பி,

தந்தை இறந்ததைக் கேள்விப் பட்டேன். நீ பட்டமேறியதையும் கேட்டேன். உன்னைப்போல நேசித்தது உலகில் ஒருவரையுமில்லை என் வாழ்நாளில். ஆகவே அன்பின் காரணமாக, அண்ணன் என்ற உரிமையின் வாயிலாக, உனக்குச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாட்சி ஒரு கலை; கண்டவர் கொள்ள, அது கடையில் விற்கும் பொருளல்ல. முதிர்ந்த அனுபவம், ஆழ்ந்த அறிவு, அதற்குத் தகுந்த வயது இவைகளின் துணையால்தான் அதை அடையலாம்; அடைந்த பின்னும் நிலை நிறுத்தலாம். இத்தகைய பெரும் பொறுப்புக்கு நீ பொருத்தமுள்ளவனாக இருப்பாயானால், நான் இதில் தலையிட்டிருக்க மாட்டேன். ஆகையால், ஆசைத்தம்பீ, இதை ஆழ்ந்து ஆராய்ந்துபார், அவகாசமாக. நன்மையைத் தீமையிலிருந்து பகுத்தறிந்து நட. உன் அவசரச் செயலை விட்டொழித்து விடு. உனக்கு, கோரஸ்ஸான், பல்க் மாகாணங்களின் அதிகாரத்தைக் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்"

கடிதம் கொடுக்கப்பட்டது அமீர் இஸ்மெயீலின் கையில். அவன் பிரித்தான்; படித்தான். ஆனால் அவனுக்கு அண்ணனின் உபதேசங்கள் அணுவளவும் பிடிக்கவில்லை. முழு ராஜ்யத்திற்கு மன்னனாக முடி சூடிக் கொண்ட அவனுக்கு, கேவலம் இரு மாகாணங்களின் நிர்வாகம் அளிக்கப்படுமென்ற அண்ணனின் வார்த்தைகள் மகிழ்ச்சியை அளிக்க முடியுமா? ஆகவே அந்தக் கடிதம் உறவேற்படுத்தும் முறைக்கு உதவி செய்ய முடியவில்லை.

பார்த்தான் மஹ்மூத். உடன் பிறந்த ரத்தம், அவனைச் சண்டைக்குக் கட்டளையிடுவதிலிருந்து தடுத்தது. ஆனால் வெகு நாள் அப்படியே நிலைக்க முடியவில்லை. இறுதியில் சண்டையைத் தவிர வேறு வழியில்லை என்பதையுணர்ந்தான் மஹ்மூத். இதைக் கேள்விப் பட்ட இஸ்மெயீலும் போருக்கு வீறு கொண்டெழுந்தான்.

மஹ்மூதின் படைகள் கிஜ்னியை நோக்கிச் சென்றன. அவைகளை வரவேற்க இஸ்மெயீல் அங்கு விரைந்தான்.

எவ்வளவோ போர்க்களங்களைப் பார்த்து, ஒரு புன்னகையுடன் கையில் வாளேந்தும், மஹ்மூத் இரு படைகளையும் பார்த்தான். திகைத்து விட்டான். அவைகளிட்ட கோஷங்களைக் கேட்டான். கலங்கிப் போனான். எறும்புகளைப் போல அவ்வளவு நெருக்கமாகக் காணப்பட்ட யாவரும் ஒரே குலத்தினர். ஆனால் அவர்களுக்குள் சண்டை. ஆயிரக் கணக்கிலே அவர்கள் கொல்லப்படப் போகிறார்கள். அதனால் நாட்டு மக்களின் பெருக்கம் சுருங்கும். அப்படிக் கிடைக்கும் வெற்றி உண்மையில் ஒரு தோல்வி தான். இதையெல்லாம் எண்ணிப் பார்த்தான் மஹ்மூத், அவன் இதயம் கண்ணீர் கக்கியது. படை பலத்திற்கு அவன் பின் வாங்கவில்லை. பிறந்த நாட்டுப் பற்றுக்கும், உடன் பிறந்த முறைக்கும் முன்னால் அவன் வீரவுள்ளம் சோர்வடைந்தது.

எப்படியும் சண்டையை நிறுத்தி விடுவது என்று உறுதிகொண்டான். சமாதானத் தூதொன்றை பழைய உறவைப் புதுப்பிக்க வேண்டி, அனுப்பினான் தம்பியிடம்; ஆவலுடன் காத்திருந்தான் பதிலுக்காக. ஆனால் தூது பயனற்றுத் திரும்பியது; அவன் உள்ளத்தில் உணர்ச்சிகள் உராய்ந்து கொண்டன; முகம் வியர்த்தது; கண்கள் கலங்கின; பெருமூச்சுடனே படைகளுக்குக் கட்டளையிட்டான் போர்புரிய.

ஆனால் அவன் கண் முன் படைகள் போர் புரிவது புலப்படவில்லை. தன் தம்பியுடன் இளமையில் ஒன்றுகூடி ஓடி விளையாடிய புனித நாட்கள்தான் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் இடையிடையே, கொல்லப்படுல் ஒவ்வொரு வீரனின் இறுதிக் குரலும் அவனைத் தன்னுணர்வை இழக்காதிருக்கும்படி செய்தன.

அவன் மனதிலே அமைதியில்லை, அலைகள் எழுந்து அதை அழித்தன. அளவற்ற பிணங்களின் குவியல் அழுகிக் கிடக்கும் இடங்களைக் காண, கண்கள் கூசின. இரக்கவுணர்ச்சியால் கட்டுண்டு செயலற்று நின்றிருந்ததின் விளைவாக அவனது படை வீரர்களில் பலர், போர்க்களத்தையே பெருங் கல்லறையாக்கிக் கொள்ள நேரிட்டதைக் கண்டு மனம் பதறாமலிருக்க முடியவில்லை. பரந்த வானத்திலே, படுத்திருக்கும் மேகங்கள், வீசும் காற்றின் வலிமையாலே அங்குமிங்கும் அலைந்து திரிவதைப் போல, வெற்றியும் சஞ்சலிப்பதை மஹ்மூத் உணர்ந்தான். தாமதிக்காமல் தானே, எதிரிப் படையின் மத்தியிலே பாய்ந்தான். தயை, இரக்கம் தலைகாட்டவில்லை. அதன்மேல் மண்மேடு முளைத்து விட்டது. மாலை மதியத்தின் மயக்கமும், அதைத்தொடர்ந்து வரும் குளிர்ச்சியும் குந்தியிருந்த மனத்திலே, கொல்லும் கோடையின் உச்சிச் சூரியனின் வெப்பம் குடியேறியது.

படுதோல்வி இஸ்மெயீலுக்கு. அவனது படை கிஜ்னி கோட்டைக்கு ஓட்டமெடுத்தது. தன் அதிகாரச் சின்னங்களை அண்ணனிடம் அளித்தான் தம்பி. அவன் தலை தாழ்ந்தது.

"இஸ்மெயீல்..........." மஹ்மூதின் குரலிலே கனிந்திருந்த அன்பு இஸ்மெயிலுக்கு இன்பத்தை வழங்கவில்லை; இன்னலைப்

படைத்தது. கண்ணிமைகள் பாதி மூடிக் கிடந்தன.

"..........தம்பீ.........." உறவை நினைவு படுத்தினன் அண்ணன். ஓடும் ரத்தத்தைச் சுட்டிக் கூப்பிட்டான். அதற்கும் இஸ்மெயீலின் வாய் அடைப்பட்டுக் கிடக்க முடியவில்லை.

"சிங்காரத் தோட்டங்களையும், சிரித்துச் செல்லும் நீரோடைகளையும், பயங்கர போர்க்களத்தையும், பாய்ந்து வரும் வெற்றியையும், வலிமை வாய்ந்த கிஜ்னி ராஜ்யத்தையும், அதற்கு வந்தடையும் வையத்து ஆதிக்கத்தையும், பற்றி வம்பளந்து கொண்டிருக்கவில்லை, கற்பனையைக் கொண்டு. உச்சியிலே கிஜ்னிக் கொடி குலுங்க உயர்ந்திருக்கும் கோட்டையின் விசாலமான சிறையிலே வாழ்வதைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்"

"இஸ்மெயீல்! அதை மறந்து விடு, உன்னை மன்னித்து விட்டேன். தவறுணர்ந்தவனை மன்னிக்க இறைவன் தவற மாட்டான்..."

இஸ்மெயிலின் கண்கள் விரிந்தன. அண்ணனை உற்றுப் பார்த்தான். சந்தேகத் திரை அவன் கண்ணிமைகளில் தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான் மஹ்மூத்.

"தம்பீ!...... இது அரசியல் சூதாட்டக் காயல்ல. சூழ்ச்சியின் அடிப்படையில் விதைத்த வார்த்தையல்ல. என்னை நம்பு. இறைவன் சாட்சியாகச் சொல்லுகிறேன். உன்னை நான் மன்னித்து விட்டேன். உனக்கும் உரிமை உண்டு என்பதனாலே பட்டமேறினாய்; படையெடுத்து வந்த என்

"ஏன்?........." அலறும் புயலிலே அகப்பட்ட மனிதனின் குரலைப்போல.

"என்ன சிந்திக்கிறாய் மௌனமாக?"

னைப் படையுடன் எதிர்த்தாய்; குற்றமில்லை. ஆனால் என்னை அன்னியன் என எண்ணினாய்; அண்ணன் என எண்ணவில்லை. அன்பான வார்த்தைகளை, வேண்டுகோளை, வேண்டாமென்றாய். அதுதான் குற்றம். போனது போகட்டும், எனக்கு இனியாகிலும், உன் அன்பான ஆதரவான இதயத்தைக் கொடு. அது போதும். உன் நாட்டிலுள்ள கோரஸ்ஸான், பல்க்கை நீ நிர்வகி. அதைத் தடுக்க எனக்குரிமையில்லை''

இஸ்மெயிலின் கண்முன் அவ்விரு மாகாணங்களும் வந்து நின்றன. இஸ்மெயில் ஆட்சிபுரிகின்றான். அண்ணனுடன் ஆதரவாக இருக்கின்றான். பகைவர்கள் நடுங்குகிறார்கள். அப்போது சில பிரபுக்கள் வருகிறார்கள். ''இவ்வளவு பரந்த நாட்டில் உனக்கிரு மாகாணங்கள் தானா கிடைத்தன? இஸ்மெயில், இது தகுதியா? உன் அண்ணன்தானே ஆளப்பார்க்கிறான்; பேராசைக்காரன். அவன் பண்பை அறியாது நீயும் உண்மையன்புடன் ஒழுகுகிறாயே! இது சரியா? நீயும் சுபுக்தஜீனின் மகன்; அவனும் அப்படியே; ஆனால் மாற்றாந்தாயின் மகன். அவனிடம் திறந்த மனதை எதிர் நோக்கி நிற்கிறாய், பாவம் ஏமாறப் போகிறாய்'' என்று சொல்கிறார்கள். இஸ்மெயில் ஏதோ ஆராய்ந்தான். 'சரி, சண்டையே சிறந்தது' என்று கிளம்புகிறான். சண்டை நடக்கிறது. வெற்றி......இல்லை மீண்டும் தோல்வி.

இதற்குமேல் இஸ்மெயிலின் மன வோட்டம் செல்லவில்லை. ''ஆம், சூழ்ச்சிக்காரர்களின் பேச்சால் மீண்டும் சண்டைக்குக் கிளம்புவேன், என் அருமை அண்ணனுக்கு எதிராக. வேண்டாம், வேண்டாம், என்றெண்ணிய இஸ்மெயில், ''அண்ணா! வேண்டாம்; எனக்கு வேண்டாம்'' என்று உரத்துக் கூறினான்.

''என்ன!.........என்ன வேண்டாம்?......'' புரியாமல் விழித்தான் மஹ்மூத்.

''வேண்டாமண்ணா, வேண்டாம்; எனக்கு அதிகாரம் வேண்டாம்; ஆட்சி வேண்டாம்; மாகாணம் ஒன்றும் வேண்டாம்''

''இஸ்மெயில்! ஏன் இப்படிப் பதறுகிறாய்?''

''அண்ணா! உன்னை மற்றுமொரு தடவை போர்க்களத்திலே எதிர்க்க நான் விரும்பவில்லை. உன் கள்ளமற்ற அன்பிற்குக் கடுகளவும் தகுதியற்றவனை விளங்க நான் ஆசைப்படவில்லை. அதிகாரம் நீ அளித்தால், ஓரிருசமயம் ஏற்படும் அதிகார வெறியால் என் அறிவு அரிக்கப்படும். அதன் பலன் மீண்டும் கிஜ்னியருகே சண்டை. அண்ணா! என்னைத் தோல்வியுற்ற எதிரி என நினை; தம்பி என எண்ணாதே. எதிரிக்களிக்கும் தண்டனையை எனக்களி''

''இஸ்மெயில்! நீ எதிரியா? நான் நீதிபதியா?......உனக்கா தண்டனை?''

''ஆம் அண்ணா! ஆயுள் முழுதும் அமைதியான, ஆட்சிப்பைத்தியமும் அதிகாரப் பேராசையும், ஆணவமும் அடங்கிய சிறையிலே எனக்கு அடைக்கலம் அளி''

மஹ்மூத் பேசவில்லை. அவன் கண்கள் கண்ணீர் கக்கின. தம்பியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

" அண்ணு! எனக்கு எல்லாவித வசதிகளையும், அங்கு நீ செய்து தர வேண்டும். ஒரு இளவரசன் போல நான் வாழ வேண்டும். நான் கேட்கும் எதையும் நீ மறுக்கக்கூடாது. நான் இன்பத்தி லாழ்ந்திருப்பேன்; துன்பத்தைக் காணுமல் காலங்கழிப்பேன். ஆனல் தப்பித்தவறி, நான் சுதந்திரம் கேட்டு விட்டால், அண்ணு! அதை மட்டும் தந்து விடாதே! சிறையிலே சுதந்தரமற்று, ஆனல் சுகமாக வாழ விரும்புகிறேன். நீ நாட்டிலே, சுயேச்சையுடன், செயல் புரிவதை விரும்புகிறேன். அண்ணு, என் கோரிக்கையை ஏற்பாயா?......" என்று அலறினன் தம்பி இஸ்மெயீல்.

அண்ணன் அவனைப் பார்த்தான். வெகு கஷ்டத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். கண்களிலிருந்து நீர் வழிந்தோடி மேலங்கியில் பட்டுப் புதைந்தது. மார்பைக் கையாலமுத்திக் கொண்டு பேசாமல் வெளியேறினன்.

" அண்ணு........." இஸ்மெயில் கூப்பிட்டான். பதிலில்லை.

" அண்ணு......" மீண்டும் கத்தினன். " தம்பீ!......நான் செவிடனய்ப் பிறந்திருக்கக் கூடாதா?" என்ருன் மஹ்மூத். அதற்குமேல் அவன் குரலில்லை; அவனுமில்லை.

" அமீர் இஸ்மெயிலின் ஆவி பிரிந்தது, ஜுர்ஜான் கோட்டையிலே" என்று குறிப்பெழுதியிருக்கிருர்கள் சரித்திரக் காரர்கள். ஆம், அண்ணன் அந்தத் தம்பியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டான் போலும்!



அசோகன் கனவு

'துஷ்யந்தன்'

என்ன வெல்லாமோ கனவுகளெல்லாம் கண்டு கொண்டிருந்த காலம் அது. தனது சாம்ராஜ்யம் எங்கெல்லாமோ பரவியிருக்க வேண்டுமென்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்த காலம் அது. மண்ணாசை அவனை அப்போது நன்ருகப் பிடித்திருந்தது. அந்த ஆசை அவனை ஆட்டி அலைக்கழித்தது.

கடலுக் கப்பால், சிங்களத் தீவுக்கப்பால், சாவகத் தீவுக்குமப்பால்... இன்னும் அப்பால்...! இப்படியே அப்பால் அப்பால் போக வேண்டும்; தனது வெற்றிக் கொடியை நாட்ட வேண்டும் என்ற ஆசை அவனை அல்லும் பகலுமாக வதைத்துக் கொண்டிருந்த காலம் அது.

அப்போது தான் பட்டத்திற்கு வந்திருந்த அசோகனது ஆசை அளவற்றதாயிருந்தது. உலகமே தன்னுடையதாயிருக்கக் கூடாதா என்று தான் அவன் ஆசைப்பட்டான், சிறு குழந்தை 'இந்தக் கடலெல்லாம் என்னுடையதாக இருந்தால்......' என்று நினைத்து மகிழ்வது போல. வானத்தின் வர்ணத்தையெல்லாம், இயற்கையின் எழிலை யெல்லாம் ஒன்ருகச் சேர்த்துக் குழைத்துத் தீட்டி விடலாமா என்று ஆசைப்படும் ஒரு இளம் சைத்ரிகனைப் போல அவன் இன்பக் கனவுகள் கண்டு கொண்டேயிருந்தான்.

இந்தக் கனவுகளை யெல்லாம் நினைவாக்கி உருவாக்கிப் பார்க்க அவனுக்கு எத்தனையோ ஆசை. இந்த ஆசை, வெறியாகி அவனைப் பைத்தியமாக்கி விட்டதோ என்னவோ, யுத்தவெறி பிடித்தலைந்து கொண்டிருந்தான் அவன், மத யானை போல. வடக்கிலும் தெற்கிலுமாக வெற்றிக் கொடிகளைப் பறக்க விட்டுக்கொண்டிருந்தான்.

இந்த வெற்றியின் போதையிலேயே மூழ்கியிருந்தான் அவன், சில காலம்.

ஆசையும் வெற்றியும் அவன் கண்களை மறைத்து, அறிவை மழுங்கச் செய்து விட்டன. வெற்றியைத் தேடி அப்பால் அப்பால் போய்க் கொண்டேயிருந்தான்.

எங்கேயோ எப்போதோ நடந்து விட்டாலுங் கூட நமது நினைவுத் திரையினின்றும் என்றுமே அழியாத சில சம்பவங்கள் இருக்கின்றன. தேய்ந்தொழிந்து மறைந்து போய் விடாத சில சம்பவங்கள் சரித்திரத்தில் இருக்கத்தான் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சம்பவம் அன்று நடந்து முடிந்திருந்தது.

அன்று தான் கலிங்கப் போர் முடிந்திருக்கிறது. அசோக சாம்ராஜ்யம் வளருவதற்காக மற்ருெரு நாடு பலியாகி யிருந்தது அன்று. ஆனுல் கலிங்கம் உண்மையில் அன்று பலியாகவில்லை. கலிங்க தேசம் மகத்தான ஒரு தியாகம் செய்திருந்தது. தன்னையே தியாகம் செய்து கலிங்கம் அசோகனது சாம்ராஜ்யத்தை நிலை நாட்டியது. இந்தத் தியாகம்தான் அசோகன் வாழ்க்கையையே மாற்றி விட்டது. கலிங்கத்தின் வெற்றியே

அசோகன் கண்ணைத் திறந்தது. மயக்க நிலை தெளிந்து அசோகன் விழித்துக் கொள்ளக் காரணமா யிருந்தது கலிங்கப் போர் தான்.

ஆமாம், அசோகனது இன்றைய புகழுக்கு அஸ்தி வாரம் போட்டது கலிங்கம் செய்த தியாகம் தான். அன்றைய வெற்றி அசோகனுடைய தாயிருந்தாலும், அது கலிங்கத்தின் வெற்றி தான்.

வெகு தூரத்தில், போர்க்களத்தின் மத்தியில் அவன் வெற்றிக் கொடி வானளாவப் பறந்து கொண்டிருந்தது. அசோகன் கனவு உருவாகிக் கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அவனது வெற்றிச் சிகரங்கள் தலை தூக்கி நின்று கொண்டிருந்தன.

அசோக சாம்ராஜ்யத்தின் புகழ் நிலைத்து விட்டது. அசோகனது வெற்றி பரவுகிறது. அவனது ஆட்சி எங்கெல்லாமோ நடக்கிறது. இனி அதற்கு அழிவில்லை. ஆழமான அஸ்திவாரத்தின் மேல் இந்த சாம்ராஜ்யக் கோட்டையைக்கட்டி விட்டான் அசோகன்.

கனவு நனவாகி வரும் ஆனந்தத்தில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தான் அசோகன்.

அதோ, அதோ, எங்கு பார்த்தாலும் சாம்ராட் அசோகனது வெற்றிச் சின்னங்கள் எழுந்து ஓங்கி ஆகாயத்தை நோக்கிக் கூவுகின்றன 'அசோகன் அசோகன்' என்று!

"அரசே!"

கனவுலகிலிருந்து மீண்டும் பிரத்தியக்ஷ உலகிற்கு வர அசோகனுக்கு சில நிமிஷங்கள் வேண்டியிருந்தது.

"ஸ்வாமி!" சட்டென்று எழுந்து நமஸ்கரித்தான் அவன். உபகுப்தரை அவனுக்குத் தெரியும். இதற்கு முன் சில சமயங்களில் பார்த்திருக்கிறான். அவரிடம் அவனுக்கு அளவற்ற பக்தி. கருணையும் கம்பீரமும் கலந்து மின்னும் அவர் கண்களில் ஏதோ வசியமிருந்தது. புத்தமதத்தைப் பற்றி அவன் அப்போது அவ்வளவாகத் தெரிந்து கொண்டிருக்கவில்லை. தெரிந்து கொள்ளவும் ஆசைப்படவில்லை. அவனுக்கு அவகாசம் தான் ஏது? போர்க்களங்களில் புகுந்து வருவதற்கும், வெற்றிச் சின்னங்களைக் காட்டுவதற்கும், கனவுகள் கண்டு கொண்டே யிருப்பதற்கும் தான் அவனுக்கு அப்போது சரியாயிருந்தது. மற்ற விஷயங்களைப் பற்றி அவன் அச்சமயத்தில் கவலைப்படுவதேயில்லை. உபகுப்தரைக் கண்டதும் கூட அவனுக்கு அன்றைய வெற்றியைப் பற்றிக் கூற வேண்டும் என்ற ஆசை தான் தோன்றியது.

"உங்கள் ஆசீர்வாத பலத்தால் இன்றும் வெற்றி எனக்குத் தான் சுவாமி. கலிங்கப் போரில் நான் பெற்ற வெற்றி என் கனவின் சிகரம். இனி எங்கும் என் புகழ் நிலைத்து நிற்கும். சாம்ராட் அசோகன் உலகத்தின் அரசன். உலகத்தின் எந்தக் கோடியிலும் இனிமேல் அவன் கொடிதான் பறந்து விளையாடும், உச்சி வானை நோக்கி. அசோக சாம்ராஜ்யம் ஸ்திரமாகி விட்டது. அதற்கு இனிமேல் அழிவு கிடையாது. அதோ, பாருங்கள், சுவாமி, போர்க்களத்தின் மத்தியில் என் கொடி கம்பீரமாக தலை நிமிர்ந்து வானத்தை நோக்கிப் பறப்பதை! இன்று கலிங்கம் என்னுடையது. நாளைக்கு......! அசோகன் வெற்றி

முரசு உலகமெங்கும் கேட்கும். உலகம் உள்ள வரையில் அவன் சாம்ராஜ்யம் நிலைத்து நிற்கும்...'' அசோகன் பேசிக் கொண்டே போனான்.

''அசோகா, ஒரு சந்தேகம்'' என மெதுவாக ஆரம்பித்தார் உபகுப்தர்.

''என்ன, சுவாமி? என் பலத்தில் உங்களுக்கு சந்தேகமா? என் சேனையின் வீரத்தில் நம்பிக்கையில்லையா? அசோகனது சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தில் ஏதாவது குறைவா?''

அசோகன் படபட வென்று கேள்விகளைக் கேட்டு விட்டான். தனது விஷயத்தில் கூட உபகுப்தருக்கு சந்தேகம் எழக் காரணம் என்னவென்றுதான் அவனுக்குப் புரியவில்லை.

''இல்லை, அசோகா, உன் வலிமையில் எனக்குப் பூரண நம்பிக்கையுண்டு. ஆனால்... ம்... இதுவரையில் அஹிம்சையைக் கொண்டு, மிருக பலத்தை ஆதாரமாகக் கொண்டு, சேனையின் வலிமையை அஸ்திவாரமாகக் கொண்டு அதன் மேல் கட்டப்பட்ட எந்த சாம்ராஜ்யமும் நிலைத்து நின்றதில்லை. இந்த வெற்றிகள் ஸ்திரமாக இருப்பதில்லை. எத்தனையோ சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்து விட்டன. எத்தனையோ மன்னர்கள் தோன்றி மறைந்து விட்டனர். எத்தனை எத்தனையோ கோட்டைகள் எழும்பி நின்று, இடிந்து போய் இன்று அவலமாய்க் கிடக்கின்றன அந்த மன்னர்களின் கனவுகளைப் போல. அவர்களும் வெற்றி வீரர்கள்தான். அவர்களும் உன்னைப் போலத்தான் சாம்ராஜ்யக் கனவுகள் கண்டு கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அவர்கள் எங்கே? அவர்கள் சாம்ராஜ்யம் எங்கே? அவர்கள் கட்டிவைத்த கோட்டை

கள் எங்கே? கோபுரங்கள் எங்கே? யோசித்துப்பார். அசோகா, மிருக பலம் ஒன்றினால் மட்டுமே பெற்ற வெற்றியின் முடிவு இதுதான்.''

அசோகன் மனம் குழம்பி விட்டது. உபகுப்தரின் வார்த்தைகள் அவன் எண்ணங்களைச் சிதற விட்டுவிட்டன. "அசோகா, என்னுடன் வா, அதோ தெரியும் அந்தப் போர்க்களத்தில் தானே நீ இன்று வெற்றி பெற்றாய். அங்கு வந்து பார். இதுவரை நீ எதை வெற்றி யென்று எண்ணி இருமாந்திருந்தாயோ அந்த வெற்றியைப் பார்.''

மௌனமாக உபகுப்தரைப் பின்பற்றி அசோகன் சென்றான். அப்போது அவன் நினைக்கவே யில்லை இனிமேல் அவரையே எப்போதும் பின்பற்றப் போகிறோம் என்று. அன்று முதலே அவன் உபகுப்தரின் சிஷ்யனாகி விட்டான். அந்த நிமிஷ முதலே அவன் புத்த மதத்தின் வழியில் நடக்க ஆரம்பித்து விட்டான். ஆனால் அவனுக்கு அப்போது இது தெரியவில்லை.

உபகுப்தரின் பின்னேயே போய்க் கொண்டிருந்தான் அவன்.

யுத்த களத்திற்கு வந்ததும் அவர் நின்றார். அவனும் நின்றான்.

பாழடைந்து பரந்து கிடந்த போர்க்களத்தின் பயங்கரத் தோற்றம் அசோகனை மௌனியாக்கி விட்டது.

"அசோகா, இதோ பார். இத்தனை கோடி மனிதர்களின் உயிர் இன்று உன்னால் அழிந்து போய் விட்டது. இவர்களின் இரத்தம் ஓடுவதைப் பார். இதைவிட அதிகமாக ஓடுகிறது இவ்வீரர்களின் தாய், மனைவி, மக்கள் விடும் கண்ணீர். உன் வெற்றியைப் பார். இதுதான் உன் மகத்தான வெற்றி. கோடிக் கணக்கான ஜீவன்களை வாங்கி, எத்தனையோ கோடி மக்களின் உள்ளத்தைப் பிழிந்து, ரத்தப் பிரவாகமாய் ஓடும் போர்க்களத்தின் மேல் நீ கட்டும் இந்தச் சாம்ராஜ்யம் எத்தனை நாளைக்கு நிலைத்து நிற்கும்?

என்றாவது நீ இதை ஆலோசித்துப் பார்த்தாயா? உனக்கு வெற்றிதான் வேண்டியிருந்தது. சாம்ராஜ்யப் பித்து உன்னை மனித நிலையிலிருந்து மிருக நிலைக்குக் கொண்டு போய் விட்டது. வெற்றிக் கனவு கண்டு கொண்டிருந்த நீ, ஒரு நாளும் வெற்றிக் கப்பால் நடப்பதை யோசிக்கவில்லை. வெற்றிக்குப் பின் நாடு எப்படி யிருக்கிறது என்பதை நீ கவனிக்கவில்லை. தோற்றுப் போய் விட்ட தேசத்தின் க்ஷேமத்தைப் பற்றி நீ கவலைப்பட்டதே யில்லை. அவர்களுக்கும் வாழும் உரிமையுண்டு என்பதை நீ தெரிந்து கொள்ளவில்லை. அசோகா, தர்மத்தை அறவே மறந்து போய் விட்டாய். ரத்த வெறி கொண்டலைந்து, எத்தனையோ உயிர்களை நாசமாக்கி, தேசங்களை யிடித்து சின்னா பின்னமாக்கி விட்டு விட்டாய். இதுதானா வெற்றி?

மனிதனை மனிதன் கொன்று வாழ்வதுதான் வெற்றியா? இது தான் வெற்றி யென்று நீ நினைத்தால், இத்தகைய வெற்றி எவ்வளவு காலம் இருக்குமென்று நீயே யோசித்துப்பார்.

இப்படி வெற்றி யடைந்த அரசர்களைப் பற்றி சற்று நினைத்துப்பார். இப்படி ஸ்தாபிக்கப்

பட்டு இப்போது அழிந்து அடியோடு மண்ணோடு மண்ணாய்ப் போய்விட்ட சாம்ராஜ்யங்களைப் பற்றி ஆலோசித்துப்பார். வெற்றி எப்போதுமே, யாருக்குமே சாசுவதமல்ல.

இன்றைக்கு நீ வெற்றி பெற்ருல், நாளை யாரோ? நேற்று கூட கலிங்கத்தின் வீரர்கள் வெற்றி தங்களுடையதுதான் என்று நினை



த்து வந்தார்கள். இன்று உயிரிழக்க நேரிடும் என்று மட்டும் இந்தக் கோடிக்கணக்கான வீரர்களுக்குத் தெரிந்திருந்தால்...ம்... அவர்கள்தான் வெற்றியை நம்பி வந்தார்களே! இப்போதுபார், அவர்களின் உடலைக் கழுகுகள் கொண்டு செல்கின்றன. நாய்கள் ருசி பார்க்கின்றன. நாளை இந்நிலை மாருது என்பது என்ன நிச்சயம்? இதுதான் வெற்றி, அசோகா, அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டு மேலே எழும்பும் அதர்மக் கோட்டை. இதுதான உன் லட்சியம்? இதுதான உன் கனவு?''

பிரமை தட்டிப் போய் கற்சிலை போல நின்று கொண்டிருந்த அசோகன் மனதில் எத்தனையோ எண்ணங்களும், சந்தேகங்களும், கேள்விகளும் தோன்றி மறைந்தன.

வெற்றி, வெற்றி யென்று ஒரு புறம் மனம் போராடியது. அதர்மம், அஹிம்சை, அநித்தியம் என்றெல்லாம் உபகுப்தர் சொன்ன வார்த்தைகள் வேறு வந்து மனத்தைக் குழப்பின.

''என், சுவாமி, நான் பெற்ற வெற்றியும், கட்டின கோட்டைகளும், எண்ணி வைத்த திட்டங்களும், கண்டு கொண்டிருந்த கனவுகளும் எல்லாமே அர்த்தமற்ற அநித்தியமான அதர்ம காரியங்கள்தாமா? சாம்ராட் அசோகன் ஒரு கொலைகாரப் பாவிதான? அவன் புகழ் அழிந்து போய்விடக் கூடியதுதான? உலகம் அவனை என்றுமே போற்ற வழியே கிடையாதா, சுவாமி?''

''உண்டு, அசோகா, அஹிம்சையின் மார்க்கத்தில் நீ செல்ல வேண்டும். தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டும். அன்பினால் உலகத்தையே கட்டியாளலாம். அன்புதான் மதம். அன்புதான் வெற்றி. அன்புதான் எல்லாம். மனிதனை அமரனாக்குவது அன்புதான். தெய்வம் தெய்வமாயிருப்பது அதனிடம் பெருகியோடும் அன்பு வெள்ளத்தினால்தான். பகவான் புத்தரின் கருணையும் அன்

பும் காட்டும் வழியில் என்றுமே வெற்றிதான். அசோகா, அன்பு வழியில் தலை நிமிர்ந்து நேராகச் செல். வெற்றி உன்னுடையது தான். உலகத்திற்கு அன்பைப் போதம் செய். உலகம் உன்னுடையதாகும். உலகத்திற்கு நீ அன்பைக் கொடுத்தால், உலகம் தன்னை உனக்குக் கொடுக்கும்.

தர்மத்தை உபதேசி. அன்பு வழியை அனைவருக்கும் காட்டு. அஹிம்சையை மறவாதே. உலகம் உள்ளவரையில், சத்தியம் என்பது இருக்கும் வரையில், உன் பெயர் நிலைத்து நிற்கும். போ. தர்மத்தை நிலை நாட்டு. கடலுக்கப்பால், சிங்களத் தீவுக்கப்பால், சாவகத் தீவுக்கப்பால், இன்னும் அப்பால் அப்பால் போய்க் கொண்டேயிரு, தர்மோபதேசம் செய்து கொண்டே. அசோகன், அசோகன் என்று உலகம் உன்னைக் கொண்டாடும்.''

அசோகன் மனதில் அவர் சொன்ன வார்த்தைகள் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

மீண்டும் கனவுகள் காண ஆரம்பித்து விட்டான். கடலுக்கப்பால், எங்கேயோ கண்ணுக்கெட்டாத தூரத்திலிருக்கும் பெயர் தெரியாத தீவுகளுக்கெல்லாம் அப்பால், அப்பால் போய்க் கொண்டேயிருந்தான் அவன் தர்மத்தை நிலைநாட்ட. அவன் அனுப்பிய தூதர்கள் எங்கெல்லாமோ சென்றனர். எண்ணற்ற பௌத்த பிக்ஷுகள் உலகத்தின் எத்திசைக்கும் போய் கொண்டேயிருந்தனர் அன்பு மதத்தை அனைவருக்கும் உபதேசிக்க.

தர்மத்தின் அழியாச் சின்னமாக, அசோகனது வெற்றியின் சிகரமாக, எழுந்தோங்கி நிமிர்ந்து நிற்கும் அவனது ஜயக் கம்பங்களில் தர்மச் சக்கரம் அழகாகப் பொறிக்கப்பட்டது.

அசோகன் கனவு பலித்து விட்டது. உலகம் அவனைக் கொண்டாடுகிறது. எத்தனையோ வருஷங்களாகி விட்டன. ஆனால் இன்னும் அந்த கம்பீரமான சிம்மங்களின் மேலிருக்கும் தர்மச் சக்கரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அசோகன், அசோகன் என்றுதான் நம் மனம் கூவியழைக்கிறது.

அவன் கனவும் இதுதானே!

காற்றிலே கம்பீரமாகப் பறந்தாடும் சுதந்தர இந்தியாவின் மணிக் கொடியின் நடுவிலே தர்ம சக்கரம் சுழல்கிறது, மீண்டும் அசோகன் கனவு உயிர் பெற்றெழுந்து ஓங்கி யெழுந்து சுழல்வது போல!

இழந்த விண்

[ரா. பு. தங்கராஜன்]

★

சித்தன்ன வாசலிலே தீட்டியுள்ள சித்திரங்கள்
சித்தக் களிப்பூட்டச் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன்.
தாமரை பூத்திருக்கும் தண்ணீர்த் தடத்தினையும்
காமன் துணைபோன்ற கட்டழகி தன்னுருவும்
பெண்ணை வெறுப்பதே பேரின்பப் பாதையென
எண்ணும் சமணர் எழில்பெறவே தீட்டியதேன்?
நில்லா உலகை நிலையாக்க எண்ணினரோ?
பொல்லா எழிலுருவைப் போற்றிவைத்த தென்னேயோ?
சிந்தனை வீதியில்யான் செல்லும் பொழுதினிலே
பந்த உலகத்தின் பற்றறுத்த ஓர்துறவி
கண்ணில் அருள்மின்னக் காவி உடைமிளிரக்
கண்ணெதிரே தோன்றக் கருணையுரு வைப்பணிந்தேன்.
சித்திரச் சாலையுள்ளே சென்றவ் வெழிலணங்கின்
சித்திரத்தின் முன்னே தியானத் தமர்ந்துவிட்டார்.
முற்றும் துறந்த முனிவர் செயல்கண்டிவ்
வற்புதத்தை எண்ணிமிக ஆச்சரியங் கொண்டேனே!
தாமரையாள் செங்கதிரோன் தன்னை அழைப்பதுபோல்
மாமுனிவன் கண்கள் மலர்ந்தனசிந் நேரத்தில்.
என்னை அருகழைத்தே என்ஐயம் கேட்டுப்பின்
புன்முறுவல் பூத்துப் புகன்றான் தவமுனிவன்:
"புன்னகை செய்து நிற்கும் பூக்கள் தமைத்தழுவித்
தென்றல் வரும்வழியில் தேனில் இசைகலந்து
கானக் கருங்குயிலும் காதலுற்றுக் கேட்டுநிற்க
வானில் விருந்தளிக்கும் வண்டின் இசைபருகிக்
கஞ்சமலர் வாவிக் கரையில் அமர்ந்திருந்தேன்
நெஞ்சமெல்லாம் பாட்டின் நினைவன்றி வேறில்லை.
பொய்கைக் கரையில் புதியதோர் பண்எழவே
மெய்சிலிர்த்து நின்றேன். மறுகரையில் ஓரணங்கு

கல்லைக் கனிவிக்கும் கன்னற் சுவைமொழியில்
சொல்லை அமுதத்தில் தோய்த்து வழங்கிநின்றாள்.
கிள்ளை மொழியாளின் கீத வலைதனிலே
உள்ளம் விழுந்திடவும் உன்மத்தங் கொண்டேனே.
என்னென்று சொல்வேன் எழிலின் விளையாட்டை!
முன்னர் அறியாத மோக மயக்கத்தில்
தள்ளிவிட்டாள் என்மனதைத் தார்குழலாள் வெற்றி
யுற்றாள்;
உள்ளத்தில் காதல் உணர்ச்சி நிறைந்ததுகாண்!
மெல்லியபூந் தென்றலிலே மிதந்த வனமலர்போல்
மெல்லியலாள் என்னை வணங்கி யருகணைந்தாள்.
"என்புருகப் பாடும் எழிலமுதே நீயாரோ?
இன்பத் தமிழ்க்கலையே இவ்வுருவங் கொண்டதுவோ?"
என்று வினவிடவும் ஏந்திழையாள் நாணமுடன்
நின்றாள்; தலைகுனிந்து நீண்ட விழியிரண்டும்
நெஞ்சைப் பிளந்திடவும் நேரிழையாள் கூறுகின்றாள்:
"அஞ்சலி செய்கின்றேன்; ஆடற் கணிகையான
செங்கமலம் என்றென்னைச் செப்பிடுவார்" என்றுரைத்
தாள்

"கங்குற் பொழுதில் கமலம் மலர்வதையான்
எங்குமே கண்டதில்லை; என்னே புதுமை!" யென்றேன்.
"கங்குற் பொழுதில் கதிரோன் எழுந்ததன்றோ
விந்தை" எனவுரைத்து வேல்விழியை வீசிவிட்டாள்
சிந்தை புதுவழியில் செல்லத் துணிந்ததுகாண்!
வாவிக் கரையருகே வான்மதியின் முன்னிலையில்
ஆவி மலந்துவிட்டோம் ஆரமுதம் உண்டோமே!
மற்றைநாள் மாலை மதுவிழியைக் காண்பதற்கு
முற்றும் தடையாக மூண்டார் குருதேவர்.
நில்லா எழிலும் நிலையற்ற பொய்யுடலும்
பொல்லாப் பிணியனைய பூவையர் தம்மியல்பும்
விண்டார் குருதேவர்; வேதனை யூட்டிவிட்டார்.
'பெண்ணை விரும்பிப் பெரும்பே றிழக்காதே!'
என்றெல்லாம் கூறியவர் என்னைத் தடுத்துவிட்டார்;
மாறாத வண்ணம் மலர்க்கணையான் தீட்டிவிட்டான்.

மாருத வண்ணத்தால் மற்றவற்றை வெற்பினிலே
சித்திரித்தேன்; கண்டகுரு சீற்றம் மிகக்கொண்டு
புத்திமதி கூறிப் பொழுதைவீ ணாக்காமல்
என்னைத் தனியேவிட் டெங்கேயோ சென்றுவிட்டார்.
அன்று மறைந்தவரை அப்புறம்நான் காணவில்லை.
விண்ணை இழந்தேன், வருந்தவில்லை. காதலுற்ற
பெண்ணை இழந்து பெரும்பித்தன் ஆகிவிட்டேன்.
எத்தனையோ நாட்கள் எழிலணங்கைக் காண்பதற்குப்
பித்தனைப்போல் காத்திருந்தேன் பொய்கைக் கரையி
னிலே
நாடெல்லாம் சுற்றி நலிந்தேன்; அவளுருவைத்
தேடித் திரிந்தலுத்தேன்; தேயம் பலசென்றேன்.
எத்தனையோ ஆண்டுகள்! எத்தனையோ நூற்றாண்டு!
சித்திரத்தைப் போன்றவொரு ஜீவனையான் காணவில்லை.
மண்ணகத்தை விண்ணகமாய் மாற்றும் வலிமையுள்ள
பெண்ணிவளை யன்றியொரு பேரின்ப வீடுண்டோ?
வீடு குகையிதுவே, விண்ணின்பம் இவ்வனிதை!
கூடலுக்குச் சாட்சி குளிர்பூந் தடமிதுகாண்!''
என்றுரைத்தே அம்முனிவன் எங்கோ மறைந்துவிடச்
சென்ற தடம்வழியென் சிந்தனை மீண்டதுவே!



ஸ்ரீகாந்தன்

ஆசிரியர்:
சரத்சந்திரசட்டர்ஜி

மொழிபெயர்ப்பு:
ஆர். ஷண்முகசுந்தரம்

நான் வாழ்க்கை முழுவதையும் நாடோடியாகவே கழித்து விட்டேன். இந்த நாடோடி வாழ்க்கையின் கடைசி காலத்தில் அதைப்பற்றி நினைத்துப் பார்த்தால், எனக்கு எத்தனையோ விஷயங்கள் நினைவுக்கு வருகின்றன.

சிறு வயதிலிருந்து கிழ வயது வரையிலும் ஊர் சுற்றியே கழித்தேன். என்னைச் சேர்ந்தவர்கள் – சேராதவர்கள் அனைவருமே என்னைப் பற்றிப் பேசும் பொழுது 'ச்சீ ச்சீ' என்று சொல்லுவதைக் கேட்டுக்கேட்டு எனது வாழ்க்கையிலும் இந்த 'ச்சீ ச்சீ' யைத் தவிர வேறு பொருள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ரொம்ப நாளைக்குப் பிறகு இன்று நினைவு மாலை தொடுக்க ஆரம்பிக்கையில், வாழ்க்கையின் ஆரம்பத்தில் இந்தச் 'ச்சீ ச்சீ'யை அனைவரும் எண்ணிய அளவு அது பெரிதல்லாத தாயிருக்கலாம் என்று தோன்றுகிறது. கடவுள் உலகத்திற்கு தனது சிருஷ்டியை அனுப்பும்போது அவன் நல்ல பையன் என்று பேர் எடுப்பதற்கான சர்தர்ப்பத்தைஏற்படுத்துவதில்லை. அதோடு வண்டி வாகனுதிகளுடன் சுற்றுப் பிரயாணம் செய்து விதப் விதப் பெயரிட்டு புத்தகம் வெளியிடும் கெட்ட ரசனையையும் அவனுக்குத் தருவதில்லை. ஏதோ புத்தி கொஞ்சம் கொடுக்கத்தான் கொடுக்கிறுர்; இருந்தாலும் உலகத்துச் சனங்கள் அவனைப் 'புத்திசாலி' என்று சொல்வதில்லை. இந்தக் காரணத்தால் அவனுடைய போக்கு விசித்திர மானதாகி விடுகிறது. அவனுக்குப் பலவற்றைப் பார்க்க வேண்டுமென்கிற ஆசையும், தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவும் அளவு கடந்து விடுகிறது. அதைப்பற்றி விபரமாகக் கூறப்போனுல் இந்தப் 'புத்திசாலி'கள் விழுந்து விழுந்து சிரித்து செத்தாலும் செத்து விடுவார்கள். அதற்கப்புறம் அந்த மக்குப் பையன் எப்படியோ ஆதாவற்று கெட்டவர்கள் கவர்ச்சியால் கெட்டவனுகி, அடி உதை வாங்கிக் கொண்டு கடைசி

யில் கெட்ட பெயருடன் எங்கோ போய்விடுகிருன். பிறகு வெகு நாள் வரையிலும் அவனைப் பற்றிய தகவலே தெரிவதில்லை.

சரி, அவைகள் எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நான் சொல்ல வந்தவைகளைச் சொல்கிறேன். சுற்றுப் பிரயாணம் செய்வதும் பிறகு அதைப்பற்றி வர்ணிப்பதும் இரண்டும் ஒன்ருகாது. இரண்டு கால் உள்ள யாரும் சுற்றுப் பிரயாணம் செய்யலாம். ஆனுல் இரண்டு கை உள்ளவர்கள் அனைவரும் எழுதிவிட முடியாது. எழுதுவதென்பது மிகவும் சிரமமான காரியம். அது தவிர, ஆண்டவன் எனக்கு துளிக்கூட கற்பனையை அளிக்கவில்லை. இந்த ஊனக் கண்களில் படுவதைத்தான் பார்க்கிறேன். மரத்தை மரமாகத்தான் பார்க்கிறேன். மலை, மலையாகத்தான் தோன்றுகிறது. தண்ணீரைப் பார்த்தால் தண்ணீரைத் தவிர வேறு ஒன்றும் தோன்றுவதில்லை. ஆகாயத்திலுள்ள மேகத்தை கழுத்து வலிக்க வலிக்க அண்ணாந்து பார்த்தாலும் அவைகள் மேகமாகத்தான் காக்ஷி அளிக்கின்றன. அங்கே யாருடைய அடர்த்தியான கூந்தலும் மருந்துக்குக் கூடத் தென்படுவதில்லை. சந்திரனைப் பார்த்துப் பார்த்து கண் ஒளி மங்கி விட்டது. ஆனுல் அங்கும் யாருடைய முக மண்டலத்தையும் தரிசிக்க வில்லை. இவ்விதம் ஆண்டவனே பார்த்து வஞ்சித்து விட்டவனிடம் கவித்வ சக்தி எங்கிருக்கும்? உண்மையான விஷயங்களை நேராகக் கூறலாம். அந்த சக்தி வேண்டுமானுல் இருக்கலாம். ஆகையால் நான் அப்படியே செய்யப் போகிறேன்.

நான் என் நாடோடி யானேன் என்று சொல்வதற்குமுன், வாழ்க்கையின் அருணேதயத்தில் எனக்கு அந்த போதையை அளித்த மனிதனைப் பற்றி அவசியம் சொல்லியாக வேண்டும். அவனுடைய பெயர் இந்திர நாதன். எங்களிருவருக்கும் ஒரு 'புட்பால்' பந்தயத்தின் போது பரிச்சியம் உண்டாயிற்று. இன்று அவன் உயிருடன் இருப்பதும் இல்லாததும் எனக்குத் தெரியாது. ஏனென்ருல் அவன் ஒரு வருஷத்திற்கு முன் ஒரு காலையில் குடும்பத்தை விட்டு துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு போனவன் மறுபடி திரும்பி வரவேயில்லை. அடடா! அந்த நாள் இன்றும் எவ்வளவு நன்ருக ஞாபகத்திலிருக்கிறது!

பள்ளிக்கூட மைதானத்தில் இந்து-முஸ்லீம் மாணவர்களுக்கு 'புட்பால்' பந்தயம் நடந்தது. மாலை யாகிக் கொண்டிருந்தது. அதிலே மூழ்கிப்போய் பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. 'விடாதே!' அடக் கடவுளே இது என்ன? பலமானக் கூப்பாடுகளும், 'உதை பயலை. பிடி படவாவை' என்ற கூச்சல்களும் எழுந்தன. எனக்கு ஒன்றும் புரியவில்லை. இரண்டு மூன்று நிமிஷத்திற்குள் அங்கிருந்தவர்கள் போன இடமே தெரியவில்லை. எனது முதுகிலும் தலையிலும் சரமாரியாக பிரம்படி விழுந்ததும் தான் எனக்கு நினைவு வந்தது. ஐந்தாறு முஸ்லீம் மாணவர்கள் என்னை ஓட விடாமல் சூழ்ந்து கொண்டார்கள்.

அப்புறம் ஒரு அடி, அதற்கப்புறமும் ஒரு அடி. அந்தச்சமயத்தில் மின்னல் போல் ஓடி வந்து என்னருகில் நின்றவன்தான் அந்த இந்திர நாதன்.

அவன் நிறம் கறுப்பு நெற்றி அழகானது. முகத்தில் இரண்டொரு அம்மை வடுக்கள். உயரம் என் உயரம்தான். ஆனால் வயதில் என்னை விட மூத்திருப்பான். "பயப்படாதே. என் பின்னால் வந்துவிடு" என்றான்.

அவன் நெஞ்சில் இருந்த உரமும் கருணையும் சாதாரணமானதல்ல. அவனுடைய இரு கரங்களும் அசாதாரணமானவை என்பதிலும் சந்தேகமில்லை. அவன் பலமுடையவன் என்பதல்ல இதன் பொருள்.

இரண்டொரு நிமிஷங்களுக்குள் அவனுடன் வெளியில் வந்து விட்டேன். உடனே இந்திரன், "ஓடு" என்றான்.

நான் ஓடிக்கொண்டு, "நீ?" என்றேன்.

அவன் மிகுந்த வருத்தத்துடன் "அடக் கழுதே நீ ஓடு!" என்றான்.

கழுதையானாலும் வேறு என்னவானாலும் சரி என்று நான் பிடிவாதமாகத் திரும்பிவந்து, "முடியாது, நான் ஓட மாட்டேன்" என்றேன்.

சிறுவயதில் யார்தான் அடி உதை பட்டிருக்க மாட்டார்கள்? இருந்தாலும் நான் கிராமத்துப் பையன். இதற்குமுன் கட்சி கட்டிக் கொண்டு அடி உதை பட்டது கிடையாது. அப்படி இருந்தும் என்னால் தனியாக ஓட முடியவில்லை. இந்திரன் என்னை முறைத்துப்பார்த்து, "ஓடாமல் நின்று கொண்டிருந்து அடி வாங்குபவனா? பார், அந்தப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார்கள். சரிவா ஓடலாம்" என்றான்.

ஓடுகிறகாரியம் என்னால் நன்கு செய்ய முடியும். நாங்கள் பெரிய வீதிக்கு ஓடி வருவதற்குள் இருள் சூழ்ந்து கொண்டது. கடைகளில் விளக்கேற்றி விட்டார்கள். முனிசிபல் விளக்குகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எரிந்து கொண்டிருந்தன. நல்ல கண் பார்வை அற்றவர்கள் இந்த விளக்கின் உதவிகொண்டு ஆள் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. எதிரிகள் பயம் இனிக் கிடையாது.

ஓடி வந்தது, உதை வாங்கியது இவைகள் ஒன்றும் நடவாதது போல இந்திரன் மிக இயற்கையாக "உன் பெயர் என்னடா?" என்றான்.

"ஸ்ரீ......காந்......தன்."

"ஸ்ரீகாந்தனா? சரி" என்று சொல்லிவிட்டு ஜேபிலிருந்து எதையோ எடுத்து வாயில் போட்டுக் கொண்டு எனக்கும் கொடுத்தான்.

"என்ன அது?"

"புகையிலை"

"புகையிலையா? நான் போடுவதில்லை" என்றேன்.

அவன் மிகுந்த ஆச்சரியத்துடன் "புகையிலை போடுவதில்லையா? என்னடா சுத்தக் கழுதையாக இருக்கிறாய்? நன்றாகப் போதை யிருக்கும். சும்மா போடு" என்றான்.

போதை தரும் வஸ்துக்களைப் பற்றி அது வரையில் எனக்கு ஒன்றும் தெரியாது. ஆகையால் நான் தலையை ஆட்டி மறுத்து விட்டேன். அவன் எனக்குக் கொடுத்ததையும் சேர்த்து வாயில் போட்டுக்கொண்டான்,

"சரி, சிகரெட்டாவது குடி" என்று இரண்டு சிகரெட்டும் தீப் பெட்டியும் எடுத்தான். ஒன்றை என்னிடம் கொடுத்து விட்டு மற்றதைத் தன் கையில் வைத்துக் கொண்டான். பிறகு தனது இரு கரங்களையும் விசித்திரமாகக் குவித்து சிகரெட்டைப் பற்ற வைத்து 'தம்' இழுக்க ஆரம் பித்தான். இரு 'தம்'மில் அரைச் சிகரெட் தீர்ந்து விட்டது. நாற் புரமும் சனங்கள் நின்று கொண் டிருந்தார்கள். நான் மிகவும் பயந்து போனேன். நான் பயத் துடன், "குடிக்கும்போது யாரா வது கண்டு கொண்டால் என்ன செய்வது?" என்றேன்.

"பார்த்தால் என்ன? எல்லோ ருக்கும் தெரியும்" என்று கூறி விட்டு உல்லாசமாக சிகரெட்டை பிடித்துக் கொண்டு போய்விட் டான். ஆனல் என் மனதில் அவன் நன்கு பதிந்து விட்டான்.

அன்று நடந்த பல சம்பவங்கள் இன்று ஞாபகத்துக்கு வருகின் றன. ஆனல் அன்று அந்த விசித் திரமான பையனிடம் எனக்கு அன்பு உண்டாயிற்ரு அல்லது புகையிலே, சிகரட் இவைகளை எல் லோர் எதிரிலும் உபயோகித்த தற்கு வெறுப்பு உண்டாயிற்ரு என்பது மட்டும் ஞாபகத்தில் இல்லே.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஏறக்குறைய ஒரு மாதம் கழிந் திருக்கலாம். ஓரிரவு மிகுந்த உஷ் ணமாகவும், கனத்த இருள் சூழ் ந்துமிருந்தது. ஒரு மர இலேகூட அசையவில்லே. அனைவரும் மேல் தளத்தில் படுத்துக் கொண்டிருந் தார்கள். மணி பனிரண்டு அடித் தும் யாருக்கும் தூக்கம் வரவில்லே. திடீரென எங்கிருந்தோ குழலிசை இனிமையாக வந்தது. சாதாரண சரளிவரிசைதான். எத்தனையோ முறை இதற்குமுன் கேட்டிருந் தாலும் இப்படி இசையில் மயங்கி யது கிடையாது. எங்கள் வீட் டிற்குத் தென்புறத்தில் ஒரு பெரிய மாந்தோப்பு இருந்தது. அதற்குப் பல பாகஸ்தர் களிருந்ததால் யாரும் கவனியாமல் ஒரு காடுபோலிருந்தது. அந்தத் தோப்பி லிருந்துதான் குழலிசை வருவது போலிருந்தது. அத்தை எழுந்து உட்கார்ந்து கொண்டு தனது மூத்த மகனிடம் "அடே நவீனு, இந்தக் குழல் ஊதுவது ராய் வீட்டு இந்திரன் தானே?" என்ருள். உடனே நான் அவனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். உடனே பெரிய அண்ணு, "அந்த வனத்துக்குள் அந்தப் போக்கிரிப் பையனைத் தவிர வேறு யார் போய் வாசிக்க முடியும்?" என்ருர்.

"அடே, அவன் அந்த மாந் தோப்பிற்குள்ளவா வந்திருக் கிருன்?"

"ஆமாம்" என்று பெரிய அண்ணு சொன்னர்.

அந்தக் கும்பிருட்டில் அத்தை என்ன நினைத்துக் கொண்டாளோ பாவம், நடுங்கினுள். பிறகு மிகுந்த கவலேயுடன், "அவன் அம்மா கூடத் தடுப்பதில்லையா? அந்தத் தோப்பில் எத்தனைபேர் பாம்பு கடித்து இறந்திருக்கிருர் கள்? இந்த இருளில் இந்நேரத்தில் எதற்காக வரவேணும்?" என்ருள்.

பெரிய அண்ணு சிரித்துக் கொண்டு, "அந்த வீதியிலிருந்து இந்த வீதிக்கு வருவதற்கு அது நேர் வழி. உயிருக்குத் துணிந்த வன் எதற்காக அம்மா பெரிய

வீதியைச் சுற்றிக் கொண்டு வருகிறான்? அங்கு பாம்பு இருந்தாலும் தேள் இருந்தாலும் அவனுக்கென்ன? சீக்கிரம் வரவேண்டியது தானே அவனுக்கு முக்கியம்!" என்றார்.

"தீர்க்காயுளாய் இருக்கட்டும்" என்று கூறிவிட்டு அத்தை பேசாமலிருந்து கொண்டாள். குழலிசை தெளிவாகக் கேட்டது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஸ்வரம் குறைந்து கடைசியாக மறைந்தே விட்டது.

அவன் தான் அந்த இந்திரநாதன். அவனைப் போலவே பலமுள்ளவனாகவும், சண்டை சச்சரவுகளுக்குப் பயப்படாதவனாகவும், அவனைப் போல் புல்லாங்குழல் வாசிக்கத் தெரிந்தவனாகவுமிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால், அவனிடம் எவ்விதம் தொடர்பு கொள்வது? அவன் எனக்கு வெகு தூரத்தில் இருந்தான். அவன் அப்போது பள்ளியில் கூடப் படிப்பதில்லை. ஹெட்மாஸ்டர் அவனை ஏதோ தண்டிக்க எண்ணியதும் அவர் முதுகில் ஓங்கி ஒரு குத்து விட்டு விட்டு ஓடி வந்தான். மறுபடி அந்தப் பக்கமே போக வில்லையாம். வெகு நாளைக்கப்புறம் அவன் என்னிடம் தான் குற்றவாளி அல்ல எனக் கூறியிருக்கிறான். ஹிந்துஸ்தானி பண்டிதர் வகுப்பில் தூங்குவாராம். அப்படி அவர் ஒரு சமயம் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவருடைய உச்சிக் குடுமியைக் கத்தரித்து விட்டானாம். அதனால் அவருக்கு எவ்விதத் தொந்திரவும் ஏற்பட வில்லையாம். ஏனென்றால் பண்டிதர் வீட்டிற்குப்போய் ஜோபியில் கையை விட்டாராம். உச்சிக்குடுமி அகப்பட்டு விட்டதாம். அது எங்கும் காணாமல் போய்விடவில்லை. அப்படி இருந்தும் பண்டிதர் கோபம் தாளாமல் ஹெட்மாஸ்டரிடம் புகார் செய்யப் போய் விட்டாராம். இந்த விஷயம் இந்திரனுக்கு இன்னும் விளங்கவில்லை. ஒருதரம் பள்ளிக்கூடத்துச் சுவர் தாண்டி ஓடி வந்து விட்டால் மறுபடி அதற்குள் நேர்வழியில் நுழைய முடியாது என்பது மட்டும் அவனுக்கு நன்கு விளங்கியது. எவ்வளவு சிறு வயதாயிருந்தாலும் மறுபடி பள்ளிக் கூடத்துக்குள் நுழைய முடியாது.

இந்திரன் பேனாவை எறிந்து விட்டு படகு தள்ளும் துடுப்பைக் கையில் எடுத்துக் கொண்டான். அன்றிலிருந்து கங்கையில் படகு மீதே குடியிருக்கத் தொடங்கினான். அவனுக்கு ஒருசிறிய படகு இருந்தது. மழையானாலும் புயலானாலும் இரவானாலும் பகலானாலும் சதா அவன் படகு மீதே இருப்பான். சில சமயங்களில் கங்கையில் படகு போன போக்கில் விட்டுவிடுவான். பத்துநாள் பதினைந்துநாள் வரைக்கும் கூட ஒரு தகவலுமின்றி இருந்து கொள்வான்.

இவ்விதம் அவன் ஒருநாள் படகில் போய்க் கொண்டிருக்கும் போது அவனைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போதெல்லாம் அவனிடம் எப்படியாவது சிநேகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அளவு கடந்து இருந்தது. அதைச் சொல்லத்தான் இவ்வளவும்.

என்னைத் தெரிந்தவர்கள் எல்லாம் "இது உனக்கு அழகல்ல தம்பி! நீயோ ஏழைப் பையன். அதுவும் ஊர் விட்டு ஊர் படிக்க

வந்திருக்கிறாய். அவனோடு சேர்வதற்கு உனக்கு இவ்வளவு ஆவல் எதற்கு? அப்படி இல்லாதிருந்தால் இன்று நீ.........'' என்று சொல்லுவார்கள்.

சரி சரி! அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. இந்த வார்த்தைகளை ஆயிரக் கணக்கானவர்கள் லக்ஷக் கணக்கான தடவை சொல்லி யிருக்கிறார்கள். என்னை நானே கோடிக் கணக்கான தடவை இதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆனால் ஒரு பலனுமில்லை. அவன் யார் என்பதை உங்களில் யாருமே சொல்லிவிட முடியாது. அப்படி இல்லாதிருந்தால் நான் எப்படி ஆகி இருக்க முடியும் என்றுதான் நீங்கள் எப்படிச் சொல்லக்கூடும்? இத்தனை மனிதர்களை விட்டு அந்த நாடோடியிடம் ஏன் எனக்கு அவ்வளவு அன்பு உண்டாயிற்று? அவனைச் சந்திப்பதற்கு நான் ஏன் துடித்துக் கொண்டிருந்தேன் என்பது அவன் ஒருவனுக்குத்தான் தெரியும்.

அந்த நாள் எனக்கு நன்கு நினைவிருக்கிறது. நாள் முழுதும் மழை பெய்தும் கூட ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன. மாலை நெருங்க நெருங்க கனத்த இருள் பரவிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு நாங்கள் வெளிக் கூடத்தில் மண் விளக்கை ஏற்றி வைத்துக் கொண்டு படிப்பதற்கு உட்கார்ந்து கொண்டோம். வெளி வராந்தாவில் தாத்தா கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டிருந்தார். அடுத்த பக்கத்தில் ராமகமல பட்டாச்சார்யா அபின் குடித்து விட்டு இருளில் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தார். இந்துஸ்தானி வேலைக்காரன் துளசி தாசர் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தான். அறைக்குள் நாங்கள் மூவரும் நடு அண்ணாவின் மேற் பார்வையில் மௌனமாகப் படித்துக் கொண்டிருந்தோம். நானும் சின்ன அண்ணாவும் மூன்றாவது நாலாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம். நடு அண்ணா இரண்டு தரம் என்டரன்ஸில் பெயில் ஆகி மூன்றாந்தரம் தயாராகிக் கொண்டிருந்தார். அவருடைய சர்வாதிகாரத்தின் கீழ் யாருக்கும் ஒரு நிமிஷம் கூட வீணாக்கத் துணிவு உண்டாகாது. ஏழரை மணியிலிருந்து ஒன்பது மணிவரையிலும் தான் நாங்கள் படிக்கும் நேரம். அப்போது நாங்கள் ஏதாவது பேசி அவர் 'பாஸ் ஆக'ப்போகும் படிப்பைக் கெடுத்து விடக்கூடாது. அதற்காக இருபது முப்பது சிறிய துண்டுக் காகிதங்கள் கத்திரித்து வைத்திருப்பார். அதில் ஒன்றில் 'வெளியில் போக வேண்டும்' மற்றொன்றில் 'மூக்குச் சிந்த வேண்டும்' வேறு ஒன்றில் 'தண்ணீர் குடிக்க வேண்டும்' என்று எழுதியிருக்கும். ஜதீன் அண்ணா 'மூக்குச் சிந்தும்' டிக்கட் ஒன்றை நடுஅண்ணா முன்னால் வைத்தான். நடுஅண்ணா அந்த டிக்கட்டில் '8-30-லிருந்து 8-33$\frac{1}{2}$ வரையிலும்' என்று எழுதினார்.

அதாவது அந்த நேரத்துக்குள் அவன் மூக்கைச் சிந்தி விடவேண்டும். ஜதீன் அண்ணா வெளியில் போனதும் சின்ன அண்ணா 'எச்சில் துப்பப் போக வேண்டும்' என்ற டிக்கட்டை முன்னால் வைத்தான். நடு அண்ணா 'முடியாது' என்று எழுதி விட்டார். சின்ன அண்ணா சிறிது நேரம் மூஞ்சியை 'உம்' மென வைத்துக் கொண்டிருந்தான். பிறகு 'தண்ணீர் குடிக்க' என்ற டிக்கட்டை வைத்து உத்திரவும் பெற்றுக்

கொண்டான். உத்திரவில் 8-41 நிமிஷத்திலிருந்து 8-47 நிமிஷ வரையிலும் அனுமதி கிடைத்திருந்தது. அதற்குள் ஜதீன் திரும்பி வந்து டிக்கட்டைத் திருப்பிக் கொடுத்தான். நடு அண்ணா மணி பார்த்து குறித்துக் கொண்டு நோட் புத்தகத்தில் அந்த டிக்கட்டை ஒட்டி வைத்துக் கொண்டார். வாரக் கடைசியில் எல்லா டிக்கட்டையும் எடுத்து அனுமதித்த நேரத்திற்குள் ஏன் வரவில்லை என்ற விசாரணை நடத்துவார்.

இந்த வித முறையால் எங்களுக்கோ அவருக்கோ துளி நேரம் கூட வீணாகாமல் இருந்தது. நாள் தோறும் ஒண்ணரை மணி நேரம் இவ்விதம் படித்த பிறகு இரவு படுக்கப் போகும் போது நிச்சயம் சரஸ்வதி தேவி எங்களை படுக்கை வரையிலும் கொண்டு வந்து விடுவாள். மறு நாள் வகுப்பில் கிடைக்கும் ஏராளமான பாராட்டுகளுடன் தான் நாங்கள் வீடு திரும்புவோம் என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். நடு அண்ணாவை அந்த முட்டாள் பரிட்சை ஏமாற்றிக் கொண்டே வந்தது.

(தொடரும்)

மயிலைக்காளை

"சேது"

நான் வளத்த மயிலைக்காளை நல்லாப்பாயுமா
நாளனிக்குப் பொங்கலிலே நல்லாஓடுமா
நாலுபேரு நடுவேநம்ம வூட்டுக்காளைதான்
நலுங்காம லாடியோடி நடுங்கவைக்குமா?

நாம்பொறந்த நாளேயந்த மயிலை பொறந்துச்சு
நான்வளர்ந்த வளப்பைப்போல அதுவும் வளந்துச்சு
காட்டுமல்லி போலநானும் கன்னி பூத்திட்டேன்
கருத்தவண்டு போலக் காளை கணக்கா வளந்துச்சு.

இந்தக்காளையைப் புடிச்சவருக் கென்னெக் கொடுக்கணும்
இன்னுசொல்லி எங்கஅப்பென் என்னெ வளத்துது
இன்னும்ரெண்டு நாளில்இந்த வேடிக்கை தெரியும்
எந்தக்காளை இந்தக்காளையை எப்படிப் பிடிக்குமோ!

கருப்புமச்சான் காளைபிடிச்சுக் கைகண்டவராம்
காடுகரம்புலே மாடுபுடுச்ச பழக்கமுமுண்டாம்
ஊருக்குள்ளே நாலுபேரு சொல்லிக்கிறுங்க
ஒத்தாங்கரை காளை அன்னிக்கி ஒடுங்கிடுச்சாமே.

அன்னம்போல நடைநடந்து அந்தியிலே ஒருநாள்
சின்னத்தோண்டி தண்ணிகொண்டு தாண்டிவந்தேன் நான்
சீட்டியடிச்சுக்கூப்பிட்டது யாருன்னு பாத்தேன்
கருப்புமச்சான் நின்னுகிட்டு கண்ணடிச்சுது.

மாலையிலே காளை நெனைப்பு மல்லாடி வருது
மச்சான் தோளை பாக்குறப்போ மயங்குது மனது
கண்ணெ ரெண்டும் பாக்குறப்ப கலங்குது மனது
காளையோடு கலந்து வாழ காலம் வந்திடுமா?

மந்தக்கரை மைதானத்தில் மாட்டுப் பந்தயம்
மக்களெல்லாம் ஒண்ணுகூடி மயங்கி நிக்குது
மஞ்சக்குளிச்சு முகமினுக்கி மையுமிட்டுகிட்டு
மயிலைக்காளையை பிடிச்சுகிட்டு மங்கைநாம் போனேன்.

மாலைக்கால மஞ்சள் வெயில் மயக்குது ஆளை
மயிலைக் காளையை அவுத்துவுட்டா பாயுது ஜோரா
இடுப்புவேட்டியை இறுக்கிக்கட்டி எத்தனையோபேர்கள்
எங்க காளையை பிடிக்கவந்தும் ஏதுமுடியலே.

கெடை ஆட்டைப் பிடிக்கப்பாயும் புலியதுபோல
கடெசியிலே ஓடி வந்து ஒரே பாய்ச்சலாய்
கனெச்சுவந்தது பாக்கப்போனு கருப்புமச்சான் தான்
காளைதனை பிடிச்சடக்கி கட்டிப் போட்டுச்சு.

மயிலைக் காளையைப் பிடிச்சடக்கிய மருமவப்புள்ளே என்
கருத்தகுட்டி காமாச்சியைக் கட்டிக்கவேணும்
கண்ணாலம் பண்ணிக்கிணும் காலங்காத்தாலே
கடுகிநீங்க வந்துடுங்க வீட்டுக்குப் போவோம்.

பருந்து பேசுகிறது

டி. ஒ. வீரப்பன்

சாயங்காலம் மணி ஐந்திருக்கும். நான் காபி அருந்தியதால் உண்டான வியர்வையைப் போக்கக் காற்றுக்காக மாடி வராண்டாவில் போடப்பட்டிருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்தேன். தென்றல் காற்று குளு குளுவென்று வீசி மனதிற்கு நிம்மதியை அளித்தது. காற்றின் சுகத்தை அனுபவித்துக் கொண்டே என் மனம் பற்பல இன்பக் காட்சிகளை சிருஷ்டித்துக் கொண்டிருந்தது. அச்சமயம் ஒரு பருந்து பறந்து வந்து துணிகள் உலர்த்துவதற்காகக் கட்டியிருந்த மூங்கில் மேல் உட்கார்ந்தது. உடனே என் கற்பனைக் காட்சி, கலைந்து அதைக் கவனித்தேன்.

என்னை நோக்கிய பருந்து, 'என்ன சிந்திக்கிறாய், நான் சொல்வதைக் கவனித்துக் கேள்' என்று கூறியது எனக்குப் பன்மடங்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. பருந்து பேசுவது! என் ஆச்சரியம் நீங்கு முன் சொல்லத் தொடங்கியது அது:

"நான் எங்குமே சுலபமாய் சுற்றித் திரிய முடியும். ரயில், மோட்டார், வண்டி, சைக்கில் முதலியவைகள் தேவையில்லை. மனிதர்கள் தங்களை சுதந்தரர் என்று வீண் பிரமை கொள்கின்றனர். பம்பாய், டில்லி, சென்னை போன்ற நகரங்களில் அவர்கள் எவ்வளவு கவலையுடன் நடந்து செல்கின்றனர். சற்றே தவறினால் மோட்டார்களும் டிராம்களும், மோதிவிடும். எங்களுக்கு எவ்விதக் கஷ்டமுமில்லை. அங்கும் தாராளமாகப் பறந்து செல்லக் கூடும். உங்களைப் போல் தெருக்களின் பெயர் தெரிந்து கொண்டும், பிறரை விசாரித்துக் கொண்டும் போக வேண்டியதில்லை.

நாங்கள் எவருக்குமே சோற்றுக்கு பாரமாயிருந்து கொண்டு கஷ்டத்தைக் கொடுக்கவில்லை. வயல் வெளிகளில் சிதறிக் கிடக்கும் தானியங்களும், தெருக்களில் எறியப்படும் அசுத்தங்களுக்குமே காத்து நிற்கிறோம். அந்த விஸ்வாசத்திற்கே அந்த வீட்டின் மீது நன்றியுடனும் சுற்றிச் சுற்றி நிற்கிறோம். இந்த விஸ்வாசமும் நன்றியும் மனிதர்களுக்கு உண்டா? உண்ட வீட்டிற்கே இரண்டகம் நினைப்போர் எத்தனை பேர்? நன்றாக வாழ்ந்த நாட்களிலெல்லாம் வந்து வந்து மகிழ்ந்து விட்டு பிறகு அவர்கள் கெட்டுப்போன காலத்தில் எட்டியே பார்க்காத துரோகிகள் எத்தனை பேர்? எனென்றும் கேட்காத கிராதகர்கள் எத்தனை பேர்? நாங்கள் அப்படி நடக்கிறோமா? குழந்தைகளின் கைகளில் பக்ஷணம் ஏதாவது இருப்பின் அவற்றை நாங்கள் திருடுவதுண்மையே. ஆனால் மானிட வர்க்கத்துள் பந்துக்கள் முதலானோர்கள் திருடுவதற்கு மேலேயா? செல்வச் சீமான்கள் ஏழடுக்கு மாடிகளில் அறுசுவை ஆகாரம் இல்லாள் ஊட்ட வாழ்வதும், ஒரு சோற்றுப் பருக்கையும் இல்லாமல் இருக்க வீடும், உடுக்கத் துணியும் அற்றவர்களாய் எத்தனை பேர் கோவணாண்டிகளாய் ஏழை ஜனங்கள் நடந்து ஏங்கிச் செல்வது

மான பார பக்ஷங்கள், பேதங்கள், இரக்கமில்லாமை, எங்களுக்குக் கிடையாது. உங்களிடையே மத வேற்றுமை என்னும் பேய் இந்தியா முழுவதும் பரவி வருகிறது. வங்காளத்தில் புழு, பட்சி, மிருகங்களாகப் பிறந்திருக்கக் கூடாதா? ஏன் மானிடராய்ப் பிறந்தோம் என்று ஒவ்வொரு வட இந்தியருக்கும் எண்ணத் தோன்றுகிறது. எங்கள் பட்சி இனங்களிலும் எத்தனையோ "மதம்" இருக்கிறது. ஆனால் நாங்கள் மானிடர்களைப் போல் மத வெறியர்கள் அல்ல. எங்களுக்கு எங்களில் பாகிஸ்தான், இந்துஸ்தான் என்ற பிளவு கிடையாது? இந்த உலகத்திலுள்ள கானகம் முழுவதும் எங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தம். நாங்கள் எங்கும் சுதந்திரமாய்ச் சுற்றித்திரியலாம். எங்களிடையே மத வேற்றுமை கிடையாது.

மனிதர்கள் உயிர் இருக்கிற பரியந்தம் மனிதனைக் கொத்திக் கொத்தி அவன் சதையை எடுக்காமலே, எடுத்துத் தின்று விடுகிறார்கள். மாமியார் மருமகளின் சதையைக் கொத்திக் கொத்தி ஏன் அவளுடைய உள்ளத்தையே கொத்தித் தின்று விடுகிறாள். அந்தக் கொத்துதலால் புண்ணாகி, ரணமாகி வேதனை சகிக்காமல் அவள் குளம், கிணறுகளில் வீழ்ந்து தன்னுயிரையே போக்கிக் கொள்கிறாள். இது போலவே சம்பாதிக்கும் ஆண் மகன் ஒருவன் வீட்டிலிருந்தால் அவனைச் சுற்றிப் பலரும் சூழ்ந்து கொண்டு அவனுக்குப் பலவகையிலும் செலவுகள் வைத்து கொத்திக் கொத்தி உருப்படாமல் செய்து விடுகிறார்கள். இவர்களைப்போல் நாங்கள் கொத்துவதில் அவர்களுக்குத் துன்பமுமில்லை, கஷ்டமுமில்லை. அந்தச் சவம் நாறி துர்நாற்றம் வீசா முன்னரே அச்சதையைக் கொத்தி யுண்டு நாற்றத்தை யகற்றி உலக சுகாதாரத்தைக் காக்கிறோம். மனிதர்களை உயிரோடு வதைத்துக் கொத்தி யுண்ணும் துரோகிகள் கெட்டவர்களா? அவன் உயிரகன்று சவமான பின்னர் கொத்தி யுண்ணும் நாங்கள் கெட்டவர்களா? நாங்கள் குடியிருக்கும் வீடு எவ்வளவு சுகாதாரங் கொண்டது? ஐயோ மானிடர்கள் எத்தனை அசுத்தங்களுக் கிடையே குடியிருக்கிறார்கள்? அதிலும் நகர வாசங்களின் குடியிருப்பு அலங்கோலங்களோ அளவிட்டுரைக்க முடியாது? எங்களின் காதல் உற்பத்தி எத்தனையோ அந்தரங்கமாயுள்ளது.

மானிட வர்க்கத்திலோ, ஒரு நங்கை, யுவதி ஆனதற்கும், விவாகத்திற்கும், பிறகு சாந்தி விசேஷத்திற்கும் ஒவ்வொன்றுக்கும், நாடெங்கும் பறை கொட்டி முழக்கிடுவார். என்ன பேதமை இந்த மானிட வர்க்கத்திற்கு? இதை நினைக்க நினைக்க மானிட வர்க்கமே மேல் என்று கூறுகிறார்களே எப்படித்தான் நான் நம்புவேன்? மேடை மீதேறி ஸ்திரீ, புருஷ சமத்துவமும். பெண்கட்கு விடுதலையும் சுதந்திரமும் உண்டு; இதனை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று பிரமாதமாகப் பேசுவார்கள். ஆனால் தங்கள் பெண்களை அடிமைகளாக நடத்துகிறார்கள்! மானிடர்களாகிய நீங்கள் இவ்வளவு ஆபாச மூட்டைகளை வைத்துக் கொண்டு, எங்களைப் பகுத்தறிவு அற்ற பறவைகள் என்று கூறுகிறீர்கள். இதை நினைக்க, நினைக்க எனக்குச் சிரிப்பு சிரிப்பாக வருகிறது" என்று கூறி ஜிவ்வெனப் பறந்து சென்றது!



நெஞ்ச அரங்கிலே....

[அரு. பாபநாசம்]

நெஞ்ச அரங்கில்......

நிலவின் குளிர்வீச்சு மலர்க்கண்கள் வீசும் குளிர்வீச்சுப்போல!

தென்றல் அவள் மேனியினைத் தீண்டியது. அவள் கூந்தலின் சுருள்கள் மெல்ல பிறைநுதலை

மொய்த்தன. அவள் உள்ளம் ஏதோ ஒன்றிலகப்பட்டு தத்தளித்துக்கொண்டிருந்தது, மேகத்தால் தத்தளிக்கும் வானம் போல!

அவள் உள்ளம் பெருமூச்சினைச் சிந்தியது.

அவள் கண்கள் கண்ணீரைத் தூவிவிட்டன.

அழகின் பிம்பமவள். ஆனால் இப்பொழுது அழகாலே இன்னலுறுகிறாள்... "கலா! இன்னும் துயிலவில்லையா?"

இது அவள் கணவன் மாறன் குறல்...

அந்தக் குரல் அவள் சிந்தனைப் பறவையை உள்ளக் கூண்டுக்குக் கொண்டுவந்தது,

"சுவாமி! இன்று என்மனது சரியாயில்லை. மனக்குட்டையில் சஞ்சல அலைகள் தோன்றி மறைகின்றன... அந்த இரைச்சல் என் மனதைத் துயிலவிடவில்லை" என்றுள் கலா.

"கலா" அவன் உள்ளம் விம்மிய சொற்கள்...

"ஏன் சுவாமி?"

"உன் இன்பமொழிகள் வேண்டி எத்தனை நாள் காத்திருக்கிறேன் தெரியுமா, தென்றல் வேண்டி நிற்கும் முல்லைபோல!"

"சுவாமி! நான் பாவி. பாவத்தின் வடிவம் நான். தமிழ் நாட்டுப் பெண்களின் கற்பின் திறத்தைக் கெடுக்க வந்த கொடிய நஞ்சு நான். என்னைத் தீண்டினல் கூட பாவம். நாகப்பாம்பு நான்."

அவள் உள்ளம் கொட்டிவிட்ட உணர்ச்சிச் சொல் முத்துக்கள்...

அவள் கண்கள் கண்ணீரைத் தேக்கிவிட்டன.

"கலா, ஏன் அழுகிருய்?"

அவன் பயந்துபோய்க் கேட்ட கேள்வி.

"கலா அப்படியானல்..."

"ஏற்கனவே ஒருவருக்கு மனதைப் பறிகொடுத்த மங்கை நான்"

"மனம் வாங்கிய மகான் யார் கலா?"

"மகான்! என் வாழ்வு மலரில் தேன் அவர்...என் வாழ்வுச் சிப்பியில் வெடித்த முத்து...அவர். அவர்தான்..."

"யார் கலா?"

"என் குருவின் மகன்...கவிஞன் கீரன்"

"கீரன்!"

"ஆம் கீரன் தான்... என் நாட்டியக்கலை மொட்டை முகிழ்க்க வைத்த இளவேனில் அவர்"

"அப்படியானல் உன் நாட்டியக்கலை அவனுல் வளர்க்கப்பட்ட கிளியா?"

"ஆம்..."

"கலா! உன் வாழ்க்கையின் விவரத்தை எனக்கும் சிறிது கூற மாட்டாயா?"

"சுவாமி! வாழ்வின் பழைய கதையைக் கூற கேட்கிறீர்களே. அது சூரைக் காற்றல்லவா? என் உள்ளச் செடியை ஒடித்து விடுமே!"

"சும்மா சொல்லு கலா!"

"சுவாமி! எதைச் சொல்ல...... ஆயினும் கேளுங்கள். வாழ்க்கை மண்டபம் காலமெனும் அதிர்ச்சியால் இடிந்த கதையைக் கேளுங்கள்... வாழ்க்கைத் தோட்டத்தில் முளைத்த காதல் செடி ஒடிந்தகதையைக்கேளுங்கள்... இதே நிலாக் காலம்தான் எங்கள் காதல் வாழ்வைப் பின்னியது...... குருகுல வாழ்வில் அவர் வீணையின் நாதத்தை எழுப்பி விடுவார்... அவர்வாய் கவிதை பாடும். நான் ஆடுவேன். அவர் பாட்டில் என்ன நயம்......

"கூவும் குயிலின் குரலோ, வீசும் தென்றலின் பண்ணெலியோ அவர் இசையென்று எண்ணுவேன்.

உண்மையிலே அவர் என் உள்ள மலரை அவர் கீதத்தால் பறித்து விட்டார்... பல நிலவுகள்... இருள் அணங்கு நிலவுக் கண்ணுடியில் தன் அழகை நோக்கையில்...நான் ஆடுவேன் அவர் பாடுவார்...

ஒரு நாள்......

அவர் "சிலம்பின் பண்ணெலி சிவந்த பாதம் மீட்ட சேல்விழி துள்ளிப் பாய்ந்திட ஆடினுள் கலா" என்று பாடினர்......... வீணையின் நாதம் பாட்டுடன் கலந்தது. பாட்டினிமையில் நான் ஆடினேன் – என்னை மறந்தாடினேன். அவர் மெள்ள என் அருகே வந்தார். என்னை அப்படியே தூக்கிவிட்டார்...... நான் அவர் கரத்தில் வளைந்த கொடியாகக் கிடந்தேன். என் நெஞ்சம் பெரு மூச்சினைக் கிளப்பியது. எங்களிடையே சிறிது நேரம் மௌனம் நிலவியது.

"கலா உண்மையிலே நீ மிக அழகாக இருக்கிருய். கலா என் வாழ்வு முட்கள் நிறைந்த காடாக இருக்கிறது. நீ என்னை மணம் புரியாவிட்டால் என் வாழ்க்கை சிதையும்... நீ என் வாழ்வுக் காட்டில் செல்லும் ஒற்றையடிப் பாதையாக வருவாயா?" என்ருர் அவர்.

நான் அவர் கூறிய கருத்தை முகர்ந்து கொண்டேன். என் மனம் நாணியது. ஆனல் என் அதரங்கள் புன்னகை சிந்தி சம்மதித்தது. அன்றுதான் எங்கள் காதல் மெல்லச் சிரித்தது... பின்னர் பல நாள் அவர் வீணையின் வாசிப்பில் ஆடுவேன்... காதல் சுழிப்பிலே நீந்தி விடுவோம்... ஆனல் என் குருவுக்கு எங்கள் காதல் தெரியாது... பல நாள்மலர்கள் கருகி வீழ்ந்தன காலப் புயலால்...

ஒருநாள் மூன்றும் பிறைச் சந்திரன் வானத்தில் சிரித்தான்...

அன்றுதான் என் காதல் மண்டபம் சிதைந்து துன்பக் கோட்டான்கள் கூவவந்த நாள்... அவர் தனியாக வீணையின் நாதத்தினை எழுப்பித் தென்றலுடன் பின்னச் செய்து கொண்டிருந்தார். மெல்ல நான் அவர் பின்னல் சென்றேன். அவர் கண்களை மறைத்தேன். அவர் சிரித்து என் கரத்தை அகற்றி அதை ஒற்றிக் கொண்டார் கண்களில்...

"மலர்க் கரம் என் கண்களை
மறைத்திடுகையில், மலரின் [குவியல்
மாரிபோல் வீழ்ந்ததோ
என்று எண்ணுகையில்
கரம்தான் மெல்ல
கண்களை விட்டகற்றினுள்...
மெல்ல என் கன்னம்
தட்டினுள் மின்னல் நெளிவு
வரைந்தாள் புருவத்தில்:
வாயுதடில் முறுவல்
பரப்பினுள்: கன்னம்தான்
குழியச்செய்தாள் கலா!"

என்ற கவிதையை அவர் பாடினர். நான் அவர் தோளில் சாய்ந்து கொண்டேன். அன்றிரவு நாங்கள் வெகுநேரம் பேசியிருந்தோம். குரு இதையெல்லாம் பார்த்து விட்டார்..."

"குருவை நீங்கள் பார்த்தீர்களா?" என்ருன் மாறன்.

"இல்லை. ஆனல் மறுநாள் அவர் நடந்த விதத்திலிருந்து தெரிந்து கொண்டோம். மெல்ல அவரை அழைத்தார். என்னை மெல்ல குடிசையின் பின்னல் போகச் சொன்னர். நான் ஒளிந்து கேட்டேன் அவர் பேசின பேச்சை.

அவர்கள் பேசின பேச்சு என் காதில் தடையின்றி மோதியது.

"கீரா! இங்கேவா" என்றார் குரு.

"என்ன அப்பா" என்றாரவர்.

"கீரா! வானத்தில் சிந்திக்கிடக்கும் விண்மீனைப் பறிக்க முடியுமா?"

"முடியாது அப்பா"

"கீரா! நீ கலாவைக் காதலிக்கிறாய்... அவளை நீ மணக்க முடியாது. அவள் வானத்திலுள்ள

விண்மீன்! அவள் காதலை விட்டு விட வேண்டும்...மேலும்..."

"அப்பா..." அவர் குரல் தழ தழத்தது...

என் நெஞ்சக்கனி வெடித்திடு வது போலிருந்தது...

"கீரா! மேலும் நீ கவிதையில் தேர்ச்சி பெற்றுவிட்டாய்: உன் கவிதையை சோழன் சபா மண்ட பத்தில் அரங்கேற்றச் செய்ய வேண்டும்"

"அப்பா என்கவிதை என்னு டனே இருக்கட்டும்"

"சிப்பியில் முத்து அழகாகத் தான் இருக்கிறது. அப்படியிருந்தால் அதன் ஒளி எங்கும் தெரியுமா? ஆபரணமாக யாவரும் பார்க்க அணிந்தாலல்லவா அதன் ஒளி மேலும் வீசும். ஆகவே கீரா! நீ எப்படியும் போக வேண்டும். மூன்றுநாள் கழித்துப் போ..." என்று கூறிக் கொண்டே குரு வெளியே செல்வதைக் கண்டேன்.

அதைத் தொடர்ந்து அவர் அழுகைக்குரலைக் கேட்டேன்....

வீதியில் சென்று கொண்டிருப்பவன் தலையில் தென்னை மரத்தின் காய் விழுந்தால் எவ்வளவு அதிர்ச்சி ஏற்படுமோ அதுபோல் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அவர் வீணை செவ்வழிப்பண் (சோக கீதத்தை) எழுப்பியது:

அன்றைய சந்திப்பில் எங்கள் இருவர் கண்களும் கண்ணீரைச் சிந்தின.

அன்றுதான்.........?

அவர்சோழன் அரண்மனைக்குச் செல்கின்ற நாள்... பிரிவு வெயிலில் கருகிய மலரானேன்... அவர் செல்கையில் சொன்ன கடைசி வார்த்தை யிதுதான்...

"செக்கர் கங்குலுடன் சிரிக்கவில்லை
செந்தாமரை யிதழ் சிரிக்கவில்லை
என்று கவிஞன் அழுவானே?
அன்னவன் போல் அழாதே அணங்கே:
நெஞ்சம் திடப்படுத்து. நான் வரும்
மிஞ்சும் இன்பத்தில் வாழ்வோம்"

காலத்தின் மின்வெட்டுப் பாய்ச்சலில்...

பலமாறுதல்கள்... என் குருகுல வித்தை முடிந்தது.

வானத்தில் பெருமூச் சிட்டிடும் விண்
மீன்கள்
உன்தன் காதலி விடும் பெரு மூச்சினை
தெரிவிப்பது உணராயோ? புல்லின்
பனித்துளி
பண்டை இன்பத்தை பரிகசித்து
மறைதல்
உணராயோ?

என்று நான் எழுதி அனுப்பினேன் பல ஆட்கள் மூலம்... பல செய்திகள் அவரைப்பற்றி என் காதுக்கு எட்டின.

'கவிஞன் கீரன் சோழன் புதல்வியிடம் காதல் கொண்டு விட்டான்: கொற்றவனும் கவிஞனுக்கு தன் மகளைக் கொடுக்க களிப்புக் கொள்கிறான்' என்ற செய்தி என் நெஞ்சைத் திருகியது. என் நெஞ்சக் கோட்டையை துன்ப யானைகள் தங்கள் தந்தத்தால் குத்தி யிடித்தன... பலநாள் கண்ணீர் சிந்தியது என் விழிகள். பலநால் கலங்கியது என் நெஞ்சம். என் நெஞ்சம் சமாதானம் அடைய வேண்டி கலங்கிய நீர் போன்ற என் நெஞ்சம் துள்ளிய நீராக வேண்டி நாட்டியத்தில் பொழுதைப் போக்கினேன். அன்று நீங்கள் என் தந்தையின் அரண்மனைக்கு வந்திருந்தீர்கள். என் ஆட்டத்தைக் கண்டு ஆனந்தம் அடைந்தீர்கள்.

உடனே......?

நீங்கள் என்னை மணம் செய்து கொள்ள விரும்புவதாக ஆள் அனுப்பினீர்கள்... என் தந்தையின் பலாத்காரத்தால் நான் உங்களை மணந்தேன். காலம் இணைத்தது. கருத்து இணைக்கவில்லை. நான் வானத்தில் நிலவு: தாங்கள் என்னைத் தொட நினைக்கும் கடல். ஆனால் என்மனம் உங்கள் இன்பத்துக்கு இணங்கவில்லை...'

197256

இவ்வளவும் கலா சொல்லி முடித்தாள்... அவள் நெஞ்சம் விம்மியது....

அதன் பலன்......?

அவள் கண்கள் கண்ணீர் முத்துக்களை வாரியிறைத்தன...

மெல்ல மதியம் மேகக் கோட்டைக்குள் மறைந்தான்...

"கலா! உண்மைக் காதலைப் பிரித்த பாதகன் நான். பந்தலில்லாமல் பரிதவித்த முல்லைக் கொடிக்கு தேரைக் கொடுத்த பாரி வம்சத்தில் பிறந்த நான் நாணுகிறேன்..."

அவன் கண்கள் கண்ணீருகுத்தன.

"கலா! நீ துயில்கொள்... அழாதே கவிஞனைக் காணலாம்"

"நித்திரை......... இரவெல்லாம் கண்ணீருகுக்கும் மூடுபனியல்லவா நான்...வேண்டாம் சுவாமி! அவரைக் காண வேண்டாம்"

"சரி கலா"

இருவரும் அவரவர் படுக்கைக்குச் சென்று துயின்றனர்...

அரண்மனை நாழிகை காட்டும் கருவி இன்னும் விடிய சற்று நேரம் இருப்பதைக் காட்டியது.

கலா மெள்ள கட்டிலை விட்டு எழுந்திருந்தாள்...

எங்கோ காற்றில் "செக்கர் வானம் சிரிக்கவில்லை" என்ற கவிதை மிதந்து வந்து அவள் இதயக் கரையை மோதின...

மெல்ல எழுந்தாள், சிலம்பின் தண்ணொளி அடக்கினாள். துள்ளி ஓடினாள் காற்றின்கீதம் நோக்கி...

இருட் கன்னி மின்மினியை விளக்காகப் பிடித்து அழைத்துச் சென்றாள். அங்கே நதியின் மணற் படுக்கையிலே...

முல்லை ஏங்கி நின்ற தென்றல் அமர்ந்திருந்தது...

"சுவாமி வந்து விட்டீர்களா?" கனிவென்ற நெஞ்சம் கேட்ட கேள்வி.

"கலா! நீயும் வந்துவிட்டாயா? ஆனால் உண்மையிலே உன்னுடன் வாழக் கொடுத்து வைக்காத பாவி"

"ஏன் சுவாமி?"

"அதோ அந்தப் பச்சிலையைத் தின்றது முதல் என் நெஞ்சம் என்னமோ செய்கிறது."

"ஐயோ! அது நஞ்சு உடையதல்லவா?"

"நஞ்சா, கலா! என் உயிர்க்கிளி சிறகு விரித்து விட்டது... உன்னைக் கண்டது கண்டு உவகை கொள்கிறேன்... எனது மனச் சாந்திக்கு உன் வீணையை எடுத்து வந்து பாடு. அதுதான் உன் காதலின் நன்றி..."

அவன் கரங்கள் அவள் வதனத்தைத் தடவின...

அவள் நெஞ்சம் "படபட" வென்றடித்தது...... வதனம் வியர்வையால் நிரம்பியது...

அவள் சென்று வீணையை எடுத்து வந்தாள். அந்த இரவிலே வீணையின் செவ்வழிப் பண்ணைப் பின்னியது தென்றல்... அவன் கண்கள் மூடின. அவள் உள்ள வீணையிலிருந்த உயிர்த்தந்தி "படா ரென்று" அறுந்தது. அவ்வளவு தான்; அவள் கண்களுக்கு நிலவு

அருகே யிருப்பதாகக் காணப் பட்டது.

★

கிழக்கில் துவண்டு கிடந்த கொடிகளைக் காணவந்தான் கதிரவன்...

அரச குமாரன் – மாறன் எழுந்தான்...

அவன் கலா......?

காணப்படவில்லை.

அவன் நாட்டிய மயில் இறக்கை விரித்துப் பறந்து விட்டது.

துயர் வலையைப் பின்னி மறைந்தாள்...

ஆட்களை அனுப்பினன். கடைசியில் நதிக்கரையில் கண்டார்கள். அவள் சிவந்த வதனம் வெண்தாமரைபோல் வெளுப்படைந்து கிடந்தது. அவள் அதரத்தில் புன்னகை. அவள் அலைச் சுருள் அசைந்தது காற்றில்...

அவள் அருகே கிடந்த வீணையைத் தென்றல் தடவியது.

அதுவும் செவ்வழிப்பண்...

கவிஞன் கீரன் நீண்ட துகிலில் கிடந்தான்...

ஆம் அவன் கூறியபடி அவன் வாழ்வுச் செக்கர் காதல் கங்குலுடன் கலந்து சிரிக்கவில்லை. அவன் வாழ்வுத் தடாகத்திலே முளைத்த காதற் கமலம் சிரிக்கவில்லை...

ஆனல் பிரிவில் மிஞ்சும் இன்பம்...

மாறன் கண்களில் கண்ணீரைத் தூவி விட்டன...

இப்பொழுது...

அரசகுமாரன் தன் அறையில்...

சிற்பத்தில் தேர்ந்த சிற்பிகளைக் கொண்டு கலாவின் சிற்பத்தையும் கவிஞன் சிற்பத்தையும் பொறிக்கச் செய்தான்...

அதில் கலா தாமரைபோல் கரத்தைக் குழித்து விழிவண்டு அதில் மொய்க்க ஆடும் பாவனையில் அமைந்திருந்தது...

கவிஞன் வீணையை மீட்டுவது போல் இருந்தான் அதில்...

நிலவு எரிக்கும் காலங்களிலே...

மாறன் பொழுது போகாத நேரத்தில் – வாழ்வின் சோகக் கதையை எண்ணி பெருமூச்சு விடும் பொழுது அந்த சிற்பங்களை நோக்குவான்... அப்பொழுது மெல்ல அவன் செவிக்கு கவிஞன் வீணையின் நாதம் கேட்கும்...

அதைத் தொடர்ந்து அவன் நெஞ்ச அரங்கிலே '' கலீர் கலீர் '' என்ற சலங்கையின் ஒலியும் கேட்கும்.

★

காற்றலைகளும் இசையும்

[ஆர். கே. விசுவநாதன்]

கலைகளில் சிறந்தது இசைக்கலை.

இசையின்பத்தில் ஈடுபடாதவர்கள் கொலை களவு போன்ற கொடிய செயல்களை செய்வார்கள் என்பது ஆங்கில கவி ஷேக்ஸ்பியரின் வாக்கு. பாம்புகள், மிருகங்கள் இவற்றையும் வசீகரிக்கும் சக்தி இசையினிடத்தில் இருக்கிறது. இசைக்கும் மற்ற கலைகளுக்கும் வித்தியாசங்களுண்டு. மற்றகலைகளை நிதானமாக ரசிக்கலாம். ஓர் சிற்பத்தையோ அல்லது சித்திரத்தையோ நாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவற்றுக்கு நிலையான உருவங்கள் உண்டு. அவசரப்படாமல் சிறிது சிறிதாக அவற்றின் இன்பத்தைப்பருகிக் கொண்டே இருக்கலாம். இலக்கியத்திற்கும் இவ்வாறே. ஆனால் நம் காதில் விழும் இசை ஒலிகள் சிறிது நேரத்துக்கெல்லாம் மறைந்து விடும். ஒலிகளுக்கு நிலையாய் இருக்கும் தன்மை இல்லை. எனவே திரும்பத் திரும்ப ஒரே பாட்டை அதே விவரங்களுடன் பாடி, கேட்டால்தான் நாம் ஒரு படத்தைப் பார்ப்பதுபோல அப்பாட்டையும் கேட்டுக்கொண்டிருக்க முடியும். இதனால் இசைக் கலையை ரசிப்பது சற்று சிரமமாகி விடுகிறது. கேட்டதை உடனே மனதில் வாங்கி அனுபவிக்கும் தன்மையைப் பெற பயிற்சி வேண்டும். இயற்கையாகவே இசையை அனுபவிக்கும் தன்மை நமக்கு இல்லா விட்டால் இப்பயிற்சி அதிக பலனை அளிக்காது என்றும் சிலர் கருதுகிறார்கள். மற்றொரு விஷயத்திலும் இசைக்கலை மற்ற கலைகளிலிருந்து வேறு படுகிறது. இயற்கை நிகழ்ச்சிகள் அல்லது காட்சிகள், புராணக் கதைகள் இவை ஓவியக் கலை சிற்பக் கலை இவற்றின் உருவங்களுக்கு ஆதரவு அளிக்கின்றன. இலக்கியத்திற்கு இவற்றுடன் சொற்களும் சேர்ந்து ஆதரவு அளிக்கின்றது. இசைக்கலைக்கு இது போன்ற சௌகரியம் கிடையாது. உணர்ச்சிகளை மட்டும் வைத்துக் கொண்டு உருவங்கள் கற்பிக்க வேண்டிய நிலை இசைவாணர்களுக்கு ஏற்படுகிறது நம்முடைய இசையின் உயிர் ராகங்கள்தான். அவற்றுக்கு உருவம் கற்பித்து அவர்கள் பாடும்போது அவர்களுடையகற்பனைகளை அறிய வேண்டுமானால் நிரம்பப் பயிற்சியும், அனுபவமும் வேண்டும்.

உணர்ச்சிகளை மட்டும் எடுத்துக் காட்டுவதை முக்கிய நோக்கமாக கொண்டிருப்பதால்தான் இசைக் கலை மற்ற கலைகளுக்கெல்லாம் வழி காட்டியாக இருந்து வருகிறது என்று கலைஞர்கள் கருதுகிறார்கள்.

ஒலிகளைச் சுருதி ஏற்றத் தாழ்வுடன் அடுத்தடுத்து தொகுதிகளாக உச்சரிக்கும்போது இசை பிறக்கிறது. சுருதி என்பது ஒலி எழுப்பும் பொருளின் துடிப்பு வேகத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு செகண்டில் அது இயற்றும் துடிப்புகளைக் கொண்டு அதன் துடிப்பு வேகம் நிர்ணயிக்கப் படும். இத்துடிப்புகளின் எண்ணிக்கையை அடுக்கம் (Freguency) என்று

கூறுவார்கள். அடுக்கம் அதிகமானல் ஒலியின் சுருதி உயர்வாக இருக்கும்; குறைவானல் சுருதியும் குறைவாக இருக்கும். இதிலிருந்து இசை ஒலிகளின் சுருதிக்கும் காற்றலைகளுக்கும் உண்டான தொடர்பை அறியலாம். ஒலி எழுப்பும் பொருளின் துடிப்புகளின் எண்ணிக்கையை ஒட்டி காற்றில் உண்டாகும் அடர்த்தி தளர்த்திகளின் எண்ணிக்கையும் அமைந்திருக்கும் என்பதை நாமறிவோம். துடிப்புகள் அதிகமாக ஏற்படும்போது அடர்த்தி தளர்த்திகள் ஒன்றுக்கொன்று மிக நெருங்கி இருக்கும். எனவே காற்றலைகளின் நீளம் குறைவாக இருக்கும் என்று அறியலாம். துடிப்புகள் குறைவாக ஏற்படும்போது அடர்த்தி தளர்த்திகள் நெடுந்தூரம் விலகி இருக்குமாதலால் அலைகள் நீண்டிருக்கும். ஆகவே இசை ஒலிகளின் சுருதி ஏற்றத் தாழ்வுக்கு காற்றலைகளின் நீளம்தான் காரணமாகிறது என்று உணரலாம்.

சில சமயம் ஒரே சுருதியில் ஒரு ஒலி அதிக முழக்கத்துடனே அல்லது குறைந்த முழக்கத்துடனே நம் காதில் விழுவதை கவனிக்கிறோம். வீணைக் கம்பியை இழுத்து மீட்டினல் அதிக முழக்கத்துடனும், லேசாக மீட்டினல் குறைந்த முழக்கத்துடனும் ஒலி எழும்புவதை நாம் கேட்கிறோம். இம் முழக்க வேறுபாட்டிற்கும் காற்றலைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். ஒரு ஒலி எழுப்பும் பொருள் துடிக்கும்போது அதைச் சூழ்ந்துள்ள காற்றின் பகுதிகள் அடர்ந்தும் தளர்ந்தும் இருக்குமாறு துடித்து அலைகளைப் பரவச்செய்கின்றன என்று முன்பு பார்த்தோம். காற்றுப் பகுதிகள் தம்மிருப்பிடங்களில் இருந்து கொண்டே முன்னும் பின்னுமாகத் துடித்து அலைகளை முன்னேறச் செய்கின்றன. இவ்வாறு காற்றுப் பகுதிகள் துடிக்கும் போது அவை அசைந்து செல்லும் தூரத்தை அலைகளின் வீச்சு என்று சொல்லுவார்கள். ஒலி எழுப்பும் பொருளின் துடிப்பு வீச்சு அதிகமாக இருக்கும்போது அலைகளின் வீச்சும் அதிகமாக இருக்கும். அலைகளின் வீச்சு அதிகமாக இருப்பின் ஒலி அதிக முழக்கத்துடன் கேட்கிறது. அலைகளின் வீச்சு குறைவாக இருப்பின் ஒலி குறைந்த முழக்கத்துடன் கேட்கிறது. எனவே இசை ஒலிகளின் முழக்க வேறுபாட்டிற்கு அலைகளின் வீச்சு காரணமாகிறது என்று உணரலாம்.

இசை ஒலிகளுக்கு சுருதி, முழக்கம் இவ்விரண்டையும் தவிர மற்றுமோர் அம்சம் உண்டு. நாதசுரம், புல்லாங்குழல் இரண்டும் ஒரே அளவு சுருதி, முழக்கம் கொண்ட ஒலிகளை எழுப்பினும் அவ்வொலிகள் ஒன்ருயிராமல் வெவ்வேருக நம் காதில் விழுவதை அறிகிறோம். நாதசுரத்தின் ஒலி விறுவிறுப்பாகவும் புல்லாங்குழலின் ஒலி மிருதுவாகவும் கேட்கிறது. எனவே ஒவ்வொரு ஒலிக்கும் சுருதி, முழக்கம் இரண்டையும் தவிர மற்ருெரு அம்சம் இருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். இதைக்கொண்டுதான் நாதசுரத்தின் ஒலியையும் புல்லாங்குழலின் ஒலியை வெவ்வேருக உணர்ந்தோம். இம்மூன்ருவது அம்சத்துக்கு பண்பு என்று பெயர். ஒரே மாதிரி குரலைப் பெற்ற அண்ணன் தம்பி இருவர்கள் சேர்ந்து பாடும்போது அவர்களுடைய குரல்களை தனித்தனியே நாம் உணருவதும் இப்பண்பு வேறுபாட்டைக் கொண்டுதான். இப்பண்பு வேறு

பாட்டுக்கும் காற்றலைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். இச்சம்பந்தத்தை இப்பொழுது விளக்குவோம்.

இசைக்கருவிகள் நம்மிடையே அனேகம் இருக்கின்றன. குரலைக் கொண்டு இசை ஒலிகளை எழுப்புவதுடன் இவற்றைக் கொண்டும் ஒலிகளை எழுப்புகிறோம். வாய்ப் பாட்டுக்கு அடுத்த படியாக நம்மிடையே அதிக பிரபலமாய் இருக்கும் இசைக் கருவிகள் வீணை, பிடில், புல்லாங்குழல் முதலியவை. வீணை, பிடில் இரண்டும் கம்பி வாத்தியங்கள். வீணைக்கம்பியை மீட்டும்போது கம்பித் துடிப்புகள் நேராக காற்றில் அடர்த்தி தளர்த்திகளை உண்டாக்குவதில்லை. கம்பியின் அசைவினால்வீணைக் குடத்தின் வயிற்றில் வைத்துள்ள குதிரை என்னும் பாகம் அசைகிறது. குதிரை அசைவதினால் குடம் தண்டி முதலிய பாகங்களும் அசைகின்றன. குடத்தினுள்ளே இருக்கும் காற்றும் இவற்றோடு சேர்ந்து அசைகின்றது. கம்பியைக் காட்டிலும் குடமும் தண்டியும் அதிக பரப்பு கொண்டிருப்பதால் வெளிக் காற்றில் இவற்றின் துடிப்புகளினால் தான் அடர்த்தி தளர்த்திகள் உண்டாகின்றன. இதைப் போலவே பிடில் வாத்தியத்திலும் உண்டாகிறது. வீணையின் குடம் தண்டி இவை செய்யப்பட்ட பலகை பிடில் பெட்டி செய்ய பட்ட பலகையைக்காட்டிலும் கனமாயிருப்பதால் அவைஎளிதாக துடிக்காது. இதுதான் இரண்டுக்குமுள்ள வித்தியாசம். புல்லாங்குழலில் எவ்வாறு ஒலி எழும்புகிறது என்று கவனிக்கவும். அதை வாசிப்பவர் ஊது துளையில் காற்றை ஊதுகிறார். அப்பொழுது அவர் உதடுகளை நெருக்கி வைத்துக் கொள்ளுவதைப் பார்க்கலாம். காற்று பீறலாக உதடுகளின் வழியாக வெளிப்பட்டு ஊது துளையின் விளிம்பை மோதுகிறது. இதனால் குழலினுள் இருக்கும் காற்றும் குழலின் பக்கங்களும் சேர்ந்து துடிக்கின்றன. ஒருவர் பாடும்போது அவரது குரல் நாவுகள் துடித்து அத்துடிப்புகள் தொண்டை, வாய், மூக்கு முதலிய இடங்களிலுள்ள காற்றை துடிக்கச் செய்கின்றன. அவ்விடங்களில் உள்ள சதையும் இவற்றோடு துடிக்கின்றது. எல்லா துடிப்புகளும் சேர்ந்து காற்றில் அலைகளை எழுப்புகின்றன. எனவே இசை ஒலிகளை எழுப்பும் ஒவ்வொரு கருவியின் துடிப்புகளும் எளிதாக அமைந்திராமல் இருப்பதை உணரலாம்.

அலைகளுக்கு நீளம், வீச்சு இரண்டையும் தவிர அமைப்பு என்று ஓர் அம்சம் உண்டு. ஒலியின் பண்பு வேறு பாட்டிற்கு அலைகளின் அமைப்புதான் காரணம் என்று அறிந்தார்கள். அலைகளின் அமைப்பு ஒலி எழுப்பும் பொருளின் துடிப்பின் சிக்கலைப் பொருத்தது. கடியாரத்திலுள்ள பெண்டுலத்தை அனைவரும் கவனித்திருக்கலாம். இதன் ஆட்டத்தை நாம் எளிதாக கண்ணால் பார்க்கலாம். இது ஒரு செகண்டில் இயற்றும் துடிப்புகளின் எண்ணிக்கை மிககுறைவாக இருக்கும். அதனால்தான் இதன் அசைவைத் துடிப்பு என்று சொல்லாமல் ஆட்டம் என்று சொல்லுகிறோம். ஒலி எழுப்பும் எல்லாப் பொருள்களும் பெண்டுலத்தைப் போல துடிக்கும். ஆனால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாகத் துடிக்கும். துடிப்புகள் எண்ணிக்கை வீச்சு இரண்டிலும் ஒன்றாய் இருந்தபோதிலும் துடிக்

கும் மாதிரியைப்பொறுத்து வேறு படும். எல்லாத் துடிப்புகளைவிட பெண்டுலத்தின் துடிப்புதான் மிக எளியது; சிக்கலே இல்லாத துடிப்பு. பெண்டுலம் ஆடும்போது அது இரண்டு எல்லைகளுக்கு இடையே திரும்பத் திரும்ப போய்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இவ்விரண்டு எல்லைகளுக்கு பெண்டுலம் வரும்போதெல்லாம் ஒரு நொடிப் பொழுது அசைவற்று நிற்கும். அவ்விடங்களிலிருந்து கிளம்பும்போது அதன் வேகம் சீராக அதிகரித்து வந்து நடு மையத்தை தாண்டியவுடன் குறைந்து கொண்டு போகும். மற்ருெரு எல்லைக்கு வந்தவுடன் அசைவற்று ஒரு நொடிப் பொழுது நிற்கும். இவ்வாறு பெண்டுலம் ஆடிக் கொண்டே போகும். இசைக் கவடு (Turing Folk) என்று ஓர் கருவி உண்டு. இக் கருவி பெண்டுலம் அசைகிற மாதிரியே அசையும். இக்கருவி காற்றில் உண்டாக்கும் அலைகளின் அமைப்பு தான் மிக எளியது. சிக்கலான அமைப்புக்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்ளுவோம். பிடில் கம்பி அசையும் விதத்தை கவனிக்கவும். வில்லை மீட்டும்போது அது கம்பியை சிறிது தூரம் இழுத்து செல்லுகிறது. உடனே கம்பி வில்லை விட்டு கக்கிக் கொண்டு வில்லுக்கு எதிர்புறமாக ஓடி வருகிறது. மறுபடியும் வில்லினல் கவ்வப்பட்டு அதனுடன் செல்லுகிறது. இவ்வாறு கம்பி வில்லுடனும் வில்லுக்கு எதிர்புறமாகவும் அசைந்து துடித்துக் கொண்டிருக்கும். பெண்டுலத்தின் இயக்கத்திற்கும் பிடில் கம்பியின் இயக்கத்திற்கும் உள்ள வித்தியாசத்தை கூர்ந்து கவனிக்கவும் கம்பியின் வேகம் வில்லுடன் செல்லும்போது ஒரே அளவினதாய் இருக்கும். கக்கிக்கொண்டு எதிர்புறமாக வரும்போதுதான் வேகத்தின் அளவும் திசையும் மாறும். ஆனல் பெண்டுலத்தின் வேகம் பூஜ்ஜியத்திலிருந்து நிதானமாக அதிகரித்துக் கொண்டே சென்று பின்னர் நிதானமாகக் குறைந்து கொண்டே செல்லுகிறது. மறுபடியும் பூஜ்ஜியமாகிறது. எனவே கம்பியின் இயக்கத்திற்கும் பெண்டுலத்தின் இயக்கத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறியலாம். பிடிலில் கம்பி மட்டும் துடிப்பதில்லை. அதன் எல்லா பாகங்களும் துடிக்கின்றன. ஒவ்வொரு பாகத்தின் துடிப்பும் ஒவ்வொரு விதமாக இருக்கும். எல்லாத் துடிப்புகளும் சேர்ந்து தான் காற்றலைகளை உண்டாக்குகின்றன. எனவே காற்றலைகளின் அமைப்பு சிக்கலாகி விடுகிறது. இச் சிக்கலைப் பொறுத்துத் தான் பிடில் வாத்தியத்தின் ஒலியின் பண்பு அமைகிறது. சிக்கல் குறைவாகவுள்ள அலையமைப்புக் கொண்ட வாத்தியம் புல்லாங்குழல். அதனல்தான் இதன் நாதம் மிருதுவாக இருப்பதாகக் கூறுகிருர்கள். குரல் நாண்கள் எழுப்பும் காற்றலைகளே மிகவும் சிக்கலானவை என்று அறிந்தார்கள். இவ்வாருக இசை ஒலிகளின் பண்பு வேறுபாட்டுக்கு காரணத்தை உணர்ந்தார்கள்.

★

ஸிதார்

"ரத்னபானு"

பாத்திரங்கள் :

சிவசங்கர்:— ஸிதார் வாசிப்பதே அவன் மூச்சு, அவன் வாழ்வு

ரேகா:— "ஸ்டார் வால்யூ"வுள்ள ஸினிமா நடிகை, ஸிதார் வாசிப்புக்காக அவனிடம் உள்ளம் பறிகொடுத்தவள்

விஜயா:— புது 'அமெச்சூர்' நடிகை — ரேகாவால் ஸினிமா உலகத்துக் கொண்டுவரப்பட்டவள்.

ஜயந்தி, மதுரா, சௌதாமினி — பழைய எக்ஸ்ட்ரா நடிகைகள்.

சௌதாமினி: ரேகா! 'ஸிதார்' ரொம்ப உயர்ந்த படமா வரப் போகிறது என்பதில் கொஞ்சங் கூடச் சந்தேகமே இல்லை.

ஜயந்தி: நிஜமாகவே! .... நீ இன்று என்னமாகத்தான் ஆக்ட் செய்திருக்கிறாய்......... ஆஹா!......

ரேகா: ஜெயந்தி! நீயும் சௌதாமினியோடு சேர்ந்து விட்டாய் இல்லை. சொல்ல வேண்டாம்.

மதுரா: நாங்கள் ஒன்றும் காக்கா பிடிக்கவில்லை.

ரேகா: அம்மா மதுரா, நீ இருந்ததை கவனிக்கவில்லை...... அம்மா! தயவு செய்து மன்னித்துவிடு.

ஜய: ரேகா!... நீ என்ன வேண்டுமானாலும் பதனிசா இருக்க நடித்துப் பாரு, இன்று ஷூட்டிங்கில் ஏற்பட்ட திருப்தி உனக்கு எப்பொழுதுமே ஏற்பட்டதில்லை.

மது: நாங்கள் கூட உன் நடிப்பைப் பார்த்து அபாரமா நடிக்க ஆரம்பித்து விட்டோம் என்றால் பார்த்துக் கொள்ளேன்.

சௌ: எனக்கென்னமோ, என் நடிப்பிலே நல்ல திருப்தி......

ரேகா: இன்று என்னைக் கோட்டாப் பண்ண வேண்டும் என்று நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

சௌ: சரி, மதுரா, ஜயந்தி கிளம்புங்கள். இப்போது ரேகா

நாம் இங்கே இருப்பதை விரும்பவில்லை என்று நன்றாகத் தெரிகிறது.

ரேகா: அட போதும் உன் புத்தி. இன்று நான் நன்றாக ஆக்ட் செய்யவில்லை என்று சொல்லு கிறேன். சுமாரா 'ஆக்ட்' செய்யத்தான் செய்தேன்.

ஜய: இந்தப் படத்திலேயே முக்கியமான ஸீன்களில் இது ஒன்று என்பதும் உன் ஞாபகத்தில் இருக்கட்டும்.

சௌ: இனிமேல் ரேகாவால் நம்மை எல்லாம் கவனிக்கவா முடியும்?

ரேகா: சௌதாமினி! நிஜமாகச் சொல்லு. ஸிதார் வாசித்தாரே எவ்வளவு அற்புதமா வாசித்தார்......

ஜய: பார்த்தா ஏதோ.............. மாதிரி.

மது: (இழுத்தவாறு) ஆனல் வாசிப்பு நன்றாகத்தான்......

ரேகா: என்னமோ "நன்றாகத் தான்" என்று இழுக்கிறாயே...

சௌ: நீ பாடும் போது வாசித்தால், எதுதான் நன்றாக இருக்காது?

ரேகா: இந்த மாதிரி பேசுவது தான் எனக்குப் பிடிக்கிறதில்லை.

[ஸிதார் வாசிப்பு தூரத்தில் கேட்கிறது.]

ரேகா: அதோ ஸிதார் வாசிக்கிறார் போல இருக்கே.

ஜய: இந்த மனுஷனுக்கு ராத்திரி பகல்னே வித்தியாசமே கிடையாது போல இருக்கிறதே! 'ரிஹர்ஸல்' லேதான் பிராணனை வாங்கி விடுகிறாரே, இதுலே இப்பொழுதாவது நம்மை நிம்மதியாக விட்டால் என்ன......

ரேகா: எம்மா...... உனக்குக் கேட்கக் கசக்கிறதோ... ஆஹா என்ன அற்புதமான வாசிப்பு! என்ன சோகபாவம்!

[சிரிப்பு]

மது: (சிரித்து) தன் உருவத்தையே வாசிப்பில் படம் பிடித்துக் காட்ட விரும்புகிற மாதிரி. அவர் பெயர் என்ன?

சௌ: பெயரா?...... அவர் பெயர் என்ன மதுரா?

மது: எனக்கு ஞாபகமில்லையே! ரேகா! எங்கே போகிறாய்?

ரேகா: கொஞ்சம் அந்த ஸிதாரைக் கேட்டு வருகிறேன். "ஸிதார்" என்ற நான் நடிக்கிற படத்துக்கு இவர் ஸிதார் வாசிக்கக் கிடைத்தது என் பாக்கியந்தான்.

மூவரும்: [சிரிக்கிறார்கள்] நல்ல பைத்தியம்மா உனக்கும்.

ரேகா: (தூரத்தில்) உங்களுக்கு இவ்வளவு கேவலமான ரஸிகத் தன்மை இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

★

[ஸிதார் விருவிருப்பு அதிகரிக்கிறது—பிறகு மெதுவாக]

விஜ: என்ன!... இன்னும் சாப்பிடாமலா வாசித்துக் கொண்டிருக்கிறாய்?

[அவன் ஸிதார் வாசித்துக் கொண்டே இருக்கிறான்.]

விஜ: (சிரிப்பு) என்ன, காது கூட வரவர செவிடாப் போகிறது. போல இருக்கே!

சிவசங்கர் : விஜயா ......(வாசிப்பு நிற்கிறது)

விஜ : இந்த மாதிரி இருந்தா நான் கோபித்துக் கொள்ளாமே என்ன செய்வேன் ?

சிவ : இனி மேலே கோவம் வரத் தான் செய்யும்...... அப்பேர்ப் பட்ட இடத்துக்குத்தானே நாம் வந்திருக்கிறோம்.

விஜ : ரொம்ப அழகா இருக்கி றது......... சாப்பாடெல்லாம் ஆறிப் போச்சு... இனிமேலே சாப்பிட்டா உடம்புக்கு ஒத்துக் கொள்ளுமோ என்னமோ...... ம்... இதோ கொஞ்சம் ரொட் டியும் பாலும் பழமும் கொண்டு வந்திருக்கிறேன்.

சிவ : இந்த வம்பெல்லாம் எனக் கேன் விஜயா......... பேசாமே நான் பழைய இடத்துக்கே போய் விட்டால் நல்லது.

விஜ : ஏன் இப்பொழுது குறை என்ன வந்து விட்டது? உம், முதலில் இதைச் சாப்பிடு.

சிவ : விஜயா இங்கே வருவதற்கு முன்னே நீ யார் என்று எனக் குத் தெரியாது. இப்படி என்ன கரிசனம் என் மேலே உனக்கு.

விஜ : 'கரிசனம்' 'கிரிசனம்' அதெல்லாம் ஒண்ணும் பெரிய வார்த்தை போடாதே. சாப் பிடவில்லையேன்னு பச்சாதா பம்; அவ்வளவுதான்!

[ஸிதார் மீண்டும் வாசிக்கி றான்.]

விஜ : எனக்கு வேறு வேலையில்லை என்ற நினைப்பா ?

சிவ : (ஸிதார் வாசித்தவாரே) நான் அப்படிச் சொன்னேனு ?

விஜ : நீ சாப்பிட்டால் எனக் கென்ன ?

[ஸிதார் வாசிக்கிறான்]

விஜ : (சிரித்து) நான் போகி றேன்.

[அவள் போய் விடுகிறாள் — இவன் ஸிதார் வாசித்துக்கொண் டேயிருக்கிறான். சற்று நேரங் கழித்து அவள் வருகிறாள்.]

விஜ : அடப் பாவி! இன்னுமா வாசித்துக்கொண்டு உட்கார்ந் திருக்கிறாய்?...... இந்தா பால், சுடச் சுட சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கு.

சிவ : விஜயா! நான்......

விஜ : நீ சாப்பிட்டதுக் கப்புறந் தான் இனிப் பேச்சு.

[ஸிதார் வாசிப்பதை நிறுத்து கிறான்.]

சிவ : மனுஷன் சாப்பிட்டு உயிர் வாழணும் என்று வைத்தவன் பெரிய முட்டாளாக இருக்க வேண்டும், இல்லே ?

விஜ : ஆமாம். அப்படி ஒரு முட் டாள் தவிர்க்க முடியாத நிர்ப் பந்தம் செய்திருக்கும் போது, அதை ஏமாத்தப் பார்க்கிறவன் அதைவிட......

சிவ : ஒரு அடிமுட்டாள் தான் நான் நெஜமாகவே. இல்லை யென்றால்...... இங்கே வந்து மாட்டிக்கொண்டு விழிப் பேனு?

விஜ : அப்பேர்ப்பட்ட ஒருவனி டம் அவன் சாப்பிடவில்லை யேன்னு பெரிசா பரிவு காட்ட வந்து விட்டேனே (சிரித்து) நான்? சரி ரொம்ப நேரமாகி விட்டது. நாளைக்கு ஷுட்டிங்

இருக்கிறது ஞாபகத்திலே இருக்கட்டும்.

சிவ: உனக்கு இந்த ஷூட்டிங் பைத்தியம் எப்பொழுதுதான் நீங்குமோ.

விஜ: (சிரிக்க) இதுதானே முதல் படம்......

சிவ: ஆமாம்...... ஒரு நாலைந்து படமாவது ஆக வேண்டாமா? நன்ருக முற்றி பைத்தியம் தாணுக விலக......

★

[காட்சி மாறுகிறது]

ரேகா: (தூரத்தில் சிரித்துத் தன் தோழியுடன்) ம்...... அப்போ நான் போய் வரட்டுமா?......

[திரும்புகிறவள் சட்டென சிவசங்கர்மேல் மோதிக்கொள்ள] ஆ... நீங்க...ளா...என்னை மன்னிக்கணும்.

சிவ: என்னையும் மன்னிக்கணும்.

ரேகா: (மௌனம்)

சிவ: நான் வருகிறேன்.

ரேகா: சரி...ம்...எனக்கு என்ன செய்கிறது என்றே தெரியவில்லை. 'ஸிதார்'ங்கற இந்தப் படம் உங்களாலேதான் பிரமாதமா ஆகப் போகுது என்பதிலே ஐயமே இல்லை......

சிவ: தயவு செய்து என்னுடைய பலவீனத்தை எடுத்துக் காட்டாதீங்க.

ரேகா: நேற்று ஷூட்டிங்கில் என்ன பிரமாதமா வாசித்தீர்கள்... நான் உணர்ச்சியற்றே நடித்து விட்டேன்.

சிவ: ஏதோ வாசித்தேன்... அவ்வளவுதான்.

ரேகா: உங்களைப் போன்றவர்கள் இருட்டில் யாருக்கும் தெரியாதபடி அடைந்திருந்தால் நம்மவர்களின் திறமை வெளியுலகுக்கு எப்படித் தெரியும்?

சிவ: ம்... யாரைப் பார்த்து...... யாரிடம் சொல்லுகிறீர்கள்?

ரேகா: ஹூம்...... அன்று என் நண்பரின் வீட்டில் உங்கள் வாசிப்பைக் கேட்டதுமே எப்படி மயங்கி விட்டேன். இதற்குப் பிறகுதானே இந்தப் படத்தில் ஏற்பாடு செய்ய முடிந்தது.

சிவ: நான் தெரியாத்தனமாக இதில் சிக்கி விட்டதாக...

ரேகா: தயவு செய்து இப்படிச் சொல்லாதீர்கள். உங்கள் வாசிப்பு வீணைகவா வேண்டும்? உங்கள் விரல்கள் ஸிதார் மீது அசைந்து கொண்டிருக்கின்றன. ஆனல் நீங்கள் கம்பிகளையா அசைக்கிறீர்கள்? கேட்பவரின் ஹிருதயங்களை......

சிவ: எனக்குப் புரியவில்லை......

ரேகா: உங்கள் ரஞ்சகமான வாசிப்பின் நயத்தை மறக்கவா முடிகிறது...... ஹிருதயத்தை எவ்வளவு பளுவாக மாற்றி விடுகிறது.

சிவ: கேவலம் ஏதோ பொழுது போக்குக்காக நான் வாசித்துக் கொண்டிருந்தவன்...... இதெல்லாம் புரிந்துகொள்ள எனக்குச் சக்தி கிடையாது.

ரேகா: ஆனல் என்ன தெய்வீகத் திறமை உங்களிடமிருக்கிறது. தாமரை வெறும் சேற்றில்தான் முளைக்கிறது. ஆனல் அதை மலர்விப்பவன் யார்?......ஆகாயத்திலுள்ள சூரியன். சேறு தாமரையை வளர்த்தது என்ப

தற்காக யாரும் அதை ஒடித்துச் சேற்றில் போடுவதில்லை.

ஜயந் : (வந்து கொண்டே) ரேகா! நீ இங்கேயா இருக்கிருய்?

சௌ : எங்கெல்லாம் தேடுவது.

சிவ : நமஸ்காரம்...... நான் வரு கிறேன்.

மது : (கேலியாக) நான் என்ன சொன்னேன்.

ரேகா : என்ன சிரிப்பு வேண்டி யிருக்கிறது?

சௌ : நல்லதுக்கு எப்பொழுது தான் காலமாக இருக்கிறது?

ரேகா : எனக்கு இப்பொழுதிருக் குப் கெட்ட காலமே எப்ப வுப் நிலைத்திருந்தால் அதுவே போதும்.

ஜய : ரேகா... நீ புரியாமல் பேசு கிருய்... உன்னுடைய புகழைக் கொல்லை கொண்டு போக உன் னிடமே ஒரு விஷ ஜந்துவைச் சேர்த்து வைத்திருக்கிருய் என் பதை மறந்து உளறுகிருய்.

சௌ : கடலிலுள்ள பாறைகள் மறைந்தே கவிழ்த்து விடும் என்பதையும் ஞாபகத்தில் கொள்.

ரேகா : என்ன சொல்ல வந்தீர் கள் என்று ஒரு வார்த்தையில் சொல்லிப் போனுல் நன்றியுள் ளவளாக இருப்பேன்.

மது : நாங்கள் என்றும் உனக்கு நன்றியுள்ளவர்களாக இருப் போம். நாங்கள் இங்கு வந்து உன்னைத் தொந்திரவு செய்ததை மறந்து விடு. அது போதும். ஹூம் கிழக்கேயிருந்து வெளிச் சம், மேற்கே பலாபலங்கள் என்பதை ஞாபகமூட்டிக் கொள். டைரக்டர் முதல் எல்லோரும், அவளை வானளா வப் புகழ ஆரம்பித்து விட்டார் கள் என்பதும் தெரியவில்லையா?

ரேகா : வளைய வளையச் சொல்வ தெப்போது? விஷயம் புரியாத போதுதான்.

சௌ : ரேகா நன்ருகப் புரிந்து கொள்...... விஜயா உனக்குப் போட்டியாக வந்திருக்கிருள்.

ஜய : அவளைப் பற்றித்தான் இப் பொழுது எங்கும் பேச்சு.

ரேகா : ஆமாம்...... தெரியும்...

மது : என்ன தெரியுமா?

ரேகா : தெரியுமென்றுதானே சொன்னேன்.

மது : ரேகா...... உன் புத்தி உன் வசத்திலில்லை. நீ ஏதேதோ பேசுகிருய். வாழ்க்கைக்கு என்றும் நிரந்தரமான ஆதாரம் வேண்டும்.

ரேகா : நம்பிக்கையை விடவா இன்னெரு ஆதாரம்?

மது : எதிரே உள்ள இந்த அழகிய மரம், பூதேவி தன் உள்ளத்தில், அதன் பாத்திகளையும், வேர்களை யும் அழுத்தமாகப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பதால் தான். ஜோராக அசைந்தாடு கிறது. அந்த ஆதாரம் இல்லா விட்டால்......

ரேகா : சாய்ந்து போகட்டுமே. மொட்டுகளை நாம் வேண்டு மென்றே கசக்க வேண்டாம். ஆனல் தாமாகவே பூக்கள் வாடியானபின், அதற்குப் பிற காவது அவற்றை எறிந்துவிட வேண்டாமா?

சௌ : ரேகா... உனக்குப் புத்தி மாருட்டம் ஏதாவது...

மது : நீ எவ்வளவு கஷ்டப்பட்டு, எத்தனை காலத்துக்குப் பிறகு, இந்த ஸ்தானத்தை அடைந்திருக்கிருய் என்று நினைத்துப் பார்... இதை அவ்வளவு சுலபமாக இழந்து விடப் பார்க்கிருயா?

ரேகா : தயவு செய்து என்னைத் தனியே விடுங்கள். விஜயா வெறும் வெகுளி... கபடமற்றவள்; புத்திசாலி. தன் வேலையில் ஆர்வமுள்ளவள். அதுபோதும் எனக்கு. அவள் புகழடைவதும் ஒன்று; நான் புகழடைவதும் ஒன்றுதான்.

மது : ஹூம்... பின் நாங்கள் வருகிருேம்.

சௌ : எலி சொல்கிறது—இறைவன் கருணையற்றவன்; கொஞ்சங்கூட இரக்கமற்றவன்.

ஜய : ஆனுல் பூனையோ ஆஹா இறைவன் எவ்வளவு கருணையுள்ளவன், கருணுகரன் என்று வாழ்த்துகிறது.

ரேகா : போய் வாருங்கள். ஆனுல், இதுதான் எல்லோருடைய வாழ்க்கையும் என்று உணர்ந்து கொள்ளுங்கள்.

மது : தியாகம் வெறும் பீங்கான் தகடல்ல......... கடலில் போய் பொன்னைக் கொட்டுவது தானம் ஆகாது.

ரேகா : பைத்தியங்கள்!

★

[காட்சி வேறு—விஜயா ஸிதார் வாசிக்க முயற்சிக்கிருள்.]

ரேகா : யார்... விஜயாவா? ...... அதுதானே......

விஜ : என்ன வாசிப்பு இவ்வளவு பிரமாதமாக இருக்கிறது என்று ஆச்சரியமடைந்தீர்களோ...

ரேகா : பரவா இல்லையே நீயும் சுமாராக வாசிக்கிருயே. இந்த 'ரிஹர்ஸல்' ஷூட்டிங்குக் கிடையே இதை எப்படிக் கற்றுக் கொள்ள முடிந்தது?

விஜ : அதுதான் ஸிதார் வாசிப்பவர்......

ரேகா : என்ன அவர் சொல்லித் தருகிருரா உனக்கு?

விஜ : கொஞ்சம் சொல்லிக் கொடுத்து... கொஞ்சம் தாளுகவே... இதோ கரும்பு நறுக்கி வைத்திருக்கிறேன், வேண்டுமா?

ரேகா ; எனக்கு என்னமோ...... கரும்பைக் கண்டால்கூட இப்பொழுது பிடிப்பதில்லை.

விஜ : ஜாஸ்தியாக எதுவும் தின்ருல் செத்துப் போகலாம் என்று சொல்கிருர்கள். அதற்காகத்தான் நான் கரும்பையே அதிகமாகத் தின்ன ஆரம்பித்து விட்டேன்.

ரேகா : சாவது என்ன அவ்வளவு எளிதா?

விஜ : எனக்கொன்றும் மரணத்தைப் பற்றி அவ்வளவு அநுபவமில்லை. ஒருசமயம் அநேகமாக இறந்து விட்டேன் தண்ணீரில் மூழ்கி. நம்ம ஸிதார்காரர் தான் இழுத்துக் கரையில் போட்டார்.

ரேகா : என்ன! இவரை முதலிலேயே உனக்குத் தெரியுமா?

விஜ : அதுதான் முதல் சந்திப்பு... ம்...... மனிதன் ஏன் மரணத்துக்கு இவ்வளவு பயப்படுகிருன்?

ரேகா : வாழ்வதில் ஆனந்தம் இருப்பதால்தான்.

விஜ : எல்லோருக்கும் இந்த ஆனந்தம் கிடைக்கிறதா ?

ரேகா : கிடைக்க வேண்டும்.

விஜ : எப்படி ?

ரேகா : ஒரு வேளை காதலினால்...

விஜ : ரேகா! காதல் எப்படி இருக்கும் ?

ரேகா : இறைவனைப் போல.

விஜ : இறைவன் எப்படி இருப்பான் ?

ரேகா : அநேகமாக இரக்கமற்றவனாக......

விஜ : (சிரித்து) இந்த விஷயத்தில் என் டயலாக் பரவாயில்லை போலிருக்கே.

ரேகா : என்ன ?

விஜ : வாழ்க்கை என்பது ஒரு பெரிய ஆறு. விதி என்பது அதன் மீது கட்டப்பட்டுள்ள வாராவதி. காதல் என்பது அந்த வாராவதியின் மேலுள்ள கம்பியில்லா சாதனம்.

[சிரிக்கிறாள்]

ரேகா : விஜயா உண்மையாகச் சொல்லுகிறேன். நீ கடைசி ஸீனில்... எவ்வளவு அற்புதமாக நடித்து விட்டாய். ஆஹா! என்ன சர்வ சாதாரணமாக... என்ன லாவகம்.

விஜ , ஐயையோ தயவு செய்து இதை ஸிதார் வாசிப்பவரிடம் சொல்லி விடாதீர்கள். எனக்கு ஒன்றுமே வரவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ரேகா : ஆமாம்... அவர் எங்கே ?

விஜ : வெளியே போயிருக்கிறார். உலாவ... இல்லை...... வெட்ட வெளியை முறைத்துப் பார்க்க.

ரேகா : ஹூம்...

விஜ : என்ன...... ஏதோ யோசனையா ?

ரேகா : ஒன்றுமில்லை. நான் வருகிறேன்... விஜயா...... உலகில் தன்னந்தனியாக இருந்தால் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று தோன்றுகிறது... ஆனால் இருவர் சேர்ந்தால்...

விஜ : தானே சுவர்க்கமாகிறது.

[சிரிக்கிறாள். ஸிதார் வாசித்தல்.]

★

ரேகா : என்ன...... இந்தப் புதர்களின் பக்கத்திலேயா உட்கார்ந்து வாசிக்கிறீர்கள் ?

சிவ : ஆமாம். இங்குதான் யாரும் குறுக்கிட மாட்டார்கள்.

ரேகா : இங்கு பாம்புகள் நிறைய இருக்குமே.

சிவ : ஆம். அம்மாதிரி தெய்வங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

ரேகா : உங்களுடைய இந்த அநாயாசமான வார்த்தைகள் என் என்னை இவ்வளவு தூரம் கவர்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. இதுவரை நான் எத்தனையோ பேர்களுடன் பழகி இருக்கிறேன். ஒருவரிடமாவது நானாகவே பேச வேண்டுமென்று இதுவரையில் தோன்றியதில்லை... ஆனால்...

சிவ : (தாமதம்) ம்...... வயிற்றுக்காகத் திருடச் செல்லும் மனித

னிட்த்திலும் துடிதுடிப்பு; திரு டன் பயத்தால் திடுக்கிட்டு விழித்துக் கொள்ளும் சுக போகியிடமும் துடிதுடிப்பு...

ரேகா: நதியின் முகத்துவாரத்தில் அணைகட்டி அதைச் சமுத்திரத் திலிருந்து விலக்க இயலுமா?

சிவ: கற்பனை என்பது ஒன்று, வாழ்க்கை வேறொன்று.

[ஸிதார் மீண்டும்]

ரேகா: ஆஹா...... என்ன நறு மணம். செறுக்கு மிகுந்த உங்கள் வாசிப்பே நறுமண மாக உருவெடுத்திருப்பது போல இருக்கிறது. ஏன் எனக்கு இப்படித் தோன்று கிறது. சொல்லுங்கள், இது யாருடைய குற்றம்? என் குற்றமா? இல்லை. உங்கள் இனிமையான சுபாவமும், உயர்ந்த வாசிப்பும் செய்த குற் றமா?

[ஸிதார் வாசிப்பதை நிறுத்து கிறான்.]

சிவ: தாங்கள் தேனீர் அருந்தா மல் வந்து விட்டீர்கள் போலி ருக்கிறதே!

ரேகா: தனியாகக் குடித்தால் தேனீர் எப்படி இனிமையாக இருக்கும்?

சிவ: ம்...... சரி...... நான் வருகி றேன். அந்தத் தென்னந் தோப்பு அதோ அத் தென்னை மரங்கள் எப்படிச் சிப்பாய்கள் போல நிற்கின்றன.

ரேகா: இதோ இந்தப் பக்கத்தில் வாழை மரங்கள் ராஜ கன்னி கைகளைப் போல விளையாடிக் கொண்டிருக்கிறது உங்களுக் குத் தெரியவில்லையா... என்ன ஸிதாரைப் பார்த்தவாறு பேசா மலிருக்கிறீர்கள்?

சிவ: ஸிதார்தானே என் வாழ்க் கை.

ரேகா: (பெருமூச்சுடன்) இந்தச் ஸிதார் உங்கள் வாழ்க்கையா... நீங்கள் (மெதுவாக) என் வாழ் க்கை யில்லையா......?

சிவ: என்ன?... எப்படியோ... ஏதோ ஒரு வாழ்க்கை வேண் டும்.

ரேகா: இது அர்த்தமில்லாத வேதாந்தம்.

சிவ: இல்லை... இது காவியம்.

ரேகா: ஆம். காதலே ஒரு முடி வற்ற புனிதமான காவியந் தானே?... என் மனம் சொல் லுகிறது, "கோகுலத்து இடை ச்சி நீ" என்று. என் மனமே கோகுலம் போல ஆகி விட்ட தா?...... ஆனால் கண்ணன்...

சிவ: ராஜ மாளிகையில் இலவம் பஞ்சு மெத்தையில் அரசன் தவி தவிக்கிறான். நடைப் பாதையில் கை கால்களை முடக் கிக் கொண்டு பிச்சைக்காரன் குறட்டை விடுகிறான். அது அவரவர் சுபாவத்தைப் பொருத்தது.

ரேகா: என்னுடைய அரிய பொருள் ஒன்றைப் பரிகொடு த்து நிற்பது உங்களுக்குத் தெரி யவில்லையா?

சிவ: நான் கூட என் ஸிதார் தந்தியை எங்கேயோ விட்டு விட்டேன். நல்ல உயர்ந்த தந்தி.

ரேகா: நான் வேடிக்கையா செய் கிறேன்? மாலை வேளையில் கதிர வனின் அருகே இருந்து அவனு

டைய நிறங்களால் நிறம் பெருத முகில் மாலையை எப்போதாயினும் யாராவது கண்டதுண்டா?

சிவ: சரி... நான் போகிறேன். நேரமாகிவிட்டது.

ரேகா; நான் சுழல்களில் தண்ணீர் விழுங்கிக் கொண்டிருக்கும் போது, என் காதலனுல் உல்லாசப் பிரயாணம் செய்ய முடியுமா?

சிவ: இதெல்லாம் என்ன சொல்லுகிறீர்கள்?

ரேகா: நான் உங்களை ஒன்று கேட்கிறேன்.

சிவ: என்ன வேண்டும்.

ரேகா: எனக்கு ஏதாவது கொடுங்கள்.

சிவ: சாவா?

ரேகா: முதலில் வாழ்வு கேட்டேன்... அது இல்லாவிட்டால், எனக்கு வாழ்வு எதற்கு?

சிவ: ம்......... அறிவை விலைக்கு வாங்க முடியும்...... உணர்ச்சி, அன்பு ஒருநாளும் சந்தைக்கு வருவதில்லை.

ரேகா: அன்பே ஆதியாகவும், அன்பே அந்தமாகவும் கொண்ட பகவான் இதோ சில ரூபத்தில் என்னுடைய இந்த நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருர். அவர் ஆணையாக...

சிவ: இல்லை... நீங்கள் என்னிடம் விரும்புவது பாபமான காரியம்.

ரேகா: என்ன பாபமா? பக்தி பாபமாகுமா? எனக்கு விடை வேண்டும்.

சிவ: கடவுள் பக்தி ... மல்ல......

ரேகா: தெய்வம் மன... லவா... உங்களை என் ... கவர்ந்தால் அது எப்படி... மாகும்?

சிவ: நரகத்துக்குள்ள வழி எளிது......... கண்களை மூடிக் கொண்டே போகலாம். நான் வருகிறேன்.

ரேகா: தாங்கள் உண்மையாகவே என்னைப் புறக்கணிக்கிறீர்களா?

சிவ: எனக்கு முன்னமேயே விவாகமாகி விட்டது.

ரேகா: என்ன......

சிவ: நான் வருகிறேன். இல்லாவிட்டால் விஜயாவுக்கு வேறு பதில் சொல்ல வேண்டும்.

ரேகா: என்ன...... விஜயாவா? என் விஜயாவா?... எனக்குப் போட்டியாக (தாமதமாக) உலகில் தன்னந் தனியாக இருந்தால் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று தோன்றுகிறது. இருவர் சேர்ந்தால் சுவர்க்கமாக முடியும். குறுக்கே இன்னொருவர் குறுக்கிட்டால் அவரைக் கொன்று விடலாம் என்று தோன்றுகிறது.

(பயங்கரமாகச் சிரிக்கிருள்)

★

[வேறு காட்சி – ஸிதார் ஆங்காரமாக வாசிக்கிருன்.]

சிவ: இருவர் சேர்ந்தால் சுவர்க்கம். குறுக்கே இன்னொருவர் குறுக்கிட்டால் அவரைக் கொன்று விடலாம் என்று...

[ஸிதார் மீண்டும் விறு விறுவென வாசிக்க திடீரென்று ஒரு கம்பி அறுந்து விடுகிறது]

து) விஜயா......
இறக்குந் தருவாயில்
ள்.

ரியும்.

: யாரோ அவளுக்கு விஷம் வைத்து விட்டார்கள்.

சிவ : எதிர்பார்த்தது தானே?

ஜய : என்ன... அவளைப் பார்க்கவும் விரும்பவில்லையா?

சிவ : நான் ஏன் பார்க்க வேண்டும்?

மது : என்ன ?

சிவ : வாழ்க்கை உணர்பவனுக்குத்தானே துன்ப நாடகம்... எனக்கு உணர்ச்சிகள் ஏது?

மது : இவ்வளவு ஹிருதயமற்ற தன்மையா?

சிவ : ஆனால் விஷம் கிடையாது... ஒரு பெண்ணின் பொறாமை இவ்வளவு விஷத் தன்மையா என்று என்னால் யோசிக்கவே முடியவில்லை. நான் மணந்து கொண்டது, என் வாழ்வோடு ஒன்றிப் போனது என் 'ஸிதார்' என்று ரேகாவுக்குத் தெரியாமல் போய் விட்டதா?

சௌ : என்ன ரேகாவா விஷங் கொடுத்தது......

சிவ : நீங்கள் எல்லாம் அப்பால் போங்கள்.

[ஸிதார் வேகமாக வாசிக்கிறான் – சரியான நாதமில்லை தந்தி போன ஸிதாரில்]

சிவ : முள்ளின்றி ரோஜா மலர்வதில்லை...... ஆனால் மலரும் பூக்களைப் புழுக்கள் அரித்து விடுவதைக் காட்டிலும், அவைகள் மலராமலேயே இருப்பதில் என்ன கெடுதல்?

[மீண்டும் ஸிதார் வாசிக்க முயற்சிக்கிறான்.]

★

ஆசை

முல்லைக் கொப்பை அசைத்துப் புது
முறுவ லூட்டுந் தென்ற லென
அல்லை நீக்கிக் கலைபரப்பி குமுதம்
அலரச் செய்யு மதிய மென
எல்லை யில்லா ஆனந்தம் தரும்
யாழும் கலைஞன் விரலு மென
நல்ல தமிழும் நானு மென்று
புவி நவில இணைய மாட்டேனோ?

கா. மு. ஷெரீப்

நமது தமிழ்நாடு

[சுத்தானந்த பாரதி]

வீரர் நாடே - பர - சூரர் நாடே
விருந்திற் சிறந்த - உப - காரர் நாடே
தீரர் நாடே - திருத் - தொண்டர் நாடே
தெய்வப் புலவர்களைக் கொண்ட நாடே!

ஆம் உண்மை நமது தமிழகம் வீர தீர சூரர் நாடுதான்; சங்க நூல்களைப் பார்த்தால் தமிழர் வீரம்

என்னை முன் நில்லன்மின்
தெவ்விர் பலர் என்னை
முன்னின்று கன்னின்றவர்

என்று பேசும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது தமிழகம் சீரும் சிறப்பும் தெய்வப் பெருமையும் பெற்று விளங்கியது. தொல்காப்பியம் போன்ற ஓர் இலக்கணம் தோன்ற வேண்டுமானல் அதற்கு முன் எத்தனையோ இலக்கணங்கள் தோன்றியிருக்க வேண்டும்; எத்தனையோ ஆண்டுகளாகக் காதலும் வீரமும், ஈகையும், செல்வ முயற்சியும் அறிவும் திருவுங் கொண்டு பண்பட்ட தமிழர் நாகரிகமே தொல்காப்பியப் பொருளதிகாரமாக விளங்குகிறது. இன்று நாம் பெரு முயற்சியுடன் தேடும் சீர்திருத்த வாழ்வைப் பல நூற்றாண்டுகட்கு முன்பே தமிழர் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் இன்று நாம் வேண்டும் காதலுரிமையும், பெண்ணுரிமையும், ஆண் வீறும், சாதியிறுமாப்பில்லாத ஒருமையும், செல்வத் தொழில் முயற்சிகளும் இயல்பாயிருந்தன. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்—" என்பது சாணை பிடித்த மணிமொழி; மனிதர் அனைவரும் பிறவியிற் சரி நிகர் சமானம் — அதில் சாதி வருண வேறுபாடில்லை; வேறுபாடு எதில் — சிறப்பு எதில்? செய் தொழில் வேற்றுமையால். அவரவர் தொழிலின் இயல்பிற் கேற்றபடி சமுதாய வாழ்வில் படிப்படியாக அவரவருக்கும் இடமிருந்தது; அரசன் அரியணை வகித்தான்; புலவன் ஏடு பிடித்தான், உழவன் கலப்பை யேந்தினன்; வீரன் வாள் பிடித்தான் — எல்லாரும் நமது தமிழ், நமது தமிழர், நமது தமிழகம், நம்மவர் பணி செய்கிறோம் என்ற பொதுநல வுணர்வுடன் நாட்டுக்கே தமது வாழ்வை நல்கினர். அக்காலத் தமிழ் நாடு எப்படி யிருந்தது?

உறு பசியும் ஓவாப் பிணியும்
செறு பகையும்
சேராது இயல்வது நாடு.

நாட்டில் பஞ்சமில்லை; பட்டினிப் பிணங்கள் குவியவில்லை; கொள்ளை நோய்களால் மாந்தர் இறப்பதில்லை; எல்லாரும் உடலுறுதியுடன் நிறைநாட் செல்வராய் வாழ்ந்தனர். எல்லாரும் வீரக் கலை பயின்றனர்; புறப் பகைவர் வந்தால் புறங்காட்டி ஓடச் செய்தனர்; — இத்தகைய வீறு பெற்ற வள நாட்டில் நாம் இருந்தோம். நமது நாட்டின் வளத்தைச் சொல்லுங்கால் வள்ளுவர் தற்காலப் பொதுவுடைமைக் காரரும் திகைக்கும்படியாக ஒரு எட்டு முன் வைக்கிறார்.

நாடு என்ப நாடா வளர்த்த;
நாடு அல்ல
நாட் வளந்தரு நாடு.

இக்காலப் பொதுவுடைமை

புவிமகள் ஈந்த தனைப்
போதிய மட்டும்
அவ்ரவர் துய்த்தல் அறம்:

அவரவர் பாடுபட்டு நிலம் தரும் விளைவை அவரவர் தேவைக்குப் போதுமானபடி ஒவ்வொருவரும் துய்ப்பதே சம தர்மம் — பொது அறம். உழைப்பிற்கேற்ற பிழைப்பு; உழையாதவனுக்கு உண்ண உரிமையில்லை என்பது சமவுரிமைக் கொள்கை. வள்ளுவர்ஒரு நாடு என்றால் இயற்கை வளங்கள் நிரம்பி யிருக்க வேண்டும்; நாம் பிற நாட்டை நாடாமலே எல்லா வளங்களும் எய்தும்படி செழிக்க வேண்டும். தன்னுரிமையுடன் அதில் நாம் பாடுபட்டுப் பிழைக்கும்படி யிருக்க வேண்டும்; நமது தேவைகளுக்குப் பிற நாட்டை நாடும்படியான வறட்சி கூடாது; நமது முயற்சி எதை நாடியதோ அதைத் தரும் வண்மையுள்ள வளநாடே நாடு — என்கிறார். இத்தகைய நாட்டிற்கு ஐந்து அணிகளை வள்ளுவர் கூறுகிறார்.

பிணி யின்மை — செல்வம் —
விளைவு, இன்பம் — ஏமம்
அணி யென்ப நாட்டிற்கிவ்வைந்து.

நாடு என்றால் அது சொத்தை சொள்ளைகளும், காய்ச்சல் கழிச்சல்களும், நடைப் பிணங்களும் நிறைந்த நாடன்று. இரும்புத் தசைகளும், வைர நரம்புகளும், சிங்க நெஞ்சமும், சிலைத் தோள்களும் கொண்ட வீரக் கனல் மைந்தர் கூடிய நாடு. தமிழக ஆண்மைக்கு விளக்கமே முருகன். தமிழ்ப் பெண்மையின் விளக்கமே வள்ளி — மாதருரிமையும், செல்வ முயற்சியும், பொருள் விளைவும், அற வாழ்வும், அறத்தால் வரும் இன்பமும்; அறிவுந் திருவும் சேர்ந்த உட்களிப்பும் மல்கியதே நமது நாடு.

மங்கையர்தம் கற்பனல் வீசு நாடே
மாசற்ற வாய்மையே பேசு நாடே
எங்கும் அறந் துலங்கும் வண்மை நாடே
எல்லாரும் ஓர் குலமென் றெண்ணு நாடே

தமிழர் சமயம் சாதிமத பேதமில்லாத அன்புநெறி; அன்பே சிவம்; ஒன்றே இறைவன்.

எல்லா வுயிர்க்கும்
இறைவன் ஒருவனே
எல்லா வுடலும்
இறைவன் ஆலயமே

என்பது தமிழர் பொது நெறி; இதுதான் உபநிஷத்துக்களின் கருத்துமாகும். உடல் பல; உடலோனுன இறைவன் ஒருவனே என்பது வேதக் கருத்தாகும். சாதி என்ற பெயரே கீதையில் இல்லை. குண கர்ம விபாகமே சாதுர் வர்ணம்— அதாவது பிறப்பில் எல்லாரும் சமமே; அவரவர் குணத்தாலும் தன்மையாலும், செய்யும் தொழிலாலும் அவரவர் சிறப்பான நிலை பெறுகின்றனர் என்கிறது கீதை. தமிழர் அக்காலம் வாழ்ந்த சித்தாந்த வாழ்வும் ஆரியர் வாழ்ந்த வேத வாழ்வும் அடிப்படையில் ஒன்றே; ஒருமையை, ஆன்மநேய ஒருமையை அடைப்படையாகக் கொண்டனவே. இந்த ஒருமை வாழ்வை அருமையாக விளக்கியவர்கள் திருமூலர், தாயுமானுர், அப்பர், வள்ளலார் முதலிய செந்தமிழ் முனிவர்களே.

ஆதி நாடே – அருட் – சோதி நாடே
அன்பே கடவுளெனும் வேத நாடே
சாதி வேற்றுமை யில்லா - நீதி நாடே
சத்திய சன்மார்க்க போத நாடே

இத்தகைய தமிழகம் சன்மார்க்கத் துறையிலும், சமுதாய வாழ்விலும், அறிவிலும், தொழில் முயற்சியிலும், செல்வத் திருவிலும் வீரவெற்றியிலும் உலகின் முன்னணியி லிருந்தது.

முன்னுளில் உலகமெலாம்
கப்பலூர்ந்தோம்
முச்சங்கக் கலை வளர்த்தோம்
தொழில் வளர்த்தல்
பொன்னுறு நாட்டினிலே
பொங்கவைத்தோம்
புவியரசர் கவியரசர்
புலவரை வென்ற
தன்மயராம் தவத்தரசர்
தறுகண் வீரர்
தனைலும் கற் பரசிகளும்
தழைக்க வாழ்ந்தோம்;
அன்ன புகழ் இந்நாளும்
அடைய வல்லோம்;
அயராமல் எழுந்திருமின்
அருட் பணிக்கே;

இது பழைய கதை; தமிழ் நாடு சங்க காலத்திலிருந்து படிப்படியாக இறங்கி இன்று எந்த நிலைக்கு வந்திருக்கிறது என்பதைக் காண்போம்.

●

விஞ்ஞானமும் சமூகமும். ஆசிரியர்: பி. கோதண்டராமன் எம். ஏ. பி. எல்.; பிரசுரம்: கார்த்திகேயினி பிரசுரம், இராமச் சந்திரபுரம், புதுக்கோட்டை; விலை: ரூ 2–8–0.

விஞ்ஞானம் நாளுக்கு நாள் வளர்ந்து மனித சமூகத்திற்கே பெரும் சேவை செய்து வருவதை தெளிவாக உணர்ந்தவர்கள் தான் மேலும் மேலும் அதன் முன்னேற்றத்தில் ஈடுபட்டு, அதை சமூகத்திற்குப் பல துறைகளிலும் பயன் படுத்த முடியும். இந்த வகையில் வெளிவந்த நல்ல ஆராய்ச்சிப் புத்தகம் ‘விஞ்ஞானமும் சமூகமும்’. விஞ்ஞானத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து அது சமூகத்தோடு எப்படி ஒட்டி வளர்ந்து வருகிறது, மேற்கொண்டு அதையே சமூக சேவைக்கு எப்படிப் பயன் படுத்தலாம் என்பதையெல்லாம் தக்க ஆதாரங்களுடனும், மேற்கோள்களுடனும் காட்டுகிறார் இதன் ஆசிரியரான பி. கோதண்டராமன்.

●

கி. பி. 2000. ஆசிரியர்: மு. வரதராசனார்; பிரசுரம்: தமிழர் பதிப்பகம், 81. லிங்க செட்டி தெரு, சென்னை; விலை: ரூ 1—12—0.

இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது. இனி அதன் எதிர் கால அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகள் எப்படி எப்படியெல்லாம் முன்னேற வேண்டும் என்பதை அந்தந்தத் துறையில் கைதேர்ந்த நிபுணர்கள் யோசித்து வருகிறார்கள். சிறந்த சிந்தனை சக்தியும், எந்த நிலைமையையும் தெள்ளத் தெளிய அறிந்து கொள்ளும் பண்பட்ட உள்ளமும், நாட்டு முன்னேற்றத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட யாரும் அதை எழுத்தளவிலாவது சாதித்து வெற்றி கொள்ள முடியும். அந்தத் துறையில் கி. பி. 2000 ஒரு நல்ல முயற்சி.

விஞ்ஞானத்தோடு ஒட்டிய சிறந்த முற்போக்குக் கருத்துகள் கொண்ட ஒரு சிறந்த சிந்தனைக் கதை கி. பி. 2000. இப்புத்தகத்தின் வாயிலாக வாழ்க்கையை, சமூகத்தை, நாட்டை சீர்திருத்தும் வகையில், பல நல்ல யோசனைகள் கூறுகிறார் ஆசிரியர் மு. வரதராசனார். ஆனால் அவருடைய கருத்துக்களை முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆசிரியர் குறிப்பிடுவது போல் ‘எதிர் காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்டு உணர்வதற்கும் தெளிவு கொண்டு

எண்ணுவதற்கும்' இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டி. இதே முறையில் இன்னும் சில புத்தகங்களாவது வெளி வருவது நமது நாட்டை, சமூக நிலைமையை உயர்த்த வழி கோலுவதாகும்.

●

சரசுவதி. ஆசிரியர்: பாசரசு; பிரசுரம்: பாசரசு காரியாலயம், அரண்மனைக்காரத் தெரு சென்னை. விலை: ரூ 1—8—0.

'சம்சார சாகரம்' என்று சொல்லி இல்லற வாழ்க்கையை வெறுத்துக் கூறி அலுத்துக் கொள்பவர்களுக்கெல்லாம் 'சரசுவதி' என்ற பெயரில் வெளி வந்திருக்கும் இப்புத்தகம் ஒரு அறை கூவல். தொல்லையும், துயரமும் நிறைந்த (அப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள் பல இல்லற வாசிகள்!) இல்லற வாழ்க்கையை கலாரசனையோடு சுவைத்து அனுபவிக்கிறார்கள் இக்கதையின் நாயகனும், நாயகியும். புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டால் பொழுது போவதே தெரியாது. மணமக்களுக்கு 'சரசுவதி'யைப் பரிசாகக் கொடுக்கலாம்.

●

தமிழ்ப்படம். ஆசிரியர்: எஸ். ஆர். வெங்கடேஸ்வரன்; காரியாலயம்; தியாகராய நகர், சென்னை; விலை: ?

ஒரு சினிமாப் பத்திரிகைக்கு இருக்க வேண்டிய எல்லா அம்சங்களும் குறைவறப் பெற்று நல்ல முறையில் வெளி வந்திருக்கிறது இப்புதுப் பத்திரிகை. இதன் ஆசிரியரான எஸ். ஆர். வெங்கடேஸ்வரன், 'பிலிம் ஜோதி' என்ற சினிமாப் பத்திரிகையை நடத்தி நல்ல அனுபவம் பெற்றவர். முதல் இதழே 'தமிழ்ப்பட'த்தின் முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

●

தாய் நாடு (சுதந்திர மலர்) ஆசிரியர்: க. நாராயணன்; காரியாலயம்: தாய்நாடு காரியாலயம், புதுக்கோட்டை: விலை: ரூ 2-0-0.

சுதந்திரத் திருநாள் நினைவாய் வெளியிடப்பட்டிருக்கும் இம்மலரில் கே. எஸ். ராமசாமி சாஸ்திரி, பெ. நா. அப்புசாமி, பெ. தூரன், பி. கோதண்டராமன், எஸ். எஸ். மாரிசாமி, 'சுகி', ப. தனுஷ்கோடி முதலியோரின் நல்ல கட்டுரைகளும் கதைகளும் இடம் பெற்றிருக்கின்றன. காங்கிரஸ் தலைவர்கள் பிரமுகர்களின் படங்கள் இடையிடையே மலரை அலங்கரிக்கின்றன.

●

அருணோதயம். ஆசிரியர்: கே. பி. சாரதி; காரியாலயம்: ஒக்கிலியர் வீதி, கோயமுத்தூர்; விலை: ரூ. 0—4—0.

சுதந்திர இந்தியாவின் அருணோதய காலத்தில் வெளி வந்துள்ள புதிய மாத வெளியீடு இது. அரசியல், கதை, கட்டுரை, நாடகம், விமரிசனம் பாலர் கதை முதலிய எல்லா அம்சங்களும் தாங்கிய ஒரு இலக்கியச் சோலையாக விளங்குகிறது இது. 'விசாக'னின் "அருணோதயம்" பத்திரிகையின் லக்ஷியத்தை விளக்குவதாக இருக்கிறது. கே. சி. எஸ். அருணாசலத்தின் 'கனல் மேல் நுகர்ந்த கவிதை' சுவைக்கத் தக்க ஒரு இனிய நாடகம். 'அருணோதய'த்தின் அடுத்த ஒளி இன்னும்

சிறந்த முறையில் வெளி வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

●

அமுதம். ஆசிரியர்: கே. சி. எஸ். அருணாசலம்; காரியாலயம்: திருச்சி ரோடு, கோயமுத்தூர்; விலை: ரூ 0—8—0.

கே. சி. எஸ். அருணாசலத்தை ஆசிரியராகக் கொண்டு மாதமொரு புத்தகமாக வெளி வந்த இந்த 'அமுதம்' இப்போது பெரிய அளவில், கவர்ச்சிகரமான பத்திரிகையாக மலர்ந்திருக்கிறது. முதல் இதழில் பி. கோதண்டராமன், 'பல்கலைக் கலைஞன்' லெயினார்தோ தெவேன்சியின் வாழ்க்கைச் சித்திரத்தை சுவை பட எழுதியிருக்கிறார். பிரிவினை பற்றி பி. என். ராமலிங்கம் எழுதியிருக்கும் கட்டுரை பிரிவினைப் பிரச்னையை நல்லமுறையில் ஆராய்ந்து அதனால் ஏற்படும் பலா பலன்களை ஆதார பூர்வமாய் விளக்குகிறது. 'கலை வளர்க்கும் புது உலகம்' கலைத்துறையில் ஒரு நல்ல கட்டுரை.

கதைகளுக்கு இரண்டொரு படங்கள் இருப்பதும், அனுபந்தம் போல் வெளியாகும் படங்களின் கீழ் குறிப்புகள் எழுதிச் சேர்ப்பதும் அவசியம். எட்டணா விலை என்பது சற்று அதிகமாகத்தான் தோன்றுகிறது.

— 'உமாபதி'

★

வணிகா (தீபாவளி மலர்)

வணிக இளைஞர்களின் முயற்சியால் உருவாகியிருக்கும் இந்தக் கையெழுத்துப் பத்திரிகை தீபாவளி மலர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றது. இடையிடையே சில நல்ல வர்ணப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பல இளம் எழுத்தாளர்களின் கதை, கட்டுரை, கவிதைகள் இம் மலரில் தாராளமாக இடம் பெற்றிருக்கின்றன. சிரிப்பதற்கான விஷயங்களும் மலரில் நிறைய இருக்கின்றன. இளைஞர்களின் கைத்திறமைக்கும், உற்சாகத்திற்கும் இம்மலர் ஒரு எடுத்துக்காட்டு.

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

தா. நாகலிங்கம்

அத்தியாயம் பதினெட்டு

சுமதியும் சுந்தரேசனும் சேகரன் வீட்டுக்குப் புறப்படும்போதே சாயங்காலத்திற்குள் ராஜம்மாளைப் பார்த்து விட்டுத் திரும்பி விடுவது என்றுதான் தீர்மானித்துப் புறப் பட்டார்கள். ஆனால் சேகரன் வீட்டு நிலையும், முத்துசாமி புவனா முதலியோரின் வருகையும் சேர்ந்து அன்று புறப்படும் எண்ணத்தையே அவர்களுக்கு உண்டாக்க வில்லை. அதிலும் சுமதி காப்பி, சமையல் வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டதால் வீடு செல்ல வேண்டுமே என்ற சிந்தனையே அவளுக்கு எழவில்லை. பேச்சும் சிரிப்புமாக கலகலப்பாக இருந்த அந்த இன்பச் சூழ் நிலையில் சுமதியும், சுந்தரேசனும் வீட்டு நினைவையே இழந்து ஐக்கியமடைந்து விட்டார்கள்.

சுமதி சாதாரணமாக எங்கும் வெளியில் போய் நாலு பேருடன் பேசி வருவது என்பதோ அல்லது அடுத்த வீடு, பக்கத்து வீட்டுக்குச் சென்று வம்பளந்து விட்டு வருவது என்பதோ கிடையாது. அதை அவள் விரும்புவதும் இல்லை. அதனால் தனக்கு வேண்டியவர்களாக, தனது மதிப்புக்கு உரியவர்களாக இருந்த சேகரன் வீட்டில்-அவளுக்கு அது முதல்தடவையாக இருந்த போதிலும் கூட—தாராளமாகப் பழகவும், தன் வீட்டைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கவும் முடிந்தது. ஆனால் அதுகூட அன்று இரவு வரைதான் நீடித்தது. வெகு நேரம் பேசிக் கொண்டிருந்ததால் அன்று எல்லோரும் படுக்க ஒரு மணிக்கு மேல் ஆகிவிட்டது. தூங்குவதற்கு சற்று முன்தான் காலையில் எழுந்ததும் வீடு செல்ல வேண்டுமே என்ற எண்ணம் சுமதியின் உள்ளத்தில் லேசாய் எழுந்தது. காப்பி சாப்பிடாமல் போக விட மாட்டார்கள்; ஆகையால் காப்பி சாப்பிட்டதும் கிளம்பி விட வேண்டியதுதான் என்று தனக்குள் முடிவு செய்துகொண்டாள். அதை யடுத்து தான் அங்கு வந்ததும் தன் கற்பனையில் உருவகப் படுத்திய புவனாவுக்கும், பிறகு தான் கண்ணாரக் கண்ட புவனாவுக்கும் இருந்த ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தவள் அச்சிந்தனை ஒரு முடிவுக்கு வருமுன்னே மெய் மறந்து தூங்கி விட்டாள்.

★

கீழ் வானத்தில் அடர்ந்திருந்த இருட் படலம் மெல்ல மெல்ல விலக ஆரம்பித்தது. கீழிருந்து மேல் நோக்கி வந்த சிறுசிறு ஒளி

ரேகைகள் அந்த இருட் குவியலைக் கிழித்துச் சென்றன. கொஞ்சம் கொஞ்சமாய்த் தன் ஒளியை இழந்து வந்த ஒரு நட்சத்திரம் ஒரு முறை தன் ஒளியைப் பூரணமாகச் சிந்திவிட்டு வானத்தில் மறைந்தது, முற்றிலும் எண்ணெய் வரண்ட ஒரு தீபத்தின் சுடர், அணையும் முன் ஒரு முறை பிரகாசித்துப் பின் அணைவது போல! எங்கேயோ சேவல் ஒன்று கூவின சத்தத்தைக் கேட்டு தெரு நாய் ஒன்று 'வள், வள்' என்று தொண்டை கிழியக் குலைத்துக் கொண்டிருந்தது.

அந்த சத்தத்தைக் கேட்டோ என்னமோ ராஜம்மாள் விழித்துக் கொண்டாள். மெல்ல எழுந்து கட்டிலின் மேல் உட்கார்ந்து சோம்பல் முறித்துக் கொண்டு கூடத்தைப் பார்த்தாள். சமையல் அறையில் படுத்திருந்த பெண்களோ, கூடத்தில் படுத்திருந்த ஆண்களோ ஒருவரும் இன்னும் எழுந்திருக்க வில்லை. கண்ணன் தலைகாணியையும் பாயையும் விட்டு ஒரு புறமாக உருண்டு கிடந்தான்.

பழைய தெம்பு ராஜம்மாளுக்கு இன்னும் வரவில்லை யென்றாலும் கடந்த இரண்டு மூன்று நாட்களில் இருந்ததைவிட இப்போது அதிக பலம் பெற்று ஓரளவு உற்சாகமாகவும் இருந்தாள். பலஹீனமும் இப்போது அவ்வளவாய் இல்லை என்பது அவளுக்கே தெரிந்தது. அப்போதே எழுந்து சுமாராய் நடமாடக் கூடிய தைரியம் அவளுக்கு இருந்தாலும் போதுமான அளவு ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற டாக்டரின் குறிப்பும் கட்டளையும் அவளைச் 'சிவனே' என்று இருக்கச் செய்தன.

எட்டு மணிக்குள் காப்பி பலகாரம் தயாராகி விட்டது. எல்லோரும் குளித்துச் சாப்பிட்டு விட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுமதியின் முன் குறிப்பையொட்டி சேகரனுடனும் முத்து சர்மியுடனும் பேசிக் கொண்டிருந்த சுந்தரேசன் அப்பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு சொல்லிக் கொண்டு கிளம்புவதற்கு ஆயத்தமானான்.

அன்று மட்டுமாவது இருந்து விட்டுப் போகும்படி சுமதியையும் சுந்தரேசனையும் வற்புறுத்தினார்கள். அவர்களுக் கெல்லாம் தானும், சுமதியும் இனி அடிக்கடி அங்கு வந்து போவதாக உறுதி கூறினான் சுந்தரேசன். புவனா கண்ணனை இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தாள். பிடிவாதமாக அவர்கள் போக வேண்டும் என்பதைக் கேட்டு, "சரி, நீங்கள் வேண்டுமானால் போய் வாருங்கள். கண்ணன் மட்டும் இங்கேயே இருக்கட்டும்" என்றாள் சிரித்துக் கொண்டே.

"ஆஹா! இருக்கட்டுமே? நான் வேண்டாமென்றா சொல்கிறேன். இந்த ரேஷன் காலத்திலே ஒரு ஆள் சாப்பாடு மிச்சம்" என்றாள் சுமதி.

"ஆமாம், அவனுக்கு நேரத்துக்கு அரைப்படி அரிசி வேணுமில்லே! அது மிச்சம்தான் ஒனக்கு" என்றாள் காமாக்ஷியம்மாள் சுமதியைப் பார்த்து. 'கொல்' லென்ற சிரிப்பொலி அந்தக் கூடமெங்கும் பரவியது!

கடைசியில் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டான் சுந்தரேசன். புவனாவிடமிருந்து கண்ணனை வாங்கிக்

கொண்டு அவனைப் பின் தொடர்ந் தாள் சுமதி, தெருவில் நின்ற வண்டியை நோக்கி.

வீதி வரையில் சென்று அவனை வழியனுப்பும் நோக்கத்துடன் சுமதியின் பின் சென்ற, புவனு மீண்டும் ஒருமுறை சுமதியை அந்த வாரத்துக்குள் வந்து போகும்படி சொல்லத் தவறவில்லை. சுமதி அவசியம் வருவதாக உறுதி யளித்த பின்தான் புவனுவுக்குக் கொஞ்சம் சமாதானமாக இருந் தது. அவர்கள் ஏறிச் சென்ற வண்டி கண் பார்வையிலிருந்து மறையும் வரையில் அதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பின் வீட்டுக்குள் நுழைந்தாள். 'நாளை தவறினாலும் மறு நாளாவது தான் அவசியம் ஊருக்குச் செல்ல வேண்டுமென்று சேகரனிடம் முத்துசாமி சொல்லிக் கொண்டிருந்ததும், காமாக்ஷியம்மாள் அதை ஆமோதித்ததும் புவனுவின் காதில் விழுந்தன!

அத்தியாயம் பத்தொன்பது

ஜெவந்திபுரம் அமர்க்களப் பட்டுக் கொண்டிருந்தது, வரவிருந்த பாரதி திருநாளை யொட்டி. மாதர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் அங்கும் இங்கும் அலைந்து தீவிரமான ஏற்பாடுகளில் முனைந்திருந்தார்கள். குறிப்பாய் காரியதரிசி ஜெயாபாய் தரையில் கால் பாவாமல் பறந்து கொண்டிருந்தாள். ஜெவந்திபுரமும் அதைச் சுற்றியிருந்த மற்ற ஊர்களும் பாரதி திருநாளை என்றென்றும் மறக்கக் கூடாது என்று ஆசைப் பட்டாள் அவள். அந்த ஆசையும் பாதிக்கு மேலாக உருப் பெற்று வந்தது!

ஒரு பெரிய விசாலமான மைதானத்தில் விழாவுக்காக ஒரு பெரிய பந்தல் போடப் பட்டிருந்தது. பந்தலின் ஒரு கோடியில் ஒரு அழகான மேடை. எங்கேயோ பக்கத்து ஊரில் நடந்து கொண்டிருந்த நாடகக் கம்பெனியிலிருந்து வாங்கி வந்த மூன்று நான்கு சீன்களும், முன்புற ஜாலர் அலங்காரங்களும் சேர்ந்து அந்த மேடைக்கு ஒரு தனி சோபை யளித்தன.

அவ்வூரின் பிரசித்திபெற்ற வேலைப்பாடமைந்த அழகிய சிறு தேரை பாரதி பட ஊர்வலத்துக்குக் கொடுக்க அவ்வூர் சிவன் கோவில் தர்மகர்த்தா ஒப்புக் கொண்டார். விழாவுக் கென்று எங்கிருந்தோ இரண்டு யானைகளை வரவழைக்க ஒரு அன்பர் பொறுப் பேற்றுக் கொண்டார். விழாவுக்கு மூன்று நாட்களுக்கு முன்பே விசேஷமாக மின்சார சப்ளை பெற்று பந்தலுக் குள்ளும் பந்தலுக்கு வெளியிலும் விளக்கு அலங்காரங்கள் பிரமாதமாகச் செய்யப் பட்டன. வெகு தூரம் கேட்கும் படியான ஒலி பெருக்கிகளும் அமைக்கப் பட்டிருந்தன. மிராசுதார் ஒருவர் விழாவுக்கு வரும் வெளியூர் வாசிகளுக்கான ஜாகை, காப்பி, சாப்பாட்டு வசதி செய்ய ஒப்புக்கொண்டார். கிராம மணியம் தேவையான வாழை, கமுகு, ஈந்து, குருத்து, மாவிலை முதலியவற்றை 'சப்ளை' செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அந்த வட்டாரத்திலேயே புகழ்பெற்ற நாயனக்காரர்கள் பாரதி கைங்கரியமாக நாயனம் வாசிக்கும் பங்கு எடுத்துக் கொண்டார்கள். எதை வேண்டுமென்பது, எதை வேண்டாமென்பது என்று கழக நிர்

வாகிகளும் காரியதரிசியும் திணறும் அளவுக்கு ஜெவந்திபுர வாசிகளும் சுற்று வட்டாரத்தின ரும் விழாவுக்குத் தங்கள் அமோக ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கலாயினர்.

ஒருபுறம் நடன, நாடக, இசை நிகழ்ச்சிகளுக்காக பிரமாதமான ஒத்திகைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள் கழக நிர்வாகிகளில் சிலர்.

இத்தனை ஏற்பாடுகளையும் கண்டு பொங்கிப் பூரித்தது போல் கடைசியாக எத்தனை எத்தனையோ இதயங்கள் ஆவலுடன் எதிர் பார்த்த அந்த இன்பத் திருநாள் வந்தது!

திருநெல்வேலியைச் சேர்ந்த வரும், அப்போது கோவையில் வேலை பார்த்து வந்தவருமாகிய பேராசிரியர் சிவகுருநாத பிள்ளை யை விழாத் தலைவராகப் போட்டிருந்தார்கள். முத்துசாமியைத் தவிர மற்றும் இரண்டு சொற் பொழிவாளர்கள் – நெல்லையைச் சேர்ந்தவர்கள் – விழாவில் பங்கு கொள்வதாக இருந்தார்கள். வேறு சில பிரமுகர்களுக்கும், பத் திரிகைக்காரர்களுக்கும் அழைப் புகள் அனுப்பியிருந்ததால் எல் லோரையும் வரவேற்று அழைத்து வர ஏழெட்டுக் கார்கள் திருநெல் வேலி ஜங்ஷனுக்குக் கிளம்பின, கருக்கலிலேயே!

ஜங்ஷனில் இரண்டு மூன்று பெண்களும், ஏழெட்டு ஆண் களும் ரோஜா மாலையும் கையு மாய் நின்று கொண்டு ரயில் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். 'யார் வரப் போகி றார்கள்? யாருக்கு வரவேற்பு? எங்கே கூட்டம்? எத்தனை மணிக்கு? வருபவர்கள் காங்கிரஸ் தலை வரா? மாகாண மந்திரியா? அவர் கள் ஜாகை எங்கே? ஊர்வலம் உண்டா?' என்றெல்லாம் பலர் நச்சரித்துக் கொண்டு நிமிஷத் துக்கு நிமிஷம் கூட்டத்தை அதிக மாக்கினார்கள். கடைசியில் சற்று மங்கலான வெளிச்சம் கண்ணில் படவும் பிளாட்பாரத்தில் கொஞ் சம் கலகலப்புண்டாயிற்று.

"பாரதியாருக்கு ஜே! பாரதி விழாத் தலைவர் சிவ குருநாத பிள் ளைக்கு ஜே! பிரசங்க மணி முத்து சாமிக்கு ஜே! மாதர் முன்னேற் றக் கழகத்துக்கு ஜே!" என்ற கோஷங்கள் பிளாட்பாரம் எங் கும் ஒலித்தன. தலைவரும் முத்து சாமியும் ஒரே பெட்டியிலிருந்து இறங்கினார்கள். மீண்டும் ஒரு முறை "ஜே" கோஷத்தைத் தொடர்ந்து இறங்கினவர்களின் மேல் கதம்ப மலர் மாரி பொழிந் தது. பிளாட் பாரமே மலர் மெத்தையாயிற்று! ஜெயாபாய் முன்சென்று தலைவரையும், முத்து சாமியையும் கை கூப்பி நமஸ் கரித்து வரவேற்றாள். கழகத் தைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் இரண்டு ரோஜா மாலைகளை அவர் கள் கழுத்தில் அணிவித்து, கையில் செண்டும் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து மேலும் இரண்டு மூன்று மாலைகள் அவர் கள் கழுத்தில் விழுந்தன. மாலை களின் கனத்தைத் தாங்க முடி யாமல் இருவரும் கையில் கழற்றி வைத்துக்கொண்டனர். மற்றும் ஒரு 'ஜே' கோஷத்துடன் கூட் டம் பிளாட் பாரத்தை விட்டு நகர ஆரம்பித்தது! பத்திரிகை நிருபர்களின் காமிராக்கள் 'கிளிக் கிளிக்' என்று இடையே ஒலித்தன.

முத்துசாமிக்கும் சிவ குருநாத பிள்ளைக்கும் எங்கோ கனவுலகில் நடப்பது போல் இருந்தது.

"இந்த ஏற்பாடுகளை யெல்லாம் பார்த்தால், இன்னும் அங்கு எவ்வளவு பிரமாதமாக இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது" என்றான் முத்துசாமி தலைவரிடம்.

"ஆமாம், எனக்கும் கூட அப்படித்தான் தோன்றுகிறது. ஓரளவு திகைப்பும் ஏற்படுகிறது" என்றார் சிவகுருநாத பிள்ளை உண்மையை மறைக்காமல்.

இதற்குள் மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்த கார் கண்ணில் படவே காரியதரிசி வழிகாட்ட இருவரும் சென்று காரில் உட்கார்ந்தார்கள். முக்கியமானவர்கள் எல்லாம் கார்களில் ஏறிக்கொண்டதை மேற் பார்வை பார்த்து விட்டு தலைவருப் முத்துசாமியும் ஏறியிருந்த காரின் முன் சீட்டில் உட்கார்ந்தபடி திரும்பி "புறப்படலாமா?" என்றான் இருவரையும் பார்த்து.

"ஆஹா!" என்றார்கள் இருவரும் ஏககாலத்தில். "ஜே" கோஷத்துடன் கார்கள் ஜெவந்திபுரத்தை நோக்கிக் கிளம்பின. ஸ்டேஷனுக்கு வந்தவர்களும், ரயிலிலிருந்து இறங்கியவர்களும் சேர்ந்த கும்பல் இதையெல்லாம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தது!!

கிழக்கு வெளுத்து விட்டது. இன்னும் சூரியோதயம் ஆகவில்லை. குளுகுளுவென்ற காலைக் காற்று காரின் இருபுறங்களிலிருந்தும் உள்ளே புகுந்து அங்கு இருந்தவர்களுக்கு ஒரு விதமான புது உணர்ச்சியை உற்சாகத்தை ஊட்டிச் சென்றது. வயல் வரப்புகளில் வேலை செய்ய பாதையின் ஓரத்தில் அங்கங்கே போய்க் கொண்டிருந்த ஒரு சிலரைத் தவிர வழியில் அதிகமான நடமாட்டம் இல்லை, அந்த அதிகாலை வேளையில்.

அந்த அமைதியான சூழ்நிலையில் முத்துசாமியின் இதயம் ஆனந்த பரவசத்தில் இருந்தது. சிவ குருநாத பிள்ளை கண்ணையும் கருத்தையும் கவர்ந்த பசுமை நிறைந்த கிராமியக் காட்சிகளை மௌனமாகப் பார்த்துக் கொண்டு வந்தார். காரில் பூரண அமைதி தாண்டவ மாடியது.

கார் ஜெவந்தி புரத்தின் எல்லையை நெருங்கிய போது கீழ் வானம் தங்க முலாம் பூசியது போல் தகதகத்துக் கொண்டிருந்தது. அதையடுத்து ஒரு சிறிய நட்சத்திர மண்டலம் தென்பட்டது.

"அதோ! அது தான் ஜெவந்தி புரம். மின்சார விளக்குகள் எரிவது தான் விழாப்பந்தல்" என்றாள் ஜெயா எதிரில் இருந்த நட்சத்திர மண்டலத்தைக் காட்டி.

"ஏற்பாடுகள் எல்லாம் பிரமாதமாகத்தான் இருக்கின்றன!" என்றார் தலைவர்.

"இதெல்லாம் ஒரு பிரமாதமா? ஏதோ சக்தியனுசாரம் செய்திருக்கிறோம்" என்று அடக்கத்துடன் சொன்னாள் ஜெயா. வெளிப்படைக்கு அவள் அப்படிச் சொன்னாலும் கூட, பாரதி விழா ஏற்பாடுகள் பற்றி அவள் உள்ளத்தில் பெருமை- ஏன்? ஓரளவு கர்வமும் கூட- நிறைந்திருந்தது.

"நீங்கள் வேண்டுமானால் 'ஏதோ எங்கள் சக்தியனுசாரம்' என்று கூறிக் கொள்ளலாம். ஆனால் என் வரையில் நான் அதை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. தலைவர் கருத்தும் இது விஷயத்தில்

மாறுபட்டிருக்காது என்று நம்பு கிறேன்'' என்றான் முத்துசாமி.

''உண்மை. உங்கள் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன். சாதாரணம், சக்தியனுசாரம் என்பதே இப்படிப் பிரமாதமாய் இருந்தால் இனி சக்தி முழுவதையும் உபயோகித்தால் எப்படி இருக்கும் என்பதை என்னால் கற்பனை கூட செய்ய முடியவில்லை'' என்றார் தலைவர் புன் சிரிப்புடன்.

காரிலிருந்து கிளம்பிய மெல்லிய சிரிப்பொலி காற்றில் மிதந்தது. அதே சமயத்தில் எங்கிருந்தோ வந்த பூபாள ராகப் பாட்டின் ஒலி காதில் விழுந்தது. கார் ஒரு மூலை திரும்பி நேர் பாதையில் செல்ல ஆரம்பித்ததும் பாட்டு தெளிவாகக் கேட்டது.

''பொழுது புலர்ந்தது
யாம் செய் தவத்தால்
புன்மை யிருட்கணம்
போயின யாவும்''

என்ற அமரகவியின் பாடல் அந்த அமைதியான காலைப்பொழுதிலே கம்பீரமாகக் காற்றில் மிதந்து வந்தது! முத்துசாமியின் உடல் சிலிர்த்தது! அந்தப் பாட்டின் இனிமையிலும் உருக்கத்திலும் மெய் மறந்து லயித்து விட்டான் முத்துசாமி. சிவகுருநாத பிள்ளையும் பாட்டைத் தலையசைத்து வெகுவாக ரசிக்க ஆரம்பித்தார். பாட்டு வர வரத் தெளிவாயும் அழுத்தமாயும் கேட்டது. விசுக்கென்று கார் திரும்பி ஒரு மொட்டை மாடி வீட்டின் முன் நின்றது.

''இங்கு தான் உங்களுக்கு ஜாகை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இறங்கி உள்ளே செல்லலாமா?'' என்று காரின் வெளியே இறங்கி நின்று கொண்டிருந்த ஜெயாவின் குரல் கேட்டு சுய உணர்வு அடைந்து இருவரும் கீழே இறங்கினர்கள். அதற்குள் மற்ற கார்களில் இருந்தவர்களும் கீழே இறங்கி ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள். மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை அவர்களையெல்லாம் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார்.

தலைவர் முத்துசாமி முதலியவர்களைப் பார்த்து அங்கேயே வசதியாய்க் குளிக்கலாமென்றும், சிற்றுண்டிக்கும் அங்கேயே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் நினைவூட்டி விட்டு தான் சீக்கிரம் அங்கு திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றாள் ஜெயா.

விருந்தினரின் தேவையை அறிந்து உடனுக்குடன் நிறைவேற்றினர்கள் அதற்கென்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்த சிலர். குளிப்பு, சிற்றுண்டி இவற்றை முடித்துக் கொண்டு ஜெயாவின் வருகையை எதிர் பார்த்துத் தயாராக இருந்தார்கள் தலைவரும், முத்துசாமியும்! விருந்தினரை உபசரிக்கும் வகையில் மிராஸ்தார் செல்வ நாயகம் பிள்ளையின் குரல் அந்தக் கட்டிடமெங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது!

(தொடரும்)

★

ராக்காச்சி

(கே. வி. துரைசாமி ராஜா)

ராக்காச்சி என்பது முத்தாத் தாளுடைய இன்னொருபெயர். அந்த வீதியிலோ அல்லது அந்த ஊரிலோ, எந்த லம்பாடியும் சண்டைக்கு வந்து விட்டு லேசிலே உயிரோடு மீண்டுபோக விட்டு விடமாட்டாள்.

ஆனல் அப்படியும் மோசமில்லை. அவளுக்கு வம்புச் சண்டைக்குப் போகவும் தெரியாது. எட்டு ஊருக்கும் பிரசித்தியடைந்த, தொடை தட்டி ஒருத்தி, ஒரு சமயம் ராக்காச்சியிடம் கிடைத்துக் கொண்டு, காது அந்தும், தலைமயிரெல்லாம் ஒன்றுவிடாமல் மாய்க்கவும் பட்டு, மானம் பொறுக்க முடியாமல் ஊரை விட்டு ஓடியே போய் விட்டாள். அன்றைக்கிருந்து ஊராரெல்லோரும் ராக்காச்சி என்னும் பட்டப் பெயரை அவளுக்குப் பரம்பரை பாத்யதையாய் இருக்கும்படி ரெஜிஸ்டர் செய்து விட்டார்கள்.

ராக்காச்சி பக்குவமடைந்த பெண். பாராசூரமான உடல் கட்டு. ஒரு ஆடவன் செய்யும் அத்தனை வேலையையும், பெண் என்கிற ஞாபகம் இல்லாமல் செய்து விடுவாள். இன்னுங்கூட அவளிடம் சில குணங்களும் இருந்தன. அவைகளில் ஒன்று, சுண்டு விரலை அறுத்துக் கொண்டு இன்றெல்லாம் ஒரு துளி சுண்ணும்பு கேட்டுப் பார்த்தாலும், அதுதான் முடியாது அவளிடத்தில். அவளென்ன செய்வாள், பரம்பரை வித்துக்குள்ள குணம்தானே அவளுக்கும் இருக்கும்?

அமராவதி ஆத்தங் கரையிலே, தலைக்கொப்பிலே அவளுடைய தகப்பன் அங்கண கவுண்டனுக்கு அரைக்காணி மாந்தோப்பும், ஐந்தாறு காணி நஞ்சையும் உண்டு.

வைகாசி மாசம் ஆனவுடன் மாம்பழக் காலம் வந்துவிடும். மாந்தோப்பிலே் காவல் ராக்காச்சி தான். அவளுக்குப் படிக்கவோ கணக்கு வழக்கு எழுதவோ தெரியாது. சின்ன வயசிலே அவள் ஒரே ஒரு நாள் தான் பள்ளிக் கூடத்துக்குப் போனள். வாத்தியாருக்கு என்னமோ ஒரு காரணத்தினலே அவள் மீது பிரமாதமான கோபம் வந்து அவளைச் "சாணி பொறுக்குகிற கழுதை" என்று வைது விட்டாராம். அந்த நாளே ராக்காச்சியும் "வாத்தியாரைப் பாரு மூஞ்சியைப் பாரு" என்று தலையைப் பிலுக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்து விட்டாள்.

கணக்கு வழக்குத் தெரியாதுஎன்ருலுங்கூட, தன் சுய உத்திப்பிலே ஒவ்வொரு மரத்திலேயும் எத்தனை பிஞ்சு, எத்தனை காய் இருக்கிறது என்று கணக்கு வைத்துக் கொள்வதிலே, மஹா கெட்டிக்காரியாய் இருந்தாள்.

அவளுடைய காவலில், சின்னப் பிஞ்சைக்கூட, ஒரு குட்டி அணிலுங்கூடக் கோதிக் கொண்டு போக விட்டுவிட மாட்டாள். பொழுது விழுந்த வெகு நேரத்துக்குப் பின்னல்தான், எமம் சாமம் ஒன்றும் இல்லாமல், இருட்டுக்குள்ளே பிசாசுபோல வீட்

டுக்கு வந்து சேருவாள். மறுபடியும் காலை பொழுது பிறக்கப் பிறக்க, அவளை மாந்தோப்பிலே பார்க்கலாம். மாம்பழப் பருவந் தீருகிற வரைக்கும், அன்றாடும் சொல்லி வைத்ததுபோல இப்படியே நடந்து கொள்வாள்.

நல்ல உச்சி மத்தியானம் ஆனதும், ஆத்துக்குள்ளேயே எருமைகளை ஓட்டிக் கொண்டு வந்து, மாந்தோப்புக்கு முன்னால் உள்ள கெணத்துக்குள்ளே முடக்கி விட்டுத் தெம்பாங்கு பாட ஆரம்பித்து விடுவான் சின்னப்பன். அந்தப் பாட்டு ஆத்துக்கால் குளிர்ந்த காற்றிலே தவழ்ந்து கொண்டே போய் ராக்காச்சியின் காதுகளில் படும். ஒவ்வொரு நாளைக்கு ரஸனை இருப்பதாக பாவித்துக் கொண்டு வேலியோரத்தில் வந்து நின்று கொண்டு பாட்டில் மனதைக் கொடுப்பாள். ஒவ்வொரு நாளைக்கு உம் என்று முகத்தைத் தூக்கிக் கொண்டு மரத்தடியிலேயே விழுந்து கிடப்பாள்.

சின்னப்பன் சாமானியவன் அல்ல. அசந்தால் கையாடிவிட்டு மறைவதில் அவனைத் தோற்கடிக்க அந்த ஊரிலேயே ஆள் கிடையாது. இந்த விஷயத்திலே ராக்காச்சியுங் கூட ஏமாந்திருக்கிறாள். இப்படித்தான் ஒரு நாள், அவனுடைய தெம்மாங்கில் மனதைப் பறி கொடுத்து விட்டுப் பரவச நிலையிலே இருக்கும்பொழுது, வேலியோரமாய்க் காய்பிடித்துக் கிடந்த கிளி மூக்கு மரத்தை ஒரு கை பார்த்து விட்டான். அன்றைக்கிருந்துதான் சின்னப்பன் வந்ததும் ராக்காச்சி, அவன் தொலைந்து போகும் வரையில் ஜாக்கிரதையாகவே கண்களை அகலத் திறந்து வைத்த வண்ணமாய் இருப்பாள்.

தினம் தினம் இப்படி சின்னப்பன் வரும் பொழுதெல்லாம், அவள் தன்னுடைய கண்களை அகலத் திறந்து வைத்துக் கொண்டிருந்ததால்தானே என்னவோ, மாந்தோப்புக்குள் நுழைந்து திருட முடியாது என்று அவளுடைய திறந்த கண்களின் வழியாக மனதிற்குள் நுழைந்து அங்கே இருப்பதைத் திருட ஆரம்பித்து விட்டான், பொல்லாத திருட்டுப்பயல். ராக்காயின் மனதிற்குள்ளே சின்னப்பன் இருந்தான் என்றாலும், முதல் மீது இருந்த அக்கறை காரணமாக, ஒரு சின்னப் பிஞ்சைக்கூடத் தன் கைப்படச் சின்னப்பனுக்குக் கொடுக்க மனம் இல்லாதவளாய் இருந்தாள் அவள். ஆனால் அந்த நேரம் ஆனவுடன், அவன் ஆத்துக்குள்ளே வந்து சேரவில்லையென்றால், ராக்காச்சியின் மனம் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டு உலகமே வெறிச் சென்று தோன்றும்.

சின்னப்பனுடைய கண்ணான கண்ணெல்லாம், அந்த கிரேப் மரத்தின் மீதுதான். எப்படியாகிலும் அதிலிருந்து ஒரு பழத்தை அல்லது கடைசிக்கு ஒரு பூம் பிஞ்சையாவது பிடுங்கித் தின்றுவிட வேண்டும் என்பது அவனுடைய வெகு நாளத்திய ஆசை.

பிரமாதம், காசு போட்டால் கிடைக்காதா என்ன? அவ்வளவுக்கும் ஐவேஜு இல்லாதவனாய்ப் போய்விடவில்லை சின்னப்பன். காசு போட்டு வாங்கித் தின்னும் சரக்கைவிடத் திருடித் தின்னும் சரக்குக்குத்தான் ருசி அதிகம் என்பது அவன் சித்தாந்தம்.

கிரேப் மரத்திலே கை வைப்பது என்னவோ அவ்வளவு பிரமாதமில்லை. சின்னப்பன் அப்படிச்

செய்யத் தயங்கித் தயங்கி நிற்க இன்னொரு காரணமும் இருந்தது. ராக்காச்சியின் வீட்டுக்கும் அவனுடைய வீட்டுக்கும் கடந்த ஐந்தாறு வருஷமாய்ப் பேச்சே இல்லே.

சண்டைக்காரன் முதலேத் திருடுவானேன், அவன் இரண்டு வைய அதை வாங்கித் தலையிலே போட்டுக்கொண்டு மானத்தை விடுவானேன் என்றுதான், அவன் அந்தத் தொழிலே வாய்தாப் போட்டுக்கொண்டே வந்தான்.

மொட்டெல்லாம் பூவாக மலர்ந்தது. மலரெல்லாம் பிஞ்சாகி விட்டன. பிஞ்சு காயாகவும் மாறியாய் விட்டது. இனி பழுத்தால் பழந்தானே. அதற்கு எத்தனே நாள் ஆகிவிடப் போகிறது.

ஒரு நாள் சின்னப்பன், நாணலுக்குள் ஒழிந்து ஒழிந்து வந்து ராக்காச்சிக்குத் தெரியாமல் கிரேப் மரத்தின்மேல் ஏறி விட்டான். அவனுடைய பொல்லாத காலமோ என்னமோ, ஒரு வாதைத் தாவிப் பிடித்தானே இல்லேயோ, வாது சட சட என்று ஒடிந்து விழுந்து விட்டது.

சத்தத்தைக் கேட்டதும் ராமபாணம் வந்ததுபோல், மரத்தண்டை வந்தாள் ராக்காச்சி. சின்னப்பன் திரு திரு வென்று விழித்தான்.

அவளுக்குக் கோபம் சண்டாளமாக வந்து விட்டது. ''பாவி மகனே, பச்சை மரத்தை ஒடிச்ச பாவம் உன்னேயெ சும்மாவிடாது. நீ நெரு மூலமாப் போறையா இல்லேயா பாரு'' என்று அவனே வைதாள்.

''ஏ ராக்கா, உனக்கு இப்படிப் பேருவச்சது சரியான பேரா இருக்குது. குஞ்சுக் கோழியாட்டமா மேலே விழுகப் பாக்கறையே. அம்மா, தாயே உனக்குக் கொஞ்சம் புண்ணியமாய்ப் போகட்டும். என்னுடை சண்டைக்கு வராதே, நான் சண்டைக்கெல்லாம் ஆ ள ல் ல. ஆமா, உன்னே ஒண்ணு கேக்கறேன்; இப்ப என்னமோ பட்டாளத்துக்கு ஆள்புடிக்கருங்களாமே, நீ போனு என்ன; ஒடி சண்டை போடலாமல்ல'' என்ருன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டு.

ராக்காச்சிக்கு இன்னுங் கொஞ்சம் உஷ்ணம் அதிகரித்தது. ''உனக்குத்தான் உங்கொப்பன் சொரண்டித் திங்கராப்படி வைச்சிருக்கான்.

நான் காலமெல்லாம் ராசாத்தியாட்டமா காலுமேலே காலேப் போட்டுட்டுத் திம்பனே! நீ தான் போய்த் தொலேயனும் சண்டைக்கு'' என்று அவள் சொன்ன பொழுது, சிம்மாசனத்திலே கொலு ராணி போல அவள் பிடித்துக்காட்டிய பாவனேயைப் பார்த்ததும் வாய்மீது கையை வைத்துச் சிரித்தான் சின்னப்பன்.

''அப்படிச் சொல்லுசாமி அப்படிச் சொல்லு, ராசாத்தியா நீ! தலேயைப் பாக்கத்தான் இசுக்கிப் போட்ட பனங்கொட்டை யாட்டமா இருக்கு. ஏ ராக்கா, உங்கொப்பன் தலேக்கு இம்முட்டுத் தேங்காயெண்ணேயுங் கூடவா வாங்கித்தர மாட்டீங்கரான். இந்த லக்ஷணத்திலே இருக்குன்னு வேறே பீத்திக்கிறையே!''

''தேங்கா யெண்ணெய் வாங்கித் தரச் சொல்லி, உன்னேயுங் கேக்குலே உங்க அப்பனேயுங் கேக்குலே! ஏது வம்புச் சண்டைக்கு வந்திருக்கையா. இப்போ

வாதை ஒடிச்சதுக்கு சவாபு சொல்லு, இல்லையானு சும்மா விட மாட்டேன்; உங்கொப்பன் மகன் முதலுன்னு நெனச்சுட்டையா'' என்று அவன்மீதுபாய்ந்து, அவன் தலையிலே கட்டியிருந்த உருமால் துண்டைப் பிடுங்கிக் கையிலே வைத்துக் கொண்டாள்.

அவளுடைய செய்கையெல்லாம் அவனுக்குத் தமாஷாகவே இருந்தது. ''உன்னுடை ஆசை இவ்வளவுதானு. அந்தத் துண்டை மஹாராஜியா வச்சுக்கோ. எனக்கு அந்தா மரத்து உச்சாணியிலே தொங்குதுபாரு, அந்தப் பழத்தை மாத்திரம் பிடுங்கிக் கொடுத்துட்டாப் போதும். உம்பேரைச் சொல்லீட்டே இசுக்கிப் போட்டுப் போயிருவேன்'' என்று பேச்சுப் பருக்கிலே பேச்சிருக்க சிவ்வென்று ஒரு தாவுத் தாவி மரத்துமேலே ஏறினுன். ராக்காச்சி தன் பல மெல்லாஞ் சேர்த்து அவனைத் தாவிப் பிடித்திழுத்துக் கீழே போட்டாள். சின்னப்பன் தொப்பென்று பூமியிலே விழுந்து எழுந்து நின்று கொண்டு ''மூஞ்சியைப் பாரு மூஞ்சியை'' என்றுன்.

ராக்காச்சி கொல் என்று சிரித்துக்கொண்டு ''மூஞ்சிக்கு என்னப்பா எந்த வாக்கிலே கோணை. தண்டுவனைப் பாரு தண்டுவனை; பொட்டைச் சிறுக்கி தொடாதுக்கு முன்னே தொசக்குன்னு கீழே விழுகிறது''

''உம்மூஞ்சியிலே முன்னூறு தீக்குச்சி ஒரச்சு வைக்கோணும்— உங்கண்ணுக்குள்ளே கத்தாளை முள்ளை ஒரு நாம்பல் அள்ளிப் போடணும்'' என்று சொன்னவன் என்ன நினைத்தானே, வேதனை பொறுக்க மாட்டாதவன் போன்ற பாவனையில் முகத்தைச் சுளித்துக் கொண்டு, உடலை வளைத்து வளைத்துக் கையிலே தாங்கிக் கொண்டு ''ஐயோ, பாவி மகளே எனக்கு மூச்சுப் புடிச்சுக்கிச்சே'' என்று பூமியில் விழுந்தான்.

சின்னப்பனுக்கு உண்மையிலேயே மூச்சுப் பிடிக்க வில்லை. பாசாங்குதான் செய்தான். அவள் மனம் இரங்கிப் போவாள் என்பது அவனுடைய எண்ணம்.

மறுபடியும் அவன் கீழே விழுந்ததைப் பார்த்ததும் ராக்காச்சிக்கு திகில் பிடித்துக் கொண்டது. அவளுடைய கடின சித்தத்துக்கு அவனை அப்படியே விட்டு விட்டு ஓடிப் போய் விடலாம் என்று தான் தோன்றிற்று. வேறு யாராவது இருந்தால், உண்மையில் அவள் அப்படித்தான் செய்திருப்பாள். சின்னப்பன் அடிக்கடி அவளுடைய நெஞ்சத்துக்குப் பழக்கப் பட்டவனுனதனுலே, அவளால் அப்படிச் செய்ய முடியவில்லை. இரண்டு எட்டு எடுத்து வைத்தவள் மீண்டும் திரும்பி வந்து அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த சின்னப்பனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டாள்.

''ஐயோ ராக்கா, தண்ணித் தாகம் உசுரே போகும் போலிருக்கே, இந்தத் துண்டை ஆத்துக்குள்ளே போய் நனச்சிட்டு வாவே'' என்றுன். அவள் தனக்காக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்க அவனுக்கு உள்ளூர சந்தோஷம் பொங்கிக் கொண்டிருந்தது.

துண்டை எடுத்துக் கொண்டு ஓடினுளோ இல்லையோ, சின்னப்பன் எழுந்து மரத்துமேலே தாவினுன். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போன ராக்காச்சி

"அடே கைக்கார" என்று சொல்லிக் கொண்டு மரத்தருகில் ஓட்டோட்டமாக வந்தாள். சின்னப்பன் பாதி மரத்துக்கு மேலே போய்விட்டதனல், அவளுடைய கையிக்குக் கிடைக்கவில்லை.

முன்னைப் போலக் கடுகடுத்த குரலில் அல்லாமல் சாந்தமான குரலில் "சின்னப்பா, சின்னப்ப அதைப் பிடுங்கிருதே. இன்னும் வாக்காயி. அது பழுத்த பொறகு ஒனக்கே குடுக்கிறேன். கீழே இறங்கி வர்ரய்யா இல்லையா?" என்ருள்.

அவளுடைய பேச்சுக்கள் அவனுக்குக் குளிர்ந்துபோய் விட்டது. அதை அவனல் மீற முடியாமல் போகவே, கீழே இறங்கி வந்து விட்டான்.

"ராக்காச்சியவா ஏய்க்கப் பாக்கறே, உன்னலும் முடியாது உங்கப்பனலும் முடியாது. மூச்சுப் புடுச்சிருந்ததெல்லாம் எங்கே போச்சு"

"நிசம்மாச் சொல்றேங் கேளு, ரெண்டு மாம்பழமாச்சியுந் தின்னுத்தான் எனக்கு மறுக்காவும் மூச்சுப் புடிக்காது. இல்லாட்டிச் சித்த நேரத்துக்குள்ளே வந்து என்னைக் கொண்ணு போடப் போகுது பாரு" என்று மீண்டும் மூச்சுப் பிடிக்கப் போகின்றவன் பாவனையில் இறங்கினன்.

"இந்தப் பாழுஞ்சனியன் இங்கே வந்துட்டு என் உசுரைப் பிடுங்குதே" என்றவளாய் பக்கத்து மரத்தில் ஏறி ஐந்தாறு பழங்களைப் பிடுங்கிக் கொண்டு வந்து அவன் முன்னல் வைத்துத் "தின்னு தெரிச்சுப்போட்டுச் சீக்கிரமாத் தொலைஞ்சு போ. எங்கப்பன் வர நேரயாச்சு" என்ருள்.

"உங்கப்பன் என்னை என்ன பண்ணிப் போடப் போருன். உன்னைப் புடுச்சு எனக்குக் கட்டிக் குடுத்துருவான். அதுக்கு மேலே என்னதான் பண்ணிப் போடுவான், வரட்டுமே பார்க்கிறேன்"

சின்னப்பன் இந்தப் பேச்சைச் சொன்னவுடன். உம் மென்று தலையைத் தூக்கிக் கொண்டு "நீ நல்ல மூஞ்சியாப் பாத்து கட்டிக்கிறவன், நான் உங்கண்ணுக்குப் பிடிக்குமா" என்று சொன்னவள் கண்களில் 'பொல பொல' வென்று கண்ணீர் வடித்தாள்.

"சுத்த அசட்டுப் பொண்ணு இருக்கறையே. மாம்பழங் குடுத்த பொறகுங் கூடவா உன்னை எனக்குப் புடிக்காது" என்று அவன் சொல்லச் சொல்ல ராக்காவின் தகப்பன் தோப்புக்குள் வந்து விட்டான். அவனுடைய கண்களைப் பார்த்தவுடன் விபரீதமாக நினைத்துக் கொண்டு பக்கத்திலே கிடந்த மரக்கொம்பை முறித்துக் கொண்டு சின்னப்பனைச் சாத்தினன்.

சின்னப்பன் அதைப் பிடுங்கிக் கொண்டு அவனைச் சாத்தினன். இரண்டு பேரும் கை கலந்து கொஞ்ச நேரம் கட்டிப் புரண்டு கொண்டு சண்டை போட்டார்கள். ராக்காச்சிக்கு என்ன செய்வதென்றே தோன்ற வில்லை. ஆன மட்டும் பிரித்துவிட முயன்ருள். என்னதான் இருந்தாலும் பெண்தானே, அவளால் அந்தச் சண்டையை நிறுத்த முடியவில்லை. கையைப் பிசைந்து கொண்டு நின்று கொள்வதல்லாமல் வேறு ஒன்றும் அவளுக்குப் புலப்பட வில்லை.

அங்கண்ண கவுண்டன் பக்கத்திலே கிடந்த கல்லையெடுத்துச் சின்னப்பன் தலைக்கு நேரே எறிந்தான். ராக்காச்சி பருந்துப் பாய்ச்சல் போட்டு அந்தக் கல்லடியை தன் கையிலே ஏற்றுக் கொண்டாள். மறுபடியும் எறிந்த கல்தான் சின்னப்பன் மண்டையில் படவே, அடி பொறுக்க முடியாமல் பூமியில் சாய்ந்து விட்டான். அவனுடைய தலையிலே பொத்துக் கொண்டு வந்த ரத்தத்தைப் பிடிக்கப்போன ராக்காச்சியைத் தர தரவென்று இழுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான் அங்கண கவுண்டன்.

★

ராக்காச்சி இப்பொழுது எவ்வளவோ மாறிப்போய் இருந்தாள். தீபாவளிக்குத் தீபாவளி தான் அவளுடைய தலை மயிர் ஒரு சேரை எண்ணெய் காண்பது வழக்கம். அதுவெல்லாம் முந்தி. இப்பொழுதோ தினம் தினம் எண்ணெய் இட்டுக் கொண்டு ஒழுங்காகச் சீவி கோணைக் கொப்புப் போட்டுக் கொள்வாள். கொண்டைக் குள்ளே, நாலு மலர்களைப் பிடுங்கி லேசாகச் செவந்த முகத்திலே மஞ்சளைப் பூசி அதன்மேல் ஒரு கருஞ் சாந்துப் பொட்டை வைத்துக் கொண்டாளே யானல், அசல் உதய மதியத்தைத்தான் அவள் முகத்துக்கு ஒப்புக்கூற வேண்டும்.

இவ்வளவு அலங்காரமும் செய்து கொண்டுங்கூட, ஏனோ அவளுக்கு மனம் சப்பென்றே இருந்தது. சின்னப்பன் மட்டும் இருந்து அவள் சிங்காரித்துக் கொண்டு ஒரு தினுசாக மாந்தோப்புக்குப் போவதை ஒரு தடவையாகிலும் பார்த்தால்தான் அவளுக்குத் திருப்தியாகும்போல் இருந்தது.

சின்னப்பன் பட்டணத்திலே ஆஸ்பத்திரியில் கிடந்தான். அவன் போய் பத்து நாளைக்கு மேலும் ஆகிவிட்டது. கோர்ட்டு வியாஜியம் வேறே மும்முறமாய் நடக்கும் போல் இருந்தது. சின்னப்பன் சண்டைக்காரனயிற்றே. ஆஸ்பத்திரியில் இருந்து வந்து தன்னை எப்படிக் கட்டிக் கொள்ளப் போகிறன். மரத்து உச்சியிலே அவனுக்காகப் பழுத்துக் கொண்டிருக்கும் கொம்புப் பழத்தை எப்படித் தான் சேர்ப்பது, என்று நினைக்கும் பொழுதெல்லாம், ராக்காச்சிக்கு குபு குபு என்று அழுகை பொங்கிவிடும்.

அன்றுடும் காலையிலே ராக்காச்சியின் தாயார் தயிர்க்கூடையை எடுத்துத் தலையிலே வைத்துக் கொண்டு பட்டணத்துக்குப் போகிற வழக்கம் உண்டு. அன்று அதே தயிர்க்கூடையை ராக்காச்சியின் தலை சுமந்தது. சின்னப்பனைப் பார்க்கப் போகிறோம் என்ற பூரிப்பு அவளுக்குத் தனிச் சோபையைக்கொடுத்துக் கொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில் அவள் முகத்தை மட்டும் பார்த்திருந்தால், அப்பொழுதுதான் மலர்ந்து வைத்த தாமரைப் பூவுங்கூட ஈடாகாது.

வாயிதழ்களில் வெற்றிலைச் சிவப்பு, பார்ப்பவருடைய உயிரையே உருஞ்சி விடும்போல் இருந்தது. தயிரைக் கொண்டு போய் வாடிக்கைக் காரர்களுக் குங்கூட ஊற்றுமல் நேராக ஆஸ்பத்திரிக்கே போனுள். அங்கே நின்று கொண்டிருந்த டாக்டர்

ஐயாவைச் சின்னப்பனைப் பற்றி விசாரித்தாள்.

அவளுடைய கபடில்லாத முகத்தையும், பேச்சையுங் கண்ட டாக்டர் ஐயாவுக்கு, அவளிடம் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்று தோணியது "சின்னப்பன் உனக்கு என்ன ஆகணும், அவனை எதுக்காகப் பாக்கப் போறே?" என்ருர்.

"அத்தை மகன்தாஞ் சாமி. வெகுநாளாச்சேன்னு பாக்கப் போறேன்"

"அவனைக் கட்டிக்கப் போறையோ! என்னமோ, உன்னை உள்ளே விடறதுக்கே பயமா இருக்கே!"

"பின்னே நாங்கட்டிக்காமே, யாருசாமி கட்டிக்குவாங்க. நீங்களா கட்டிக்குவீங்க"

டாக்டருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. சின்னப்பன் இருக்கும் அறையைக் காட்டிவிட்டுப் போய் விட்டார்.

ராக்காச்சி சின்னப்பன் படுத்துக் கொண்டிருக்கும் அறைக்குள் நுழைந்தாளோ இல்லையோ, அவனுக்கு ஆச்சர்யம் பொறுக்க முடியாமல் கண்களை ஆயிரந்தடவை பிசைந்து விட்டுக் கொண்டான்.

"ராக்கா, எங்கே வந்து தொலைஞ்சே? உங்கொப்பன் உன்னைக் கொண்ணு போட மாட்டானு?"

"கொண்ணு போடட்டுமே, ஒரு தடவைக்குமேல் கொண்ணு போட மாட்டானே, இந்த உசுரு எப்ப இருந்தாலுஞ் சாகப் போறதுதானே?"

"இங்கே எனத்துக்கு வந்தே?"

"ஒன்னெப் பாக்கத்தான். ஒன்னெப் பாக்காமே என் கண்ணெல்லாம் இருட்டுக் கட்டிப் போச்சு. உனக்குக் காயமெல்லாம் ஆறிப்போச்சா; எப்ப ஊருக்கு வரப்போறே; இந்தா அன்னிக்கு நீ கேட்ட கொம்புப் பழம்" என்று மடியிலே ஒளித்து வைத்துக் கொண்டு வந்த மாம் பழத்தை எடுத்து அவன் கையிலே கொடுத்தாள். அது கிணுக்கென்று சின்னப்பன் கையை அழுத்திற்று. அதை அவன் கண்ணுலே ஒற்றிக் கொண்டு "ராக்கா நிசம்மா இதை நல்ல மனுசோட வா எனக்குக் குடுக்கறே?"

"ராக்கா பேச்சுக் குடுத்தாச் சுன்னு, தவற மாட்டாளாக்கும்" என்று அவள் இறுமாப்புடன் சொன்னதும், சின்னப்பனே நன்ருக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"ஏது ராக்கா, ரொம்ப சோக்கா சீவி சிங்காரிச்சுக் கிட்டிருக்கறையே. நிசம்மாச் சொல்றேன், உன்னைப் பாக்க சத்தியமா ரெண்டு கண்ணுப் பத்தவே பத்தாது; கொறஞ்சது ஆயிரங் கண்ணுச்சி இருந்தாத்தான் கட்டு படியாகும்போல் இருக்கு. ஏது அபாரமா தேவலோகத்துப் பொண் மாதிரி ஆயிட்டையே!"

"நீ தான் மூஞ்சியிலே முன்னூறு தீக்குச்சி ஒரச்சு வைக்கோணும்னு சொன்னையே, அதுக்கோசரந்தான். இப்பச் சொல்லு உங்கண்ணுக்குப் பிடிக்குதா இல்லையான்னு" என்று அவனுக்கு முன்னல் தலையைத் தூக்கி நெஞ்சை முன்னுக்கு உகைத்து நிமிர்ந்து நின்ருள்.

"சே, சே அப்பத் தோப்புலே பக்கரப்போ எனக்கு அப்படித்தான் தோணுச்சு. இப்போ உன் மூஞ்சியிலே முன்னூறு தீக்குச்

சிக்குப் பதிலா, முன்னூறு முத்தமே வைக்கலாம் போல் இருக்கே'' என்று அவன் சொன்னதும் ராக்காச்சிக்கு நாணம் வந்து ஒருவிதமாகத் திருப்பிக் கொண்டு அறையை விட்டு வெளியே ஓடியே வந்து விட்டாள்.

நாலைந்து மாதத்துக்குமேல் ஆகி விட்டது. அங்கண கவுண்டன் ஸ்யாஜ்ஜியம், ஐந்துகாணி நன்செய் பூராவும் கடனுக்குள்ளே மூழ்கிப் போகும் வரையில் நடந்தது. சின்னப்பனுடைய தகப்பனும், கையையுங் காலையும் உதறிக் கொள்ளும் நிலைமைக்கு வந்து விட்டான். இந்த நிலைமையில்தான் இரண்டு கக்ஷிக்காரர்களும் ராசியாகிப் போனார்கள். வன்மங்களையெல்லாம் காற்றிலே விட்டு விட்டு அங்கண கவுண்டனும், சின்னப்பனுடைய தகப்பன் செல்லப்ப கவுண்டனும் சம்மந்திக் கவுண்டர்களாக மாறிப் போனார்கள்.

சின்னப்பன் ராக்காச்சியுடன் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்ததில் இருந்து, அவன் அவளை 'முத்தா' என்றுதான் கூப்பிடுவான். என் அவன் மட்டுமென்ன, அந்த ஊரார் எல்லாருந்தான்.

ராக்கா தன் பூர்வீக ராச்சச குணங்களை யெல்லாம் விட்டு விட்டு சாந்த சொரூபி யாகிவிட்டாள், சின்னப்பனுடைய காதல் ஸ்பரிசம் ஏற்பட்ட நாள் தொட்டு.

பூர்ணமை நிலா ஜோராகக் காய்ந்து கொண்டிருந்தது. பொடக்காளியில் இருந்த மல்லிகைப் பந்தலில் கம்மென்று வாசம் சொக்கிக் கொண்டிருந்தது.

''முத்தா முத்தா — இங்கே ஓடியா'' என்றான் சின்னப்பன். பொடக்காளிக்கு மானைப்போல் துள்ளிக் குதித்துக் கொண்டுவந்த முத்தாள் ''என்ன சங்கதி?'' என்றாள்.

''பார்த்தையா, இந்த மல்லிகைப்பூ சொக்கறதுக்கும், இந்த நெலா வெளிச்சத்துக்கும், உன்னைப் பார்த்ததும், எனக்கு எப்படியோ இருக்கு?'' என்றான் ஒருவிதமாகக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு.

''எனக்கும்தான் உன்னைப் பார்த்ததும் எப்படியோ இருக்கு'' என்றாள் பதிலுக்கு முத்தாத்தாள்.

''ஆனால் கிட்டத்தான் கொஞ்சம் வாவே'' என்று சடக்கென்று எட்டி அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டான். அதற்குள் வீதியில் இருந்து ஒரு குரல் பொடக்காளிக்கு வந்தது ''அம்மா, மஹாராசி, கொலைக்குக் கொஞ்சம் கஞ்சி ஊத்துங்களே'' என்று.

''விடு — விடு நான் ஒரு சேரை கஞ்சியைக் கொண்டுபோய் ஊத்தீட்டு வந்தர்ரேன்'' என்று அவனுடைய பிடியில் இருந்து கைகளைப்பிடுங்கினாள். அவன் விடவில்லை.

''ஊ ஹூம் அதெல்லாம் முடியாது — பசிச்ச வயிறு பதறிக்கிட்டிருக்கு, அதுக்குக் கஞ்சியை ஊத்திப்பிட்டு வந்துதான் அப்பறம் உஞ் சொன்னபடி கேப்பேன்'' என்று கெட்டியாக பிகு பண்ணினாள் முத்தாத்தாள்.

வேறு ஒரு வழியும் இல்லாமல் அவளுடைய கைகளை விட்டு விட்டான் சின்னப்பன். ''இந்தப் பரதேசிப் பயல்களுக்கு வேளை, பொழுது ஒண்ணும் கெடையாது'' என்று அவன் வாய் முணுமுணுத்தது!

இன்ப நினைவு

[நடராசன்]

அருமை நண்ப,

பிரியா விடை பெற்றுப் பிரிந்து வந்தேன். நாளைக்குச் சரியாக மூன்று மாதமாகப் போகிறது. உன்னிடமிருந்து இது வரைக்கும் ஒரு கடிதமும் காண முடியவில்லை. என் மூன்று கடிதங்களுக்கு இது வரை பதில் எழுதாமலிருந்தாய் என்று தவறாக எண்ணி ஏங்கித் தவித்தேன்.

வசந்தச் சோலையில் உன்னுடன் கழித்த நாட்களை எண்ணினால் இன்று கூட இன்பச் சிலிர்ப்பு ஏற்படுகின்றது. ஆம்! அன்று முதல் நாள்...... மோகன நிலா வான வீதியில் பவனி வந்து கொண்டிருந்தது. பால் நிலவின் அமுதக் கிரணங்கள் பட்டு உலகம் அழகொழுக விளங்கிற்று. காற்றில் பக்கத்தில் இருந்த மரங்கள் ஆடி அசைந்து பாடிக் கொண்டிருந்தன. கண்கள் ரம்மியமான அழகுக் காட்சியில் ஈடுபட்டிருந்தன. புள்ளிசையும் உன் இசையும் காற்றில் கலந்து அமரகீதமாக என் செவிகளுக்கு விருந்தளித்தன. நன்றாக நினைவிருக்கின்றது. நீ வானகத்தைப் பார்த்து புன்முறுவல் பூத்தாய். என்னைப் பார்த்து அதே சமயம் பெருமூச்சு விட்டாய். ஏன் என்று கேட்டேன். "மன மகிழ்ச்சியின் நிறைவைக் கண்டு புன்முறுவல் செய்தேன். ஆனால் என் அகமகிழ்ச்சி உலகத்தில் என்றும் இருக்காது என்று எண்ணிப் பெருமூச்சு விட்டேன்" என்று சொன்ன போது உன் ஒளி வீசும் கலை உள்ளம் என் முகத்தில் மின்னித் தெறித்தோடியது. பிறகு நான் எந்தக் கற்பனை லோகத்திற்கோ சென்று கொண்டிருந்தேன். நீ பாடிக் கொண்டே இருந்தாய். நடுவில் நீ பேசும் போதெல்லாம் என் உணர்வை நான் முற்றிலும் இழந்து விட்டேன். பட்டு நிலா வொளியில் ஏகாந்தமாக வீட்டிற்குச் சென்றோம். இப்படி எத்தனையோ விதமாக நாட்கள் உருண்டன!

உங்கள் ஊருக்கு வருமுன் என் வாழ்க்கை இருளடைந்திருந்தது. உலகமே கசப்பாக இருந்தது. தனிமையை என்னால் தாள முடியவில்லை. வீட்டில் இருப்புக் கொள்ள முடியாமல் தவியாய்த் தவித்தேன். எங்க அப்பா ஸ்டேஷன் மாஸ்டராக உங்கள் ஊருக்கு வழக்கப்படி மாற்றப்பட்டிருந்தார். ஆம்! ஊர் புதிதாக இருந்தது. என் உள்ளமும் என்னையறியாமல் ஏதோ புதுமையடைந்து கொண்டிருந்தது. உன் சந்திப்பு இந்தச் சமயத்தில் தான் எனக்கு ஏற்பட்டது. உன் முதல் சந்திப்பு என்னை என்னவெல்லாமோ செய்து விட்டது. சிந்தனா சக்தி சீறி எழுந்தது; கற்பனை அலைகள் கரை புரண்டோடிற்று. மனப் புயலில் ஏற்பட்ட கோர அலைகள் முடிவற்று கொந்தளித்தன. எண்ணிப் பார்த்தால்......

கரை தெரியாத கடலில் சோர் விழுந்து நீந்தினேன். ஏற முடியாத பெருஞ் சிகரத்தில் ஏறிக்

களித்தேன். கரிய கானகத்தில் தனிமையாக நடந்தேன். கனல் வீசும் பாலை நிலத்தில் வழி தெரியாது மயங்கி மதி இழந்தேன்.

ஆம்! முடிவற்ற கடலில் ஒரு தோணி போல தோன்றினாய். பெரிய சிகரத்திலே இன்ப சுனை நீர் வீழ்ச்சி போல சிரித்தாய். உன் ஒளி வீசும் மலர் முகம் கண்டு மகிழ்வடைந்தேன். எரியும் இந்த எழை உள்ளத்தில் அறிவு நீரைத் தெளித்து வாழ்க்கைக்கு வழி காட்டினாய்.

"இக்கடிதம் உனக்கு கிடைக்குமா? என்ற சந்தேகத்துடன் தான் எழுதுகின்றேன்" என்ற பாழும் எண்ணத்துடன் இக்கடிதத்தை எழுதவில்லை; முழு நம்பிக்கையுடன் எழுதுகின்றேன். நேற்று நம்ம கண்ணனைப் பார்த்தேன். உன்னைப் பற்றித் தவறாக எண்ணியதை உணர்ந்தேன். உன் சரியான 'அட்ரஸ்' தெரிந்து கொண்டேன். பைத்தியக்காரன் மாதிரி எங்கெல்லாமோ சுற்றியலைந்தேனே! ஆம்! விதி நம்மைப் பிரிக்கப் பார்த்தது. இல்லாவிட்டால் நாங்கள் வந்த மறு வாரத்தில் நீங்கள் வேறு ஊருக்குத் திடீரென்று குடித்தனம் போயிருக்க முடியாது. நடு வழியில் வந்த செல்வம் நடுவழியிலேயே மறைந்து விட்டதா என்று என்னையே எத்தனை தரம் கேட்டுக் கொண்டேன்!

என் வாழ்க்கை வண்டி உல்லாசமாக ஓடுகின்றது. ஆம்! பெண்ணிடம் மட்டும் தனி இன்பம் காண்பதை விட நீ கற்றுக் கொடுத்த இயற்கையில் இனிய காட்சிகளுடன் பெண்ணின் இன்பம் பெரிது தான்!

காணக் கிடைக்காத அன்புக் களஞ்சியம் நீ! கிடைக்கப் பெறாத இன்பம் நீ! குழந்தை உள்ளத்துடன் என்னுடன் உணர்விழந்து சிரித்து விளையாடினாய். மோனப் பேச்சிலே நீ பேசியவற்றைக் காலம் உள்ள வரைக்கும் என்னால் மறக்க முடியுமா? சிதறாத சிந்தனைகளன்றோ அவை!

சொல்ல முடியாத துக்கம் குமுறிக் கொண்டு வருகின்றது, உன்னைப் போன்ற உள்ளங் கலந்த நண்பரை இழந்து விட்டால் என்று எண்ணும் போது. ஆனால் சொல்லவும் தெரியாத மகிழ்ச்சியால் என் இதயம் வெடித்து விடும் போல இருக்கின்றது இன்று.

நிலா வீசும் வேளையில் இக்கடிதத்தை எழுதி முடிக்கின்றேன். அள்ளிச் சொரியும் வெள்ளி நிலவில் உன்னுடன் பொழுது போவதே தெரியாமல் எவ்வளவு பேசியிருப்பேன்! அடுத்த வாரத்தில் அவசியம் சந்திக்கின்றேன்.

உன் அருமை

....

★

Printed at the Vasantha Mills Press, and Published by K. P. Sundaram, at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

பெண்கள் விரும்பும்
உயர்ந்த ஆபரணங்கள்
ஸ்வர்ண மாளிகை
பி.ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கடைத்தெரு - கோயமுத்தூர்

இன்றைய பட உலகின் இணையற்ற
வெற்றிச் சின்னம்!

ஜூபிடர் பிக்சர்ஸ்

இனி வரும் படங்களின் அமோக
வெற்றிக்கும் அடையாளம்!

கஞ்சன்....
அபிமன்யு.....
வேலைக்காரி.....
விப்ரநாராயணா....
கிருஷ்ணவிஜயம்